www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

**கொடுத்துச் சிவக்கும் கரம்!**

வாங்கிச் சிவந்தவுன் கரங்களுக்கு வந்ததனை
தாங்கிடுமோ இந்தத் தமிழுலகு? - ஓங்குபுகழ்
தொண்டாநீ ஏன்கொடுத்தாய்? துட்டுக் கொடுப்பதிலே
உண்டாமோ அழகேதும் உரை!

-ஈழமோகம்

இதழ் 61 டிச.08 - டிச. 21 1994 விலை7/=

## சமாதானப் பேச்சுக்கள்:

## புதிய அரசாங்கம்

# தடைகளைத் தாண்டி வருமா?

**எதிர்வரும் நத்தார் பண்டிகையை அடுத்து, புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானபேச்சுவார்த்தை மீண்டும் தொடரும் என்று அமைச்சரவை பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார். காமினி திசநாயக்க அவர்களின் படுகொலையுடன் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்ட இப்பேச்சுவார்த்தை திரும்பவும் எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற பத்திரிகையாளர்களின் கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதேவேளை யாழ்ப்பாணத்தில் மாவீரர் வார இறுதி நாள் அன்று புலிகளின் வானொலியில் உரையாற்றிய பிரபாகரன் அவர்களும் தாம் சமாதானத்தையே விரும்புவதாகவும், சந்திரிகா அரசாங்கம் நீட்டிய சமாதான கரத்தை தாம் பற்றிக் கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும், ஆயினும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் கடும் போக்காளர்கள் அமைதியை விரும்பவில்லை என்றும் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு தடையாக உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.**

நீண்ட இடைவெளிக்குப் பின் தொடங்கவிருக்கும் இவ்வுத்தேச பேச்சுவார்த்தையின் போது புலிகளின் நிலைப்பாடு எவ்வாறு அமையப் போகிறது என்பதை பிரபாகரனின் இப்பேச்சு வெளிப்படுத்தியுள்ளது. அவரது உரையின் போது, அரசாங்கம் தனது சமாதான முயற்சிகளில் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்குமானால், எமது இலட்சியமான, கௌரவமான அமைதியும் பாதுகாப்பும் சுதந்திரமும் கொண்ட ஒரு வாழ்க்கையை எமது மண்ணில் நாம் வாழ்வதற்கான, எமது தேசிய அபிலாசைகளை வழங்கக்கூடிய ஒரு தீர்வை அது முன்மொழிய வேண்டும். இத்தகைய ஒரு தீர்வே இந்த நாட்டில் நிரந்தரமான ஒரு தீர்வாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரனின் இந்தப் பேச்சு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு தீர்வுக்கு புலிகள் ஒத்துப்போக தயாராக உள்ளார்கள் என்பதையே காட்டுகின்றது.

புலிகள் குறிப்பிடுவது போல, ஏன் ஜனாதிபதி அவர்களே பல தடவைகளில் குறிப்பிட்டிருப்பது போல இராணுவ கடும் போக்காளர்கள் சமாதான முயற்சிகளை எதிர்க்கக் கூடும். ஆனால் அதிலிருந்து அரசாங்கம் தன்னை விடுவித்துக் கொண்டு பேச்சுவார்த்தையில் முழு மனதுடன் ஈடுபட வேண்டும்.

''அயல் நாடான இந்தியா கூட இப்பிரச்சினையில் முட்டுக்கட்டை போடும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடும். அண்மையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் இரண்டாவது எதிரியான பொட்டம்மான் தொடர்பான விசாரணைகளுக்காக, வந்தாறுமூலையைச் சேர்ந்த 76 வயதான பீதாம்பரம் சிவஞானம் என்ற விவாகப் பதிவாளர் ஒருவர் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இவ்வாறான விசாரணை ஒன்றிற்கு இன்னொரு நாட்டிற்கு இலங்கைப் பிரஜை ஒருவரை கையளிப்பது தொடர்பான எந்த ஒப்பந்தமும்

→2

## தொண்டாவுக்கு வந்த சோதனை!

தொண்டமானின் குடும்பத்துக்கு சொந்தமான திருச்சியிலும், சென்னையிலும் இருக்கும் எயர் லங்காவுக்கான ஏஜென்சியான ட்ரான்ஸ் லங்கா லிமிடெட், எயர் லங்காவுக்கு செலுத்த வேண்டியிருந்த தொகையான 45 மில்லியன் ரூபாயில் 35 மில்லியன் ரூபாயினை செலுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலும், திருச்சியிலும் இருக்கும் ட்ரான்ஸ் லங்கா லிமிடெட் 45 மில்லியன் ரூபாய்களை எயர் லங்காவுக்கு செலுத்த வேண்டியுள்ளதாகவும், மற்றைய எயர் லங்கா ஏஜென்சிகளுக்கு வழங்கப்படாத சலுகை தொண்டமானின் பேரனும் தற்போதைய பா.உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் இயக்குனராக இருக்கும் ட்ரான்ஸ் லங்காவுக்கு வழங்கப்பட்டு வந்ததும், அதில் இடம்பெற்ற முறைகேடுகளும் தொடர்பான விபரங்கள் ஏற்கனவே சரிநிகரில் வெளியானது வாசகர்கள் அறிந்ததே.

மீதிப் பணத்தை தவணை முறையில் செலுத்துவார்கள் எனவும் கூறப்படுகிறது. எப்படியிருந்தபோதும் தொண்டமானின் பேரனான ஆறுமுகத்தின் இந்நிறுவனத்துக்கு வழங்கப்படும் டிக்கட் விற்பனைக் கடன்வசதி மீதான இடைநிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என எயர் லங்கா தலைவர் ஆட்டிகல அறிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமான் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் (பாராளுமன்ற உறுப்பினரும் தனது பேரனுமான) ஆறுமுகத்தின் ''தனிப்பட்ட பிரச்சினை'' இது எனக் கூறியுள்ளார். ஆனால் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க ''இது ஒன்றும் தனிப்பட்ட பிரச்சினையாக அர்த்தப்படாது. இது பொது மக்களின் பணம். மக்களிடம் தெரியப்படுத்த வேண்டிய விடயம்'' எனக் கூறியுள்ளார். ஆறுமுகம் தொண்டமானிற்கு விசேட சலுகைகள் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டது தொண்டமானது செல்வாக்குகளினாலல்ல என்று கூறுவது சுத்தமான பொய்யுரை என்பது யாவரும் அறிந்ததே.

→2

## தமிழ் கடிதமா, போ!

''இந்த தமிழ்க் கடிதத்தை எங்களுக்கு வாசிக்கத் தெரியாது. ஒன்றில் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் திரும்பவும் எழுதிக் கொண்டு வாருங்கள்''

டிசம்பர் 6ம்திகதி காலை 9.30 மணியளவில் தகவல் திணைக்களத்துக்கு அலுவலக வேலையாக போன சரிநிகர் அலுவலர்க்கு தகவல் அதிகாரி திருமதி.குசும் என்பவரால் சொல்லப்பட்டதே மேலுள்ள வாசகங்கள்.

தகவல் திணைக்களத்தால் வழமையாக பத்திரிகைகளுக்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் கிடைக்காததையிட்டு, அவ் அறிவித்தல்களை தொடர்ந்து பெறுவதற்காக சரிநிகர் ஆசிரியரால் எழுதப்பட்டிருந்த கடிதமே அது.

தகவல் திணைக்களத்தின் இத்தனை கால செயற்பாடுகள் எல்லாம் சிங்களத்தை மையமாகக் கொண்டே இயங்கி வருகின்றன. குறிப்பாக தகவல் திணைக்களத்தின் வெளியீடுகள் சிங்கள, ஆங்கில மொழிகளிலேயே தொடர்ந்தும் வெளியிடப்பட்டு வருகின்றன. விதிவிலக்கான ஓரிரு தமிழ் வெளியீடுகளைத் தவிர.

நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பணிபுரியும் தகவல் திணைக்களத்தில் மொஹமட் எனப்படும் தகவல் உத்தயோகத்தர் ஒருவரும் திருமதி.செந்தில் எனப்படும் பிரதி ஒப்புநோக்காளர் (proof reader) ஒருவருமாக இருவர் மட்டுமே தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர்.

தகவல் திணைக்களத்தில் மட்டுமல்ல அரசாங்கத்தின் கீழ் இயங்கும் அனேகமான திணைக்களங்களில் தமிழர்கள் எதிர்நோக்கும் வழமையான பிரச்சினை இது.

தமிழ்மொழி மூலம், ஒரு தமிழ் பத்திரிகை, தனக்கான பிரசுரங்களை அனுப்புமாறு கோரும்போதே இது தான் நிலைமை என்றால், சாதாரண தமிழ் மக்கள் அரசாங்க அலுவலகங்களில் எப்படிப் பந்தாடப்படுவார்கள் என்பது வெளிப்படை.

கடிதம் விளங்கவில்லை. இதிலுள்ள விபரம் என்ன என்று கடிதம் கொண்டு சென்ற சரிநிகர் அலுவலகரிடம் கேட்கக் கூட பொறுமையற்ற இந்த மனோபாவம் இன்னும் எத்தனை காலம் தான் நீடிக்கப் போகிறது.'

சிறுபான்மையினங்களின் ஆதரவுடன் பதவிக்கு வந்த இந்த அரசாங்கமும் மேற்படி நிலைமை நீடிக்க அனுமதிக்கப் போகிறதா?

## கடவுள் வரம் கொடுத்தாலும்...

தீவுப்பகுதிகளுக்கென புதிதாக நியமனம் பெற்ற 24 கிராம சேவகர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் சிக்கிச் செய்வதறியாது விழிக்கிறார்கள். கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி வரங்கொடான் என்ற இக்கட்டான நிலை அவர்களுக்கு.

19.8.94ல் இவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் யாழ்குடாநாட்டில் புலிகளின் எல்லைக்குட்பட்டிருந்ததால் வெளியேற இவர்கள் அனுமதிக்கப்படவில்லையாம். இவர்களோடு நியமனக் கடிதங்கள் பெற்ற ஏனைய யாழ் இளைஞர் யுவதிகள் தத்தம் பகுதிகளில் கடமைகளை ஏற்றுக் கொண்டனர். எனினும் தீவுப்பகுதிக்கு நியமனம் பெற்ற மூன்று பெண்கள் உட்பட 24 பேரை புலிகள் அனுமதிக்கத் தயங்கியதால் ஒன்றரை மாதங்கள் வரை இவர்கள் குடாநாட்டை விட்டு வெளியேற முடியாதிருந்தனர்.

தொடர்ந்து புலிகளின் அலுவலகங்களில் ஏறி இறங்கி, கிடைத்திருக்கும் அரச உத்தியோகத்தை இழந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பனை முழுங்கி நடராஜாவும் த(மிழ்) வி(ழுங்கி) கூட்டணியும்!

"பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் (chairman) திரு.கே.நடராஜா அவர்களை திரும்பவும் அச்சபையின் தலைவராக்குவதற்கான முயற்சிகள் நடப்பதாக அறிகிறேன். த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் திரும்பவும் இப்பதவிக்கு வரத்துடிக்கும் திரு.நடராஜா அவர்கள் தொடர்பாக எனக்கு நிறையவே குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளன. இவரது கடந்த 13 வருட பதவிக்காலத்தைய ஊழல்கள் தொடர்பாக, அதிகார நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக கிடைத்துள்ள தகவல்கள் அடிப்படையில் இவர் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு எந்த விசாரணையும் இன்றி இவ்வூழல் பேர்வழி, த.வி.கூவினரின் அனுசரணை காரணமாக மீளவும் பதவியில் அமர்த்தப்பட்டால், நான் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவேன்."

இவ்வாறு கூறும் நவம்பர் 24ம் திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றை இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். அவர் தனது கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டியிருப்பதாவது.

1. இவர், அபிவிருத்திச்சபை ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதிக்கான தொகையை மத்திய வங்கிக்கு செலுத்தாமல் இருந்து வந்துள்ளார். (இது சட்ட விரோதமான ஒன்றாகும்) கிட்டத்தட்ட 7 லட்ச ரூபாய் வரையான தொகை இன்றுவரை நிலுவையாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதி சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்று அம்பாந்தோட்டை தொழில் நீதிமன்றத்தில் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிறது. யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள், இப்பிரச்சினை காரணமாக மனமுடைந்து வேலையிலிருந்து இராஜினாமா செய்துள்ளனர்.

2. 1992 - 1993 கால இடைவெளியிலான முக்கிய அலுவலக ஆவணங்கள் காணமல் போயுள்ளன.

3. காசோலைகளை அத்தாட்சிப்படுத்தல், அனுமதித்தல், மாற்றுதற்கான அங்கீகாரம் அளித்தல் ஆகிய எல்லாப் பொறுப்புக்களையம் அவர் தனது கையிலேயே வைத்திருக்கிறார்.

4. மார்ச் 1991இல் யாழ் மாவட்ட ஊழியர்களுக்கான சம்பளப்பணம் வழங்குவதற்காக ரூபா மூன்று லட்சம் கொழும்பிலுள்ள வங்கியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ரூபா இரண்டு லட்சம் மட்டுமே யாழ் அரசாங்க அதிபருடாக அனுப்பப்பட்டுள்ளது. மிகுதிப்பணம் இன்றுவரை யாழ்ப்பாணம் அனுப்பப்படவில்லை.

5. பிரதம கணக்காய்வாளர் (Auditor General)திணைக்களத்தினால் செய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கை இன்று வரை சபைக்கு சமர்ப்பிக்கப்படாமல் முடக்கப்பட்டுள்ளது.

இது தவிர பனை அபிவிருத்திச் சபையை சேர்ந்த உத்தியோகத்தர்கள் இவரது ஊழல்களை பட்டியலிட்டு பிரதமர், பொது சன தொடர்பு அலுவல் அமைச்சர் ஆகியோருக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளனர். இக்கடிதங்கள் திரு.நடராஜா அவர்களது 13 வருட கால ஊழல் சாதனைகளை விரிவாக அம்பலப்படுத்துகின்றன. அக்கடிதங்களிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.

1. இவர் கடந்த 13 வருடகாலமாக தலைவராக இருந்த போதும், சபையின் தலைமையகம் யாழ்ப்பாணத்திலேயே இருந்த போதும் 1985க்கு பின் இவர் ஒரு தடவையேனும் யாழ் சென்றதில்லை.(யாழ் அரசாங்க அதிபர் ஒவ்வொரு மாதமும் யாழ் சென்று வருகின்றார்.)

2. 1986க்கு பின் சபைக்கு ஒரு பொது முகாமையாளர் இல்லை. 1990 இல் ஆய்வு உத்தியோகத்தர் பதில் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். ஆயினும் 1993களிலிருந்து அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

3. தலைவருக்கான செயலாளர் பதவிக்கு எத்தகைய நேர்முகப் பரீட்சை ஒழுங்கு விதிகளும் இன்றி, தலைவரின் உறவினர் என்பதற்காகவே ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 3 ஆண்டு கால சபைக்கூட்டங்கள் எதற்கும் அவர் சமூகமளிக்கவில்லை. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இது தொடர்பாக அமைச்சு செயலாளரோ சபை உறுப்பினர்களோ எந்தக் கூட்டத்திலும் கேள்வி எழுப்பியதில்லை என்பதுதான்.

4. சபையின் ஊழியரல்லாதவரான, தலைவரின் மகனே சபைக்கான கொள்வனவுகளை செய்கிறார். பொய்யான பற்றுச்சீட்டுக்கள் இவரால் சமர்ப்பிக்கப்படுகின்றன. 2 1/2லட்சத்திற்குமதிகமான இத்தகைய போலி சீட்டுக்கள் அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான காசோலைகள் தலைவராலேயே அனுமதிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப் பட்டுமுள்ளது. இதற்கான வவுச்சரை தயாரிக்குமாறு லிகிதர் இந்திரா என்பவர் தலைவரால் மிரட்டப்பட்டுள்ளதுடன், இதற்கான பணத்தில் ஒரு பகுதியும் அவரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. ஆனால் இன்றுவரை இது தொடர்பாக தலைமை கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படவில்லை.

✱ ஒரு லிகிதரை உள்ளக கணக்காய்வாளராக அன்றைய அமைச்சுக்கு தவறான தகவல்களை கொடுத்து நியமித்துள்ளார். இவரே இப்போது சகல (தலைவரது) வேலைகளையும் செய்கிறார். ஆயினும் இவரது உள்ளக கணக்காய்வு அறிக்கை ஒருபோதும் தலைமை கணக்காய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதில்லை.

✱ சபைக்கும், கற்பகம் நிறுவனத்தினருக்கும் பொருள் விநியோக ஒப்பந்தக்காரராக தலைவரின் நாலாவது மகனே இருக்கிறார். மூன்றாவது மகன் கொள்வனவு உத்தியோகத்தராகவும், முதலாவது மகன் சபையின் சகல கட்டட வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்பவராகவும், இரண்டாவது மகன் சபையின் பொருட்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்பவராகவும் உள்ளார்.

இவ்வாறு பல குற்றச்சாட்டுக்களை அக்கடிதங்கள் தெரிவிக்கின்றன. ஊழலை பாதுகாக்க த.வி.கூ. துணை போவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் அதை எதிர்ப்பதாகக் கூறும் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது.

வ.ரவி

## சமாதான...

இலங்கையிடம் இல்லாத போது இவ்வாறு இவர் அனுப்பப்பட்டது எப்படி என்று அரசியல் அவதானிகள் கேள்வியெழுப்பியுள்ளனர். இத்தகைய ஒரு நடவடிக்கை புலிகளுக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இவ்விடத்தில், அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திரு.லஷ்மன் கதிர்காமர் அவர்கள் பத்திரிகையாளர் ஒருவரது கேள்விக்கு அளித்த பதில், "புலிகள் எனது பயணம் குறித்து எத்தகைய பீதியும் கொள்ளத் தேவையில்லை, அங்கே நான் எத்தகைய ஒப்பந்தங்களும் செய்யப் போவதில்லை" என்று தெரிவித்துள்ளதும் மனங்கொள்ளத்தக்கது. கதிர்காமரின் இத்தகையதொரு பேச்சு, இந்தியா இவ்விடத்தில் எவ்வாறு நடந்து கொள்ளுமோ என்பது குறித்து அரசு மட்டத்திலும் ஒரு வகை அச்சம் நிலவுவதையே காட்டுகிறது, என்றும் கருதப்படுகின்றது. புலிகள் தொடர்பாக இந்தியா இலங்கையை பிரபாகரனை விசாரணைக்கு இந்தியாவுக்கு அனுப்புவது போன்ற ஏதாவது ஒரு ஒப்பந்தத்திற்கு வலியுறுத்தக்கூடும் என்ற நியாயமான சந்தேகம் அரசதரப்பில் இருப்பதில் ஆச்சரியமில்லை.

இது தவிர இந்தியா தற்போது ஆந்திராவில் நடைபெற்று வரும் நக்சலைட்டுக்களின் நடவடிக்கைகட்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக பிரச்சாரம் செய்வதும், காமினி கொலையை புலிகளே செய்தார்கள் என்று இந்திய பத்திரிகைகளும் அதிகாரிகளும் கருத்து தெரிவிப்பதும், எதிர்வரும் சார்க் மகாநாட்டின் போது காந்தி கொலை தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படுவதில் இலங்கையின் ஒத்துழைப்பு கோரப்பட வேண்டுமென இந்திய ஆளுங் காங்கிரஸ் கட்சியினர் இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தி வருவதும், இலங்கையின் சமாதான பேச்சுகட்கு சாதகமான அம்சங்களாக இல்லையென அரசியல் அவதானிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதைத்தவிர இலங்கையின் சிங்கள, ஆங்கில தினசரிகளும் அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கு ஆதரவு தரும் வகையில் செயற்படுவதாக இல்லை என்பது இன்னொரு பாதகமான அம்சமாக உள்ளது. அண்மையில் ஒரு ஆங்கிலத் தினசரி, 'புலிப் பயங்கரவாதிகளுக்கு ஒரு அரசுக்குரிய அந்தஸ்து எப்போது கிடைத்தது' என்றும் 'புலிகள் தனிநாடு கோருவதானால், ஏன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் எனவும் எழுதியுள்ளது'.

ஆக, அரசாங்கம் இப்பொழுது பலத்த சவால் ஒன்றை எதிர்நோக்குகின்றது. இச்சவால்களை வெற்றி கொண்டு சமாதானத்தை வென்றெடுக்க அரசாங்கம் உறுதியுடன் இருக்குமானால், அது இப்பிரச்சினை தொடர்பான தனது நிலைப்பாட்டை தெளிவாக உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பிரச்சினைகளை வெறும் 'புலிப்பிரச்சினை' யாகவோ, அல்லது மொழிப் பிரச்சினையாகவோ பார்த்து திரும்பவும் ஏமாந்து போகாதிருக்க நாட்டின் தேசிய இனப்பிரச்சினை இது என்ற பொறுப்புணர்வுடன் அதை அணுகுவது அவசியம். இப்போது எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொறுப்பு அரசாங்கத்தின் துணிச்சலில்தான் தங்கியுள்ளது!

## கைமாறிய நிவாரண அட்டைகள்!

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காய் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பணம் ஜமாலியாப் பிரதேச ஐ.தே.க. நகரசபை உறுப்பினரின் கையாடலுக்குட்படுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

6000 ரூபா பெறுமதியான நிவாரண அட்டைகள் அவ்வப்பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இப்பிரதேசத்தில் மாத்திரம் கிராமசபை உத்தியோகத்தருக்கு வந்த அந்த அட்டைகள் நகரசபை உறுப்பினரான நூர்முஹம்மட் அவர்களின் கைக்குப் போயுள்ளது. அவரே தனக்கு விரும்பியவர்களுக்கு அதனை வழங்குவதாகவும், ஏனையவர்கள் வரும்போது "உங்கள் பெயருக்கு இன்னும் வரவில்லை, வேண்டுமென்றால் வேறொரு ஆளுக்கு வந்ததை மாற்றித் தருகிறேன். அவருக்கு 2000 ரூபாவும் இன்னொருவருக்கு 2000 ரூபாவும் கொடுத்துவிட்டு மீதியை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி தனது கைவரிசையைக் காட்டுவதாகவும் அப்பிரதேச மக்கள் கூறுகிறார்கள்.

இந் நகரசபை உறுப்பினர் மீது நிறைய மோசடி, ஊழல் குற்றச் சாட்டுக்கள் இருப்பதாகவும் உயரதிகாரிகளை கைக்குள் போட்டு வைத்திருப்பதால் இவரை யாரும் கண்டு கொள்வதில்லையெனவும் தெரிய வருகிறது. கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்ற இந்த நிவாரண அட்டைகள் நகர சபை உறுப்பினரின் கைக்கு எவ்வாறு மாறியது என்று மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

## கடவுள்...

விடககூடிய பரிதாப நிலையை எடுத்துக்கூறி, அவர்களை மனமிரங்க வைத்து அனுமதி பெற்று திருகோணமலைக்கு கப்பலேறியவர்களுக்கு அங்கும் ஒரு அதிர்ச்சி.

7.10.94இல் திருகோணமலை வந்த இப்பரிதாபப் பிறவிகளை தீவுப்பகுதி செல்ல ஈ.பி.டி.பி அனுமதிக்கிறார்களில்லையாம். கப்பல் போக்கு வரத்து இவர்கள் வசம் இருப்பதால் அனுமதி தரமாட்டோம் என்று மறுக்கிறார்களாம். சொந்த ஊரை விட்டு வந்து கடையில் சாப்பிட்டு லொட்ஜில் படுத்துறங்கும் தங்களது கஷ்டத்தை எடுத்துக் கூறியும் கப்பல் டிக்கட் தர மறுப்பதையிட்டு மனமுடைந்து போயிருக்கிறார்கள் இக்கிராம சேவகர்கள்.

மாகாண அமைச்சுடன் தொடர்பு கொண்ட போது தீவுப்பகுதிக்குப் போய் நியமனங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பதில் கிடைத்ததாம்.

"எங்களை புலிகளின் கையாட்கள் என்று நினைத்துத் தான் அனுமதி மறுக்கிறார்களோ?" என்று ஆதங்கப்பட்டார் ஒரு இளைஞர்

இதுபற்றி திருகோணமலை வந்த ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இவர்கள் முறையிட்ட போது "தீவுப் பகுதியில் கிராம சேவகர்கள் நியமிக்கப்பட்டு கடமையையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நீங்கள் ஏன் அங்கு போக வேண்டும்? அங்குள்ள கிராம சேவகர்கள் உங்களிடம் தங்கள் பொறுப்புகளை ஒப்படைப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? என்று கேட்டதோடு எதற்கும் பொறுத்திருந்து பாருங்கள்" என்றும் கூறினாராம்.

திருகோணமலை லொட்ஜ் ஒன்றில் இவர்கள் இப்போது 'பொறுத்துக்' கொண்டிருக்கிறார்கள்.

– விவேகி

## தொண்டாவுக்கு..

இது இவ்வாறிருக்க அமைச்சர் தொண்டமான் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரும் கோரிக்கை ஒன்றை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முக்கிய ஐ.தே.க.உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ளனர். தொண்டமானது எம்.பிப் பதவி ஐ.தே.கவின் தேசியப் பட்டியலால் கிடைத்தது என்பது தெரிந்ததே.

எவ்வாறாயினும், ஐ.தே.க. எந்த நடவடிக்கையும் எடுப்பதை இட்டு தனக்கு ஆட்சேபனை இல்லை என தொண்டமான் அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பாலம்

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட வேகத்திலேயே நின்றுவிடவும் கூடும் என்று இதற்கு முதல் எழுதிய இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். இப்போது பார்க்கையில் அது ஓரளவிற்கு உண்மையாகிவிட்டது போலவே தோன்றுகிறது. நான் இவ்வாறு கூறுவதற்கு காரணம், இப்பேச்சுவார்த்தையின் 'வேகம்' காமினி திசநாயக்காவின் படுகொலைக்குப் பின்னர் எழுவதும் தாழ்வதாகவும் இருப்பதேயாகும்.

அரசாங்கம் சமாதானப் பேச்சுகளை நடாத்த வேண்டுமென கூறுகின்ற போதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக திருப்திப்படாதவர்களாக இருப்பதாகவே அவர்களது அறிக்கைகள் காட்டுகின்றன.

இதற்கு இரண்டு பிரதான காரணங்களை நாம் ஊகிக்கலாம்.
1. அரசாங்கத்திற்கும் த.ஈ.வி.புலியினருக்குமிடையிலான நம்பிக்கை இன்னமும் பலமுடையாததாக இருக்கலாம்.
2. த.ஈ.வி.புலிகள் தாம் பேச்சுவார்த்தை தெர்டர்பாக திருப்திப்படாதவர்களாக காட்டிக் கொள்வதை ஒரு தந்திரோபாய நடவடிக்கையாக கைக்கொள்ளலாம்; அல்லது அவர்கள் ஒரு இராணுவ பலத்தில் நம்பிக்கை கொண்ட இயக்கமாக இருப்பதால் அரசியல் ரீதியில் பக்குவமடையாதவர்களாக இருக்கலாம்!

இன்று பேச்சுவார்த்தை முயற்சிகள் இருதரப்பினர் பக்கத்திலும் தேக்கமுற்று இருப்பினும், இவை ஆரம்பிக்கப்பட்ட போது இருதரப்பாரும் பேச்சுவார்த்தையை சாதகமாகவே நோக்கினர். பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசாங்கம், த.ஈ.வி.புலிகளை வடபகுதி தமிழ் மக்களின் பிரதான பிரதிநிதியாக ஏற்றுக்கொள்வதாகக் கூறியது: அது உண்மையிலேயே நல்லதொரு முன்னெடுப்பாகும். அரசாங்கத்திற்கு தனிநாடு தொடர்பாக பேச முடியாது என்பதால், தாம் தனிநாடு சம்பந்தமாக அரசுடனான பேச்சுவார்த்தைகளின் போது பேசப்போவதில்லை என த.ஈ.வி.புலிகள் அறிவித்தனர். முன்னையதைப் போலவே இதுவும் ஒரு நல்ல முன்னெடுப்பாகும். இவ்வாறு நல்ல சகுனங்களுடன் ஆரம்பித்த பேச்சுவார்த்தை காமினி திசநாயக்காவின் படுகொலையுடன் தேக்கமுற்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்த போதும், நான்கு பிரதான காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தையை கையாண்ட விதம்.
2. த.ஈ.வி.புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட விதம்.
3. கொழும்பை மையமாக கொண்ட வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் இப்பேச்சுவார்த்தை தொடர்பான செய்திகளை வெளியிட்ட முறை. (வடபகுதி வெகுஜன தொடர்பு சாதனங்கள் பற்றி எனக்கு தெரியாததால், கொழும்பு வெகுஜன தொடர்பு சாதனங்கள் பற்றி மட்டும் குறிப்பிடுகிறேன்.)
4. இலங்கை மக்கள் பேச்சுவார்த்தை தொடர்பாக எதிர்பார்த்த விடயங்கள்.

இந்த நான்கு விடயங்கள் தொடர்பாக சற்று விபரமாக நோக்குவோம்:





## ஒரு சிறுகதையாகப் போய்விடக்கூடாத சமாதானப் பேச்சுவார்த்தை

நிஷாந்த

### அரசாங்கம்

ஒரு நாட்டின் அரசாங்கம் என்பது அந்தநாட்டின் அனைத்து (இன, மத, சாதியை சேர்ந்த) மக்களையும் உரியமுறையில் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். அவ்வாறான உரிய பிரதிநிதித்துவம் ஒரு மக்கட்பிரிவுக்கு இல்லாத போது, ஜனநாயகக் கட்டமைப்புக்கு வெளியே போய் இம்மக்கட் பிரிவு தமது உரிமைகட்காக போராடுவது உலகின் எந்தவொரு நாட்டிற்கும் பொதுவானதாகும். இம்முறையிலேயே இலங்கையின் ஜனநாயக கட்டமைப்புக்கு வெளியே சென்ற ஒரு நபரையோ அல்லது குழுவையோ, அல்லது சமூகப் பிரிவையோ ஜனநாயக வழி முறையுள் உள்வாங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கே உரியதாகும். இவ்வாறு பார்க்கும் போது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம், தமிழ், முஸ்லீம், பறங்கிய மக்களது அடிப்படைப் பிரச்சினைகட்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். ஆயினும் அரசாங்கத்தின் இவ்வளவு கால சமாதான முயற்சிகளில், அகதிகள் புனர்வாழ்வு, புனர் நிர்மாணம், மின்சாரம் போன்ற அரசியல் தன்மையற்ற விடயங்களிற்கே முன்னுரிமை அளித்தது.

ஆனால், அரசாங்கம் முதலில் செய்ய வேண்டியதோ, இனப்பிரச்சினைக்கான தமது அரசியற் தீர்வை முன்வைப்பதாகும். ஆகக் குறைந்தது இத்தீர்வுக்கு முன்னோடியான சில நெறிப்படுத்தும் திட்டங்களையாவது (Guidelines) தெரிவிக்க வேண்டும். நான் இவ்வாறு அழுத்திக் கூறுவதற்கு காரணம் உண்டு. அதாவது, மிகச் சொற்ப அளவுக்காவது அரசியல் பரவலாக்கத்தை அறிமுகப்படுத்திய மாகாண சபை முறையை அது அறிமுகப்படுத்தப்பட்ட போது இன்றைய அரசின் பிரதமரதும் ஜனாதிபதியினதும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்தது என்பதாலாகும். இன்றைய அரசாங்கம் பொ.ஐ.மு.அரசாங்கம் என்று கூறப்பட்டாலும் அரசுமீதான கண்ணுக்குப் புலனாகாத செல்வாக்கு ஸ்ரீ.ல.சு.கவிடமே உள்ளது. இந்த ஸ்ரீ.ல.சு.கட்சியின், மாகாண சபை எதிர்ப்புப் போராட்டத்தில் சந்திரிகா குமாரணதுங்க அன்று பங்கு பற்றியிருக்காவிட்டாலும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இருந்ததை மறந்துவிட முடியாது. இதனால்தான் பொ.ஐ.முவின் அரசியல் தீர்வு என்னவெனக் கேட்க வேண்டியுள்ளது.

### த.ஈ.வி.புலிகள்:

த.ஈ.வி.புலிகள் அடிப்படையாக கோருவது தமது (தமிழ்) மக்களின் உரிமைகளையாகும். அப்படியானால், அவர்களின் கடமையும் பொறுப்பும் என்ன? இந்த உரிமைகட்காக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகும். லண்டனை மையமாக கொண்ட ஐ.ஆர்.ஏ இயக்கத்தின் நடவடிக்கைகளை, இங்கிலாந்தின் மீதான இதன் அழுத்தங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

(நான் ஏற்கனவே கூறியது போல) த.ஈ.வி.பு. இயக்கம் இவ்வாறான அழுத்தம் எதனையும் அரசாங்கத்திற்கு கொடுப்பதில்லை. த.ஈ.வி.புலிகள் தாம் ஜனநாயக கட்டமைவுக்கு வெளியே போய் நின்று அரசியல் வன்முறைகளில் ஈடுபட்டாலும் கூட, தமக்கு தேவையான அரசியல் தீர்வு எதுவென கூறவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. வெறுமனே வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி என்று கூறுவதால் பயனில்லை. மாறாக இதனால் அவர்கள் அர்த்தப்படுத்துவது, அல்லது இவ்வாறு அவர்கள் கோருவது எதை என்று தெளிவுபடுத்த வேண்டும். (இவ்விடத்தில் கொழும்பை மையமாக கொண்டு இயங்கும் தமிழ் குழுக்கள் முன்வைத்த 4 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாகவும் இவர்கள் இன்றுவரை எதுவும் தெரிவிக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.)

இவ்வாறு கூறினால்தான் தென்பகுதியிலுள்ள முற்போக்கு சிங்கள சக்திகள் அரசாங்கம் மீது அழுத்தத்தை பிரயோகிக்கவும், தேவையான தீர்வை நோக்கி முன் செல்லவும் முடியும்.

### கொழும்பு வெகுஜன தொடர்பு சாதனங்கள்

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின் கொழும்பு தொடர்பு சாதனங்கள் நடந்து கொண்ட விதம் மிகவும் துரதிர்ஷ்டம் மிக்கதாகும். த.ஈ.வி.புலிகளுக்கெதிரான உணர்வலைகளுடன் (இத் தொடர்பு சாதனங்களை சேர்ந்தவர்கள்) வாழ்வதே இத்தகைய தொலை நோக்கற்ற நடைமுறைக்கு காரணமாகும். சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் பிரதான சிங்கள (Mainstreem) பத்திரிகையொன்றிலும் சிறு அளவிலமைந்த (Tabloid) சிங்கள பத்திரிகையொன்றிலும் வெளி வந்த இரு செய்திகளை உதாரணத்திற்கு இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 02.12.1994 திகதிய 'திவயின' பத்திரிகையில் வெளிவந்த இரு த.ஈ.வி.புலிகள் எதிர்ப்பு செய்திகளுடன் சேர்த்து அதே பக்கத்தில் பிரபாகரன் 'தமக்கு தேவையானது சமஷ்டி ஆட்சியே' என்று கூறும் செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது. (சமஷ்டி என்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதுபற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.) சமாதானத்தை விரும்பும் ஒரு பத்திரிகையானால் பிரதான செய்தியாக மேலே குறிப்பிட்ட பிரபாகரனின் செய்தியை அப்பத்திரிகை பிரசுரித்திருக்க வேண்டும் முழு விபரங்களுடன் - என்று நான் நினைக்கிறேன்.

இவ்வாறே 'யுக்திய' பத்திரிகையின் தலைப்புச் செய்தி 'சந்திரிகாவின் சமாதான முயற்சி குறித்து புலிகள் நடுக்கம்!' (செப்.18,1994) என்றும் அதன் உள்ளடக்கம் த.ஈ.வி.புலிகள் மூன்று குழுக்களாக உடைந்துள்ளனர் என்றும் அமைந்திருந்தது. இச்செய்தியை வாசிக்கும் ஒரு சிங்கள வாசகர் விளங்கிக் கொள்வது, பெரும்பாலான த.ஈ.வி.புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்பதையே.

இன்று, இலங்கை எதிர்நோக்கும் இனப்பிரச்சினையை தீர்க்க, பத்திரிகைகள் மிகுந்த பொறுப்புணர்வுடனும் தொலை நோக்குடனும் செயற்பட வேண்டும். அல்லது இரு வேறு கூறுகளாக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகளை கொண்ட இரு அரசுகள் ஸ்தாபிக்கப்படுதலை தவிர்க்கமுடியாமல் போகலாம். அரசையும் த.ஈ.வி.புலிகளையும் தீர்வொன்றை நோக்கி தள்ளுவதே பத்திரிகையாளர்களது கடமையாகும்.

### இலங்கை மக்கள்

இலங்கையில் வாழும் மக்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்தும் அவற்றின் ஒழுக்கவியல் நன்நடத்தை மீது நம்பிக்கை கொண்டும் ஒழுகுகின்றனர் எனச் சொல்லப்படுகிறது.

சிங்கள, தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் முறையே பௌத்த மத சித்தாந்தத்திலும், இந்து மத சித்தாந்தத்திலும் நம்பிக்கை கொண்டுள்ளார்.

இதனால் இவ்விரு மக்கட் பிரிவினரும் இன்னொரு மனிதரின் இரத்தம் சிந்தப்படுவதை விரும்ப மாட்டார்கள் என்றே கருதுகிறேன். ஆயினும் மத ஒழுக்கத்திற்குப் பதிலாக அராஜக அரசியல், மனித உயிர்களுக்கு அண்மித்ததாக தொடங்கியதால் இரத்தம் சிந்தலே நடைபெற்றது. இனிவரும் காலங்களிலாவது இரத்த ஆறு ஓடுவதைத் தடுப்பதற்காகவே இலங்கை மக்களின் பெரும்பகுதியினர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி எதிர்பார்ப்பு வைத்துள்ளனர். இவ்வெதிர்பார்ப்பு நிறைவேறுமா மரணிக்குமா என்பதே இன்றைய கேள்வி.

பி.கு.
'பாலம்' என்ற இப்பத்தியை சிங்களவர் ஒருவரிடம் எழுதுமாறு கேட்டுக் கொண்டது இத்தகைய சிக்கலான ஒரு காலகட்டத்திலாகும். அத்துடன் சகோதரர்கள் இப்பத்தி மூலமாக இன சமாதானத்திற்கு முடிந்தளவு பங்களிப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே சரிநிகர் சகோதரர்கள் இப்பத்தியை ஆரம்பிக்கக் கோரினார்கள். என்னுடைய முயற்சியாக இருப்பதுவும் கூட அதுதான். சிங்கள தமிழ் முஸ்லீம் போன்ற இனக்குழுக்களை பாதிக்கும் பிரச்சினைகள் பற்றி பல்வேறு கோணங்களில் ஆழமாக நோக்குவதாகும்.

எனவே, பலரும் இதை பாலம் அமைக்கக்கூடிய ஒரு கல்லாகவே எதிர்பார்த்தனர். ஆனால் அவ்வாறு இல்லாவிட்டாலும் ஒரு மணல் துணிக்கையாகவேனும் இருக்கவே நான் விரும்பினேன். ஆயினும் இப்போக்கில், எம் போன்ற மனிதர்கள் வெறும் தூசித் துணிக்கைகளுக்கு சமானமான சாமான்யர்கள் மட்டுமே!

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நவீன தமிழ்க் கவிதை எது?

சரிநிகர் இதழ் 58இல் ந.கிருஷ்ணராசா என்பவர் எழுதிய கடிதம் தொடர்பாக இதை எழுதுகிறேன்.

அன்புள்ள கிருஷ்ணராசாவிற்கு, (அல்லது கிருஷ்ணராசாக்களுக்கு) உங்களது கடிதம் கண்டு - அதிலும் கவிதை (?) கண்டு எனக்குப் புல்லரித்துப் போய்விட்டது. 'கரப்பான் பூச்சி கவட்டுக்குள் நுழைந்தால் மட்டுமே விழிக்கிற' உங்களிடம் கவிதைகளைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது என்று ஒரு மேதாவி போல நான் ஒதுங்கி விடலாம். ஆயினும், நானும் உங்களைப் போன்ற ஒரு சாதாரணன் என்பதால்- பத்திரிகைக்கு நான் எழுதிய முதற் கவிதையே இதுதான் என்பதால், நான் ஒரு Escapist அல்ல என்பதால், உங்களிடம் பேச எனக்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன.

300 சொற்களையாவது எதிர்பார்த்த உங்களுக்கு 42 சொற்கள் தந்த ஏமாற்றத்திற்காக- ஏனைய 258 சொற்களைத் தர முடியாதது எனதுகையாலாகாத்தனத்திற்காக- என்னை மன்னிப்பீர்களா?

பாவம் நீங்கள், சொற்களை எண்ணுவதிலேயே நேரத்தை வீணடித்து விட்டீர்கள். இன்னும் நீளமாய் எழுதாமல் 42 சொற்களோடு நிறுத்தி விட்டதால் உங்கள் நேரத்தில் சில நிமிடங்களையேனும் மீதப்படுத்த முடிந்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். நல்ல வேளை எத்தனை 'சென்றி மீற்றர்' என்று அளக்காமல் விட்டீர்களே அது வரைக்கும் நான் தப்பினேன்.

கவிதையின் தரத்தை சொற்களினதும் வரிகளினதும் எண்ணிக்கையால் அளவிடும் பழைய பரணிலேயே இன்னமும் நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். (கவனம் காலை நீட்டி விடாதீர்கள். உங்கள் 'கிடத்தலில்' வந்தது போல் கறிச்சட்டி.முட்டும்) இதற்கு உங்களை விடவும் என்னை விடவும் வயதிலும் விஷயத்திலும் மூத்த எம்.ஏ.நுஃமானிடம் நல்ல பதில் இருக்கிறது. வாசுதேவனின் ''வாழ்ந்து வருதல்' முன்னுரையில் அவர் இப்படிச் சொல்வார்:

''சலிப்புத் தரும் நீண்ட வரிகளை விட தொட்டு எடுத்து விடலாம் போல் தெரியும் நான்கு வரிகள் கவிதைக்கு அழகுதான். நான்கு வரியில் நல்ல கவிதை எழுதுவதற்கு அதிகபட்ச திறமை வேண்டும் என்பது என் அனுபவம். நானூறு வரியில் ஒரு நல்ல கவிதை எழுதுவதற்கு அதைவிடவும் ஆற்றல் வேண்டும் என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன். கவிதையின் நீளம் அல்ல முக்கியம். தரம் தான் முக்கியம்.''

''கவிதை கூறுபவன் யார்? யாருக்குக் கூறுகிறார்கள்? எதை- எதில் எரிக்கக் கோருகிறார்? பின்பு ஏன் அழச் சொல்கிறார்? ஏன் மீண்டும் மீண்டும் உயிர்ப்பு (மீட்சி) ஒரு முறை போதாதா? அல்லது உண்மையிலேயே விளிக்கப்பட்டவர் இறந்து விட்டாரா? புத்துயிர் பெற்றவர் ஏன் ஓரமாய் ஒதுங்க வேண்டும்'' என்று மிகவும் கொச்சையாகக் கேட்டிருக்கிறீர்கள். இது உங்கள் அறியாமையா அல்லது கிண்டல் பாணியிலான விமர்சனமா என்னும் அவசியமற்ற விவாதத்துக்குள் இறங்கி நாம் சேறு பூசுவது அபத்தமானது. இந்த அடுக்கடுக்கான கேள்விகளுக்கும் நுஃமானிடம் பதில் இருக்கிறது. சோலைக்கிளியின் 'எட்டாவது நரகத்தின் முன்னுரையில்,

''கவிதையின் மொழி கணக்கியலின் மொழி போல் நேரானதல்ல. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது போல் முற்றிலும் தர்க்கரீதியானதல்ல. இது நெளிவு சுழிவு மிக்கது; கற்பனைத் தளத்தில் படிமச் சேர்க்கையில் இயங்குவது பாரதி குழந்தை கண்ணம்மாவை ''ஆடிவரும் தேன்' என்று விளிக்கின்றான். இங்கு தேன் ஆடி வருமா என்று நாம் தர்க்கவாதம் புரியமுடியாது. காதலி கண்ணம்மாவை 'உயிர்த் தீயினிலே வளர் சோதி' என்று வியக்கின்றான். இங்கு உயிர் எப்படித் தீயாகும் என்றோ, உயிர்த் தீயில் எப்படி சோதி வளரும் என்றோ நாம் வினவ முடியாது. இத்தகைய வினாக்கள் கவிதைக்குப் புறம்பானவை, கவிஞனின் உணர்வுலகை, அவனது வெளிப்பாட்டுத் தளத்தைப் புரிந்து கொள்ள நமக்கு உதவாதவை. தர்க்க ரீதியான மொழி பெயர்ப்பில் பாரதியின் இப்படிமங்கள் வெளிப்படுத்தும். உணர்வு நிலையை நாம் விளங்கிக் கொள்ளவும் முடியாது. அதை விளங்கிக் கொள்வதற்கு அவனது 'பாஷையை' நாம் புரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஒரு நல்ல கவிதை கூட பொருளற்றதாக அபத்தமானதாக, ஒரு ஏமாற்று வித்தையாகக் கருதப்படும் ஆபத்து நிகழக் கூடும்''

இப்படிச் சொல்வதால் 'நுஃமானுக்குள்'' சாமர்த்தியமாக நான் ஒளிந்து கொள்வதாய் நீங்கள் பொருள் கொள்வீர்கள் எனின், ஜெயகாந்தன் சொல்வது போல '' உங்களைப் பார்த்து நான் சிரிக்கிறேன்''

வவுனியாவில் பிறந்த உங்களுக்கு 'எச்சில் விழுங்கும் இரவுகளை' அனுபவிக்கக் கிடைக்கவில்லை எனில் இந்த நிமிஷம் வரைக்கும் எனக்கு அது ஓர் ஆச்சரியமான செய்தியே.

ரத்தவெறி பிடித்த கொலை வெறியர்கள் எங்கள் உயிர்களைக் காவு கொள்வதற்காய் அலைந்த எத்தனையோ இரவுகளில், ஏன் சில பகல்களில் கூட நாங்கள் எச்சில் விழுங்கியே (அல்லது மிடறு விழுங்கியே) எங்கள் நாட்களைக் கடத்தினோம். (உங்களை இந்த அனுபவங்கள் பீடித்திருப்பின் அது அநேகமாக ராணுவத்தாலாலிருக்கும். ஆனால் எங்களுக்கு இது புலிகளால் தான் கிடைத்தது.) இப்போதாவது அது எதன் குறியீடு என்பது உங்களுக்குப் புரிகிறதா?

சரிநிகரில் வந்த கவிதைகளுள் உஸ்மான் மரிக்காரின் கவிதை தான் ('' ஒரு கவிஞனின் வாக்கு மூலம்'') அவனத்திலும் சிறந்தது என்று வேறு எழுதியிருக்கிறீர்கள். இதுவும், உங்களுக்குக் 'கவிதை படிக்கும் எண்ணம் நேர்ந்தபோது வைரமுத்துவின் புத்தகம்' ஞாபகத்துக்கு வருவதும் உங்கள் கவிதா ரசனையை எனக்கு நன்றாகவே புரியவைக்கிறது.-சரிநிகரில் வெளிவந்த நல்ல பல கவிதைகளை ஒரேயடியாக நிராகரிக்கும் (க.நா.சு.பாணி) ரசனை சார்ந்த விமர்சகராகவே நீங்கள் எனக்குத் தெரிகிறீர்கள்.

கடைசியாய் என் கவிதையில் வருகிற 'நானை' ஒரு செயலற்றுப் போனவனாய் ஒரு சொல் விமர்சனம்' வேறு செய்திருக்கிறீர்கள். நான் முன்னிலைப்படுத்திப் பேசும் அச்சம் நிறைந்த சூழலில் வாழும் அந்தத் தனி மனிதனை ஆறுதல்படுத்தவே- நீ மட்டுமல்ல, நானும், இன்னும் நம்மைப் போன்ற அநேகரும் கூட வேட்டையாடப்பட்டு நிரந்தர வடுக்களோடுதான் இங்கு வாழ்கின்றோம் என்பதை விளக்கவே அப்படிச் சொன்னேனே தவிர, இருத்தலின் மீதான ஒரு அவநம்பிக்கையை வெளிப்படுத்த அல்ல.

எனது கவிதையை ஆழமாகப் படித்துப் பாருங்கள். நான் காத்திருப்பதாய்த்தான் கடைசி அடியை முடித்திருக்கிறேன். அதாவது மீதமுள்ள வாழ்க்கையை ஒரு அர்த்த புஷ்டியான நம்பிக்கையோடு எதிர் கொள்வதாகவே எனது கவிதையின் மையப் பொருள் (theme) அமைந்திருப்பதைக் காண்பீர்கள். கவிதை எதையும் நேரிடையாய்ப் பேசுவதில்லை தயவு செய்து நீங்களும் குழம்பி மற்றவர்களையும் குழப்பாதீர்கள்.

எனது கவிதையைப் பிட்டுப் பிட்டு வைத்து விளக்கப்போனால் இந்தக் கடிதம் மிக நீண்டு விடும். தேர்ந்த ஒரு வாசகனுக்குச் செய்யும் துரோகமாய்க் கூட அது அமைந்து விடலாம். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி, எனது கருத்துக்களைப் பகிர ஒரு களம் அமைத்தமைக்கு உங்களுக்கு'எனது இனிய நன்றிகள்.

சிராஜ் மஷ்ஹூர்
அக்கரைப்பற்று -02

# எச்சில் விழுங்கும் இரவு -கிடத்தல்

## அசலும், நகலும்!

சரிநிகர் இதழ் 58 இல் ந.கிருஷ்ணராசா என்பவர் 'இது நான் பாடிய கவிதை' என்ற தலைப்பின் கீழ் எழுதிய அவரது கருத்துக்கும் 'கிடத்தல்' எனத் தலைப்பிட்ட கவிதையையும் பார்த்ததும் நானும் ஏதோ (கிறுக்கிப்?) பார்க்கலாம் என ஒரு எழுகை.

செயலற்ற/ ஒதுங்குகிற/ யாரோ செய்வான் என எதிர்பார்க்காது எதையுமே நாமே செய்ய வேண்டும், நம்பிக்கைக்குரிய கவிதைகளுக்குப் பரிசளிக்க வேண்டும் எனக் கிருஷ்ணராசா நினைப்பது நல்ல விடயமே. ஆனால் எமக்குப் பிடித்தமானவை மட்டுமே கவிதைகள் ஏனையவை கவிதைகளேயல்ல என்பது வெறும் வீம்பாகத் தான் இருக்கமுடியும். மேதாவித்தனங்கள் நல்ல இலக்கிய விமர்சனங்களை வெளிக் கொணரமாட்டா. எல்லாமே நான், எனது மட்டுமே என்ற பாங்கை வளர்த்து வளரும் எழுத்தாளர்களை அடித்து விரட்டும் செயற்பாட்டையே செய்யும். ஒவ்வொருவருடைய எண்ண வெளிப்பாடுகளைக் குறைந்த பட்சம் புரிந்து கொள்ள முயல வேண்டும். (எத்தகைய சூழ்நிலையில் எழுத்தாளன் இருக்கிறான், அவனது மனோநிலை என்ன என்பதை) அப்போதுதான் தனியே புளுகித்தள்ளுவது, அல்லது வெறும் நளினப்பாங்கு எழுத்துக்களைக் கையாண்டு அடித்து விரட்டுவது என்ற விமர்சனத்தைத் தவிர்த்து, தரமான வளர்க்கக் கூடிய விமர்சனங்களை முன்வைக்க முடியும் சொல்லப்படுகின்ற விடயம் (கரு) தான் முக்கிய பிரச்சினையே தவிர அதன் உருவத்தையும், அளவையும் வைத்து அதுதான் சிறந்தது. இதுதான் சிறந்தது என்ற முடிவிற்கு வரமுடியாது. ஒரு கவிதையின் முழு அர்த்தமும் அக்கவிஞனாலேயே விளங்க வைக்க முடியும். எனினும் எனது பார்வையில் கவிதைகள்

1) இருத்தல்:
தனிமனிதர்களாக இருந்தாலும் சரி, அமைப்புகளாக இருந்தாலும் சரி, அமைப்புகளாக குழுக்களாக இருந்தாலும் சரி, தொடர்ச்சியான இழப்புகள், தோல்விகள் இதன் விளைவாக விரக்தி' இது அனேகமாக எல்லோருக்கும் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வு. இந்த விரக்தி, சலிப்பு நிலையில் இருக்கும் ஒருவன்/ ஒருத்தி அதைப்பற்றி தொடர்ந்து சிந்திப்பதும் அதன் விளைவான விபரீத முடிவுகளும் நிகழ்வு. இந்த யோசினை அமைதியாக தனியே இருக்கின்ற போது அதிகரிக்கின்றது. இதையே கவிஞன் எச்சரிக்கிறான்.

***''எச்சில் விழுங்கும் இரவுகள் பற்றி எச்சரிக்கையாய் இரு''***

கவிதையைச் சொல்லும் கவிஞனும் இந்நிலையைத் தாண்டி வந்ததால் (கவிதையில்) இனியொருவனுக்கு அப்படியொரு நிலை வருகின்ற போதான எச்சரிக்கை,. தொடர்ச்சியான சிந்தனை வேதனையாக எரிகிறது. அப்போது கவிஞன் கட்டுபுலனாகாத தனது ஆதரவை மௌனக்காற்றுடன் கலந்து விடுகிறான்.

***உன் உயிர்க் கிழிசலின்
எரிகையில்
என் மௌனச் சிதைவுகளையும்
சேர்த்து எரி.***

எப்பொழுதும் அழுகை கண்ணீராக வெளிவருகின்ற போது மனம் அமைதியடைகிறது. அத்துடன் நிற்காமல் உணர்வுகள் தழைக்க வேண்டும் என்கிறான் கவிஞன். இவ்வாறான உடைவுகளின் பின்னரும் உயிர்த்தெழுந்து சாதாரண இன்றைய நடப்பு வாழ்விலிருந்து விலகிவா. என்னால் தனித்து ஒன்றையும் செய்ய முடியாது நொண்டியாய் உள்ளேன் எனக் கவிஞன் தனது அற்புதமான கவிதையை முடிக்கிறான்.

2) வங்காள விரிகுடா:
அமைதியாக இருந்த நிலைமாறி மனிதர்களைக் கொல்லும் யுத்தம் தொடங்கி எத்தனை மனிதர்களைக் கொன்று குவிக்கிறது என்ற வேதனையின் வெளிப்பாடு. இதுவும் ஒரு நல்ல கவிதையே.

3) நாடோடிகள்:
குழம்பிய நிலையிலுள்ள ஒருவனின் வெளிப்பாடு. ஆனால் அதனுள்ளும் கவிஞன் தற்கொலையைப் பிரகடனமாக்க விரும்பவில்லை. ஆனால் கடற்கரையில் அலையடிக்கும் இடத்தில் விக்கட்டை நட்டு கிறிக்கட் விளையாடுவதில் யதார்த்தத்திற்குப் புறம்பான வெறும் கற்பனை (Fantasy) என்பதற்குச் சென்று விடுகிறார்.

யதார்த்தத்தையும், யதார்த்தக் கற்பனையும் வெளிப்படுத்துகின்ற கவிதைகளும் வெறும் கற்பனையைப் புகுத்துவதோ அல்லது வெற்று நம்பிக்கையைப் புகுத்துவதோ கவிதை வரிகளுடன் ஒட்டாது வலிந்து எழுதுவதேயாகும்.

ஈழத்தின் கவிதை உலகின் கவிஞன் சேரனின் ''எலும்புக் கூடுகளின் ஊர்வலத்தில்'' உண்மை நிலையைச் சொல்ல முடியாத, ஜீரணித்தும் பார்க்க முடியாத மனநிலையில் வெளிப்படுகின்ற கவிதைவரிகளாக யதார்த்தத்தை கொப்பளிக்கின்ற வார்த்தைகளாக இவை வெளிவருகின்றன மகாகவி பாரதியார் சொல்லவருகின்ற விடயத்தை ''வசனக் கவிதைகளாக''வும் எழுதியிருக்கிறார்.

எனவே சொல்ல வருகின்ற விடயமும், கவிதை வரிகளிடையேயான தொடர்புகளே முக்கியமாக நோக்கப்படல் வேண்டும்.

அவ்வகையில் ''கிடத்தல்'' கவிதையைப் பார்ப்போமானால்;

***''உயிர் மணிகளைத் தோலுரித்து
சப்பித் துப்பும்
அரிசி ஆலையின் இரைச்சல்''***

என்ற நல்ல வரியையும்,

***''கரப்பான் பூச்சி கவட்டுக்குள்
நுழைய
விழித்து எழுந்தேன்''
......
முகட்டெலி முகத்தில்
மூத்திரம் அடித்தது''***

போன்ற அமைப்பியல் வாதக் கவிதைக்குரிய படிமங்களைச் சில இடங்களில் கொண்டிருந்தும், இதற்குக் கருவோ, சொல்ல வருகின்ற விடயமோ இல்லை. மேலும் கரு இருந்தால் தான் வரிகளும் ஏதோ ஒரு வகையில் தொடர்புபடும். அதுவும் இல்லை. எனவே எவ்வாறு ''கிடத்தல்''ஐக் கவிதையாக கொள்ள முடியும். ஆனால் ஒன்று, கிருஷ்ணராசா முயன்றால் அவரால் நல்ல அமைப்பியல் வாதக் கவிதைகளைத் தரமுடியும்.

கவிதைகள் ஈரிரண்டு நாலு என்கிற வெறும் சூத்திரங்களாக மட்டும் அமையாமல் ''நூறு பூக்கள் மலரட்டும்.''

துளசிமணி
ஜேர்மனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆத்மாவின் குரல் மீது
## சில குறிப்புகள்

சரிநிகர் -58இல் வந்த கவிஞன் என்.ஆத்மாவின் கடிதம் ஏற்படுத்திய பாதிப்பே இச் சிறுகடிதம். என்.ஆத்மாவின் உயிர்ப்பான கவிதைகளை புதுக்கவிதை பற்றிய அவரின் பார்வை மலினப்படுத்திவிடும் ஆபத்து இருக்கிறது என்பது சற்று நெருடலான விமர்சனமாக இருக்கட்டும்!

அவர் ''நவீன கவிதை'' என்பது புதுக்கவிதையைத் தான் என எடுத்துக் கொண்டு விசயத்துக்கு வருவோம்.

கவிதை என்றால் ''அது சிலருக்குத் தான் எழுத வரும்; அது ஒரு கொடை....'' என்றெல்லாம் புனிதம் பூசப்பட்டு மேட்டிமைத் தன்மையோடு இறுகிப் போயிருந்ததை புதுக்கவிதைகள் உடைத்து நொருக்கியது. அது பரந்துபட்ட மக்களிடையே எடுத்துச் செல்லப்படும் ஒரு ஜனநாயகத் தன்மையை வார்த்தெடுத்தது. ஐரோப்பாவில் நவீனத்துவத்தின் தோற்றப்பாடுகள் தமிழ்க் கவிதையுலகை எட்டியதே மிகவும் தாமதமாகித் தான். இதன் சில கூறுகளை உள்வாங்கிக் கொண்டு -ஈழத்தைப் பொறுத்தவரை -தமிழ் மக்களின் போராட்டக்களம் இந்த புதுக்கவிதைத் தளத்தை மொட்டுடைத்து விரித்தது உண்மை. இன்று தமிழ்க் கவிதை உலகில் பல பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்படும் ஆரோக்கியமான போக்கிற்கு- தெரிந்தோ தெரியாமலோ- பரஸ்பர தடைகள் விதிப்பதை கவிஞர்கள் தவிர்க்க வேண்டும். புதுக்கவிதைக்கும் வரையறை கொடுக்க முனைவது இன்றைய கட்டத்தில் இந்தக் கவிதை முயற்சிகளை மீண்டும் கவிதை பற்றிய இன்னொரு ''நவீன இறுக்கத்துக்கு'' இழுத்துச் செல்ல வழிகோலும்.

அத்தோடு கவிஞர்கள் வாசகர்களுக்கு கவிதை பற்றி எதுவும் தெரியாது என்ற தொனியில் பதிலடி கொடுப்பது கவிதையில் வளர்ச்சிப் போக்கினை வளர்க்க உதவும் பண்பாக இருக்காது. கவிதை வாசகனில் ஏற்படுத்தும் தாக்கம் கவிதை பற்றிய அவனது புரிதலின் அடிப்படையிலானதல்ல. அவன் வாழும் சூழல், அனுபவங்கள், உணர்வுகள், உலகக் கண்ணோட்டம்.... சம்பந்தப்பட்டவை. ''யதார்த்தத்திலிருந்து பிறப்பதே கவிதை'' என்ற சட்டத்தை (Frame) என்.ஆத்மா வரித்துக் கொண்டால் அவரின் கவிதை வளர்ச்சி அதற்குள் முடங்கிப் போவது தவிர்க்கப்பட முடியாது. கவிதையின் தரம் ஒரு போதும் இச்சட்டத்தை தகர்க்காது. அத்தோடு யதார்த்தத்திலிருந்து பீறிடுவதே புதுக்கவிதை என்றால், அது பாதிப்பை ஏற்படுத்துவதும் அந்த யதார்த்தத்துள் வாழும் வாசகர்களுக்குத்தான் என்ற பொருளையும் உள்ளடக்குவதாகவே நான் உணர்கிறேன். எடுத்துக்காட்டாக ஈழத்துக் கவிதைகள் புலம்பெயர்ந்த வாசகனுக்கும் புலம்பெயர்ந்தோரின் கவிதைகள் ஈழத்து வாசகனுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதை இந்தக் கண்ணோட்டத்தினூடு எப்படி விளக்குவது? இந்நிலையில் ''நவீன கவிதை பற்றி ஒரு பரிபூரணமான நூலை எழுத வேண்டிவரும்'' என்று என்.ஆத்மா சிலாகிப்பது ஒருவகை மேதாவித்தனமாகி விடுகிறது.

''... தேசம் முழுக்க தீப்பிடித்து மானிடம் நொறுக்கப்படுகிற, வயிறு பற்றியெறிகிற நிலைமைகளிலும் பூக்களின் மலர்வையும், நதிகளின் அழகுகளையும், சாத்தியமேயற்ற குழந்தைகளின் சிரிப்பையும், பனிக்கூதலின் சிலிர்ப்பையும் பற்றி மட்டுமே பாடிக் கொண்டிருக்கும் பம்மாத்து அல்லது போலி ''சென்டிமென்ற்'' அல்ல நவீன கவிதை. எதார்த்தத்திலிருந்து பீறிடுவதே அது'' என்று என்.ஆத்மா வரைவிலக்கணிக்கிறார். எதை இவர் பம்மாத்து என்கிறாரோ அந்த வார்த்தைகளும் இங்கு உயிர் பெற்று அவரிடமிருந்து வெளிவருவதற்கு என்ன விளக்கம் கொடுக்கப் போகிறாரோ தெரியவில்லை. அவைகள் கவிதைகளாகி விட முடியாதா என்ன? இதேபோலவே இன்னொரு கோணத்தில் நிற்கும் நட்சத்திரன் செவ்விந்தியனின் கவிதை பற்றிய கண்ணோட்டம் ''நாடோடிகள்'' கவிதையில் (சரிநிகர்- 56) வெளிப்படுகிறது. ''... கவிதைகள் செத்துக் கொண்டு போகிறது/ தற்கொலையைப் பற்றியும்/ சஞ்சலம், கிலேசம், மனஅழுத்தம்/ இவை பற்றியும் கவிதையில் வந்தால், அவன் கவிஞனாக இருக்க விரும்பவில்லை/ தண்டவாளத்தில் தலையை வைத்து, குருதி தரித்து மரித்துப் போவான்...'' என்கிறது அவரின் கவிதை. சஞ்சலம், கிலேசம்.... இப்படி கவிதை பாடுவதானால் கவிஞன் தண்டவாளத்தில் தலைவைத்துவிடுவான் என்று அநாவசியமாக உணர்ச்சிவசப்படுவது பற்றி அவர் கேள்விக்குள்ளாக்குவது நல்லது. இந்தவகைக் கண்ணோட்டங்களைத் தகர்க்கும் எத்தனையோ கவிதைகளை ஈழத்துக் கவிஞர்களிடமிருந்தும் கூட எடுத்துக்காட்ட முடியும்.

இதேபோலவே கவிதைக்கும் முடிவு கொடுப்பது, நம்பிக்கையூட்டக் கூடியதாக எழுதுவது... என்பதெல்லாம் வலிந்து செய்யப்படும் போது செயற்கைத் தன்மையை ஏற்படுத்தி விடுகிறது என்பதையும் இந்த இடத்தில் சொல்ல வேண்டியிருக்கிறது. '' இப்போதைய கவிதைகளை எல்லாம் கவிதை என்று சொல்லி விட முடியாது.... வசனங்களை முறித்து எழுதுவது, புதிர்விடுவது என்பதை கவிதை என்று புரிந்து கொண்டு பலர் எழுதுகிறார்கள்...'' என்றெல்லாம் சிவசேகரம் போன்ற கவிஞர்கள் விசனப்படுவதும் கூட ஒருவகையில் புதுக்கவிதைக்கு ஒரு வரையறையை இடும் முயற்சியேதான். இது ''நவீன மேட்டிமைத் தன்மையை'' உருவாக்கி விடக்கூடிய ஆபத்தும் கொண்டது. கவிதைகளை கவிதை

->15

## சுட்டுவிரல் நீட்டுவதால் ஆகாது

இலக்கியச் சந்திப்பு குறிப்புகள் பற்றி:
சிவசேகரம் தமிழில் மொழிபெயர்ப்புகள் வரவேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் படைப்பாளி. செய்பவர் நுஃமான் பற்றிச் சொல்லப்பட்டவை முற்றிலும் தவறான புரிதலில் எழுந்தவை. நுஃமான் தெளிவான கோட்பாடு தளத்தில் நின்று கைலாசபதியை நோக்கினார். கைலாசபதியின் பலவீனம் மார்க்ஸியக் கருத்தியலின் பலவீனம் என்று கண்டார் அவர்.

இலக்கியச் சந்திப்பு ஏற்பாட்டாளர்கள் பற்றிச் சொல்லப்பட்டிருப்பவை குறித்து:
6 அமர்வுகளில் சொல்லப்பட்ட விசயங்கள்/ விவாதிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் எழுத்தில் வைக்கப்படுமானால் இந்த அமர்வுகளின் வளமான out put எல்லோருக்கும் புரியவரும். அதைத்தான் செய்ய வேண்டும்.

பூஜ்ய நிலைத் தேடலல்ல ஆக்கபூர்வமான நூறு பரிமாணங்களோடு விவாதங்கள் முன் வைக்கப்பட்டன.
அமர்வுகளுக்குத் தலைமை தாங்கியவர்களின் நெறிகாட்டல் திட்டமிட்ட வகையில் இல்லாது போனது சரியான கோட்பாடு வரையறைகளுக்கு வர இயலாமைக்கான துரதிர்ஷ்டமான காரணம். இது நடைமுறைப் பிரச்சினை. நாமெல்லோரும் சேர்ந்து நிவர்த்திக்க வேண்டிய தந்தக் கோபுரங்களிலிருந்து சுட்டுவிரல் நீட்டுவதால் எந்த விளைவும் நிவர்த்திக்கப்படப் போவதில்லை.

புகலிட இலக்கியம் பற்றியோ, பெண்ணிலைவாதம் பற்றியோ தேசீயம் பற்றியோ. நாடகப் பிரக்ஞை பற்றியோ எழுதப்படும் போது உரையாடலுக்கான தளத்தில் அதை வைக்க வேண்டும். கரிக்கோடிட்டு அடிப்பதால் எவருக்கும் லாபமில்லை.

கருத்தமைவுகளை உருவாக்கும் பன்முகத் தன்மை சார்ந்த அபிப்பிராயங்கள் அங்கு வந்தன. இச் சூழலில் இதுதான் முக்கியமும் கூட:
மற்றையது சிங்கள சினிமா பற்றி/ என்னைப் பற்றி:
றோபர்ட் குருஸ் எனும் சிங்களக் கிறிஸ்தவர் ஒருவரின் அடையாளம் பற்றிய குறும்படம், மற்றும் Before the dawn என்று Sub titleகளோடு வந்த ஒரு படம்தான் நான் பார்த்த இரண்டு தீவிர சிங்களப் படங்கள். அதுவன்றி என் சிங்களப் படங்கள் பற்றின படிப்பறிவு பரந்து பட்டது. சிங்களப் படங்களைப் பார்க்க நான் தேடிக் கொண்டேயிருக்கிறேன். சிங்கள நண்பர்களிடமும் கேட்டிருக்கின்றேன். அன்றைய பேச்சு திட்டமிட்ட பேச்சு அல்ல. எனது நண்பர்களுக்கிடையிலானது போன்ற Spontaneous ஆன ஒரு உரையாடல். நான் அன்றைய பேச்சில் ஆபிரிக்கப் படங்கள்/ மத்திய கிழக்கும் படங்கள் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதை பிற்பாடு விடுபடுதலாகக் கண்டேன்.

இனவாதம் என் ரத்த அதிர்விலும் கூட இல்லாதது. என் வாழ் நாளெல்லாம் எதிர்த்துப் போராடுவது அந்தச் சிறுமையை எதிர்த்துத்தான்.
என்னுடையது புறக் கணிப்பல்ல, இயல்பாக நேர்ந்து விட்ட விடுபடுதல் . அதற்காக நான் வருந்தவும் செய்வேன்.
இனிமேலாவது தனிநபர்களை முன்னிறுத்தாமல், கருத்தமைவுகள் விவாதிக்கப்படும் கூட்டு மேடையாக சரிநிகர் ஆகட்டும். அப்போது தமிழன் உலகச் சிந்தனையின் கொடுமுடிகளையெல்லாம் தொடுவான். அடுத்த மனிதனை ஆரத் தழுவிக் கொள்வான்.

யமுனா ராஜேந்திரன்
இங்கிலாந்து

19th
EUROPEAN
TAMIL LITERARY
CONFERENCE
(LONDON)

19வது
ஐரோப்பிய
தமிழ் இலக்கியச்
சந்திப்பு
(லண்டன்)

24.9.1994 சனி
காலை 9.30 - மாலை 6.00
25.9.1994 ஞாயிறு
காலை 9.30 - மாலை 10.00

CONWAY HALL
25 RED LION SQUARE
HOLBORN
LONDON WC1R 4RL

HOLBORN

## துடைப்பமும் தூசும்

19வது இலக்கியச் சந்திப்புப் பற்றித் துடைப்பான் கூறியவை பற்றி சிறிது எழுத வேண்டும்( சரிநிகர் ஒக்.27-நவ.09. 1994)
மொழி பெயர்ப்புகள் அவசியமில்லை என்ற தொனியில் நான் எதுவேனுஞ் சொன்னதாக எனக்கு நினைவில்லை. எனக்கு இந்தக் கட்டுரையாளனின் கூற்றைப் பற்றி முதலில் தகவல்கள் தந்த நண்பருக்கும் நினைவில்லை. பேசுவதைக் கவனித்துக் கேட்டு விட்டு எழுதுவது நல்லது. நான் இன்னமும் மொழி பெயர்ப்பில் அக்கறையுடன் செயற்படுவது பற்றி அங்கு வந்த பல நண்பர்கள் அறிவார்கள். நான் மேற்குறிப்பிட்டவாறு பேசியிருப்பின் அவர்களே அதுபற்றி என்னிடம் கூறியிருப்பார்கள்.

புலம் பெயர்ந்தோர் இலக்கியம், புகலிட இலக்கியம் என்பன இறுக்கமான வரைவிலக்கணம்கோரும் பிரச்சினைகளல்ல. இலக்கியக் கோட்பாடுகள் பலவற்றைப் போன்று இவை பற்றியும் தெளிவீனங்கள் தொடர்ந்தும் இருக்கும்.
யமுனா ராஜேந்திரன் ஈழத்தவரல்ல. சிங்கள சினிமா பற்றி அறிவார். ஆயினும் பரிச்சயம் குறைவு என நினைக்கிறேன். தெரியாத விஷயம் பற்றிப் பேசாதது பாராட்டத்தக்கது தான்.
நுஃமான் கைலாசபதியை எந்த வகையிலும் அப்பழுக்கற்றவர் எனக் காட்ட முனையவில்லை. கைலாசபதியின் தவறுகளை அவரது சூழலில் வைத்து மதிப்பிட வேண்டிய தேவையையே வலியுறுத்தினார். கேட்கப்பட்ட எக்கேள்வியும் தட்டிக்கழிக்கப்படவில்லை. துடைப்பானுக்கு கூட்டுவதற்குத் தூசி அகப்படவில்லை என்றால் அதைத் தானே கொண்டு வந்து கொட்ட அவசியமில்லை. நுஃமானிடம் சிலர் எதிர்பார்த்த இலக்கியப் பார்வை அவர்களுக்கு கிட்டவில்லையானால் அது நுஃமானின் நேர்மையீனத்தைக் குறிக்காது.

பெண்கள் தமது பிரச்சினைகளை மனத்தடையின்றிப் பேசும் சூழலை ஆண்கள் எளிதில் அனுமதிப்பதில்லை. முன்னைய சில சந்திப்புகளை விட இச்சந்திப்பில் அக்கோளாறு சற்றுக் குறைவாகவே இருந்தது. வீண் விவாதங்களை எழுப்ப விரும்புவோரை எவ்வகையிலும் நிறுத்த இயலாது. பெண்ணுரிமை பற்றித் துடைப்பானுடைய கோட்பாடுகளை அவர் சரிநிகரில் எழுதலாமே. அல்லது ஐரோப்பிய ஏடுகளில் எழுதலாமே. இலக்கிய சந்திப்புக்களுக்காகக் கோட்பாடுகள் காத்துக்கிடக்க அவசியமில்லை. இலக்கியச் சந்திப்பு உரத்த சிந்தனைக்கான ஒரு களம். இன்னமும் அங்கு பெண்கள் தமது பிரச்சினைகளை ஆண்களது ஏளனத்துக்கு இடமின்றி முன்வைக்க இயலாத நிலை தொடர்கிறது. முதலில் இதற்கு ஒரு முடிவு கட்டுவோம். பிறகு இலக்கியச் சந்திப்புக்களிலும் கோட்பாடுகளை வகுப்போம்.

இந்த இலக்கியச் சந்திப்பு ஒரு பயனுள்ள சந்திப்பு என்பது வருகை தந்த நண்பர்கள் பலரது மதிப்பீடு. ஓரளவுக்கு இதன் விளைவாகவே அடுத்த ஆண்டு ஒரு சந்திப்பைக் கனடாவில் நடத்த வேண்டும் என்ற ஆர்வமும் செயல்வடிவமும் பெறுகிறது. குறை சொல்லவென்றே தீர்மானித்து விட்டவர்களுக்குக் கைபட்டாற் குற்றம், கால் பட்டாற் குற்றம். குற்றம் சொல்ல முதற், காது கொடுத்துக் கேட்கவும் கவனித்து விசாலமாக வாசிக்கவும் பழகுவது நல்லது.

சி.சிவசேகரம்
லண்டன்

www.tamilarangam.net



# அஞ்செவி அமுதம்

மழை கொட்டலாமோ வேண்டாமோ எனத் திகைத்துக் கொண்டிருந்த நவ.26 கடந்த சனிக்கிழமை மாலை, பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்கம் வழங்கும் 'அஞ்செவி அமுதம்' எனும் கதம்ப நிகழ்ச்சியொன்றினைத் பார்க்க முடிந்தது. (அழைப்பிதழ் தந்திருந்தார்கள். நன்றி.)

ரஞ்சன மாலை (கீழைத்தேய இசை), வரும் (நாடகம்), கர்ணன் (நாட்டுக் கூத்து), கீதாமிர்தம் (மேலைத்தேய இசை) என நிகழ்ச்சிகள் கதம்பமாக இருந்தன.

அடிக்கடி 24 கரட் தங்க நகைகளை மதுஷா ஜுவல்லர்ஸில் வாங்கும் படி கரைச்சல் பண்ணிக் கொண்டிருந்தார்கள் சங்கக்காரர். வீடு கட்ட சிடிஐயிடமும், புத்தகம் வாங்க ஜெயாவிடமும், வீடியோ கசற் வாங்க ஏசியா வீடியோ லைபிறரியிடமும் போகச் சொன்னார்கள். இது என்னடா கரைச்சல் என்றாகி விட்டது.

முதலில் கீழைத்தேய இசை, ரஞ்சன மாலை என்று பெயர். நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது கர்நாடக சங்கீதத்தைச் சார்ந்து இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது தெரிந்தது. இந்நிகழ்ச்சியைச் சினிமாப் பாடல்கள் ஆக்கிரமித்தன. கடைசியில் கர்நாடகமும் இல்லை; சினிமாவும் இல்லை என்றாகி விட்டது. இளையராஜாவின் இசையில் வைரமுத்துவின் ''அந்தி மழையைப் பொழிந்து'' கொண்டிருந்த போது பாடகருக்குக் குரல் பிசிறத் தொடங்கி விட்டது. மண்டபம் முழுக்கக் கூச்சல். பாடகரைப் பார்த்துப் பரிதாபப்படுவதா அல்லது என்னைப் பார்த்துப் பரிதாபப் படுவதா? என்று தெரியவில்லை.



இறுதியில் 'பல்லியம்' என்றார் அறிவிப்பாளர். நிமிர்ந்து இருந்தேன். பல்லியம்களை கட்டியது. முடிய கைதட்ட கைகளைத் தூக்கினேன். அசைய மறுத்தது. பாழாய்ப்போன ஞாபகம் வந்து தொலைத்தது. எங்கேயோ கேட்ட மெட்டு. 'மே மாதம்' எனும் சினிமாவில் ரகுமானின் இசையில் ''மட்ராசைச் சுற்றிப் பார்க்கப் போறன், மரீனாவில் வீடு கட்டப்போறன்....'' (வைரமுத்துவின் 'அமரத்துவமிக்க' வரிகள்) எனும் பாட்டின் மெட்டு.

ஜெயசிங்கம் (நெறியாளர்) அவர்களே, நான் உங்களை எப்படிப் பாராட்ட?

அடுத்து 'வரும்' என்றொரு நாடகம். பா.பாலநந்தகுமாரின் பிரதியாக்கம், நெறியாள்கையில் உருவானது. நாடகம் எடுத்துக் கொண்ட கருப்பொருள் சிக்கலானது. தாய், தகப்பன், மகள், இரு மாணவர்கள், ஒரு வயோதிபர் இவர்கள் வள்ளமொன்றில் வருகின்றனர். வள்ளத்தின் ஓட்டிகள் இருவர். வள்ளம் நடுக்கடலில் அகப்பட்டுக்கொண்டது. கரை தெரியவில்லை. வள்ளத்தின் பிரயாணிகள் ஓட்டிகளைத் திட்டுகிறார்கள். அவர்கள் பிரச்சினை அவரவர்க்கு. நாடகத்தின் இறுதியிலும் கரை தெரியவில்லை. ஆயினும் பிரயாணிகள் ஓட்டிக்கு உதவத் தீர்மானிக்கின்றனர். கரை வரும் எனும் நம்பிக்கை. அவர்களுக்கு நம்புவதைத் தவிர வேறு வழியில்லை.

அனேகமாகப் பார்வையாளர் யாவருக்கும் விளங்கிவிட்டது. இது வள்ளம், கடல், கரை மட்டுமான பொருள் அல்ல. இதனூடாக வேறு பொருளை நெறியாளர் கூற முற்பட்டுள்ளார். அது மிக அப்பட்டமாகத் தெரிகிறது. அரங்காடிகளின் கொள்கரியுடன் ஒப்பிடுகிற போது தெளிவாகவும் புரிகிறது.

ஆரம்பத்தில் வள்ளமும், பின்னணி ஒளியும், லாம்பு வெளிச்சமும், ஓட்டிகள் வள்ளத்தை தேடுவதும், கிளாலிக்கடலில் பயணப்பட்டவர்களுக்கு சட்டெனப் புரிந்து கொள்கிற சூழல். நெறியாள்கையும், ஒளியமைப்பும், மேடையமைப்பும் இதற்காக மெச்சப்பட வேண்டியது.

நாடகம் பற்றிச் சுருக்கமாகக் கூறுவதெனில் மிகப் பாராட்ட வேண்டிய முயற்சி. நாடகக் கருப்பொருள் தொடர்பாக விவாதிக்க வேண்டியுள்ளது. அதற்கு இது சரியான இடம் அல்ல. நாடகம் அரங்க அம்சங்களை இன்னும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். சதீசன் (தகப்பன்) நன்றாக நடித்திருந்தார். மற்றவர்களின் நடிப்பில் இன்னும் செம்மை வேண்டும். பாலநந்தகுமாருக்கு இது முதலாவது நாடகமா? கையைக் கொடுங்கள்.

அடுத்து வந்த நாட்டுக் கூத்தைப் பார்த்த போது தான் 'வரும்' நாடகத்தை இன்னும் உயிர்த்துடிப்புடன் இயக்கியிருக்கலாம் எனப்பட்டது. கர்ணன் நாட்டுக்கூத்து உயிர்த்துடிப்புடன் இயங்கியது. கூத்து என்பதனால் ஆட்டம் அதன் பிரதான இயக்கம். அதனால் இங்கு உயிர்த்துடிப்பு சாத்தியமாகிறது. பார்த்த அவ்வளவு நேரமும் கண்ணிமைக்காமல் பார்த்த கூத்து இது.

அருட்சகோதரர் கருணாகரனா கர்ணனாக ஆடியிருந்தார்? அபாரமான ஆட்டம் அது. நடிப்பும் ஆட்டமும் கைகோர்த்து வருகிறது. என்ன உடம்பு? கடைசி வரையும் களைக்காமல், கால் சோராமல் ஆடுகிறாரே?

மற்றவர்களும் குறைந்தவர்கள் அல்லர். வீமன், அர்ச்சனன், குந்தி, தர்மன் இவர்கள் ஆட்டமும் ரசிக்கும்படி இருந்தது. இவர்களை இயக்கிய யூட் முரளிதரனை பாராட்ட வேண்டும். இதே உருவங்களைக் கொண்டு, உள்ளடக்கத்தை மாற்றி சில பரிசோதனை முயற்சிகளை யூட் முரளிதரன் மேற்கொள்ளலாம். இத்தகைய கூத்து முயற்சிகளும், அரங்க அம்சங்களுடன் இணைத்துத் தயாரிக்க முடியும் என்பதை யூட் முரளிதரன் கவனத்தில் கொள்வாராக.

இரு நிகழ்வுகளிலும் (நாடகம், கூத்து) மகிழ்வுடன் இருந்தேன். அப்புறம்தான் பிடித்தது சனி. மேடை முழுவதும் அதிர, வெல்டிங் கராச்சில் (Welding Garrage) இருப்பது போல் உணர்ந்தேன். நிகழ்ச்சியின் பெயர் கீதாமிர்தம் மேலைத்தேய இசை. இம்முறை மேடையை முழுவதுமாக ரகுமான் ஆக்கிமிப்பு செய்திருந்தார். இடையிடை இளையராஜாவும். டேவிட்டையும், தயாபரனையும், செந்தில் குமாரையும் (நெறியாளர்கள்) தேடியும் காணவில்லை.

இதனால் யாருக்கு என்ன இலாபம்? ரகுமானும், இளையராஜாவும் சந்தோஷப்பட்டுக்கொள்வார்கள். ''அட, நம்மளை பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் கொப்பி பண்ணுகிறார்களே'' என்று. கொப்பி பண்ணுவதே கடினமான வேலை என்று உங்களில் யாரும் சொல்லக்கூடும். ஒப்புக்கொள்கிறோம். கடினமான வேலை தான். அதற்கென்ன? கலை என்பது படைக்கப்படுவது. புதிதாகப் படைப்பது. உங்களுக்குத் தெரிந்த உதாரணத்தையே கூறுகிறேன். எம்.எஸ்.விஸ்வநாதனை இளையராஜா பிரதி பண்ணியிருந்தால் இன்று இளையராஜா இல்லை. இளையராஜாவை ரகுமான் பிரதி பண்ணியிருந்தால் நாளை ரகுமான் இல்லை. பிரதி பண்ண மோகனும், ரங்கனும், அப்சராஸும், ஊர்வசியும் இருக்கிறார்கள். தாங்கள் எதற்கு?

மேலைத்தேய இசையின் இடையில் பலர் எழுந்து செல்ல தொடங்கிவிட்டார்கள். நேரம் போனது மட்டும் காரணம் அல்ல. இப்பாடல்களைக் கசெற்றில் சுத்தமாகக் கேட்கலாம். எனவே நானும் எழுந்துவிட்டேன்.

அருமையான குரல் வளத்துடன் பசீர் அப்துல் கையூம் நன்கு தொகுத்திருந்தார். அதுசரி, அப்துல் கையூம் அவர்களே, பிறகு என்ன நடந்தது?

-தீர்ப்பா

# துடைப்பானின் குறிப்புகள்

## எஸ்.பொவின் பன்முகப் பரிமாணம்

துடைப்பான் தர நிர்ணயம் அற்ற முறையில் பல புத்தகங்களையும் படிப்பதுண்டு. சமீப காலங்களில் நிறையவே. காரணம்; பாரிஸில் துடைக்கும், கழுவும் வேலைகளுக்கும் மவுசு. இதனால் துடைப்பானின் துடைக்கும் தொழிலுக்கும் தற்சமயம் கோவிந்தா. இதனால் வாசிப்பு நேரம் அதிகம். இந்த வாசிப்பில் புகலிட இலக்கியங்கள் அனேகம். இவற்றில் எதுவும் துடைப்பானை மீண்டும் அவற்றை நினைவு கொள்ளத் தூண்டியதில் வெற்றி கண்டது இல்லை. (துடைப்பானுக்கு சில வேளை இலக்கிய நுகர்வுத்திறன் குறைவோ தெரியாது) அதிலும் சமீப காலமாய் எஸ்.பொ.வின் எழுத்துகள், பேட்டி என்றால் இயல்பில் ஓர் சோம்பல் தனம். (சில வேளைகளில் நித்திரை வருவதற்காக இவைகளை படிப்பதுண்டு) துடைப்பான் இந்நிலை ஆரோக்கிய நிலைக்கு உகந்ததல்ல என்பதோடு விமர்சனத்துக்கும் உரிய விடயமாகும். இங்ஙனமான மனநிலையில் துடைப்பானின் எஸ்.பொ.வின் ''நனவிடை தோய்தலை'' படித்தான். எஸ்.பொ.வின் பன்முகப் பரிமாணங்களை இதனுள் காண முடிந்ததில் ஓர் வியப்பு. எஸ்.பொ.தொடர்பான துடைப்பானின் மாறுபட்ட அபிப்பிராயங்களுக்கு அப்பால் உன்னதமான காட்சி விரிப்பு.

மனிதனின் இளமைக் கால படிமங்களை இவ்வாறு தேக்கி வைத்தல் சாத்தியமா? என்ற நியாயமான வாய்ப்புக் கொண்ட கேள்விக்கு அப்பால் எஸ்.பொ.வின் உரைநடையும், அன்றைய யாழ்ப்பாணத்தின் சமூக நிலைகளின் ஒரு கோணத்தையும் எமக்களிக்கும் பாங்கு அலாதியானது. பின்புலம் அனைத்தும் 50 வருட கால பழமையை மண்வாசனையை அப்படியே பிரதியாக்குகின்றது. இந்நூலில் நாம் எஸ்.பொ.வின் சில ''பண்புகளை'' தவிர்த்து ஏனையவற்றை நிறையவே எடுத்து அன்றைய யாழ்ப்பாண மண்ணில் சஞ்சரிக்க எம்மால் முடிகின்ற தன்மை சிறப்பானது. எஸ்.பொவின் இளமைக்கால முஸ்பாத்திகள் எக்கச்சக்கம். எஸ்.பொவின் இளமைக்காலம் ஏன் எமக்கின்றிப் போய்விட்டது? எஸ்.பொ. இதுபற்றி சிந்திப்பது நலம். எஸ்.பொவைப் பற்றி இங்கு துடைப்பான் எழுதும் போது மு.தளையசிங்கத்தின் எஸ்.பொ.பற்றிய கூற்று ஞாபகத்திற்கு வருகின்றது''. பொன்னுத்துரையின் எழுத்துக்களின் பண்புகளை ஆராயும் போது முதலில் அவர் புரட்சிவாதியாக தெரிவார். ஒரு REBEL . ஆனால் அது ஆரம்பதோற்றம்தான். வெறும் மேற் தோற்றம்தான். உண்மையில் பொன்னுத்துரை அந்தளவிற்கு ஒரு புரட்சிவாதி அல்ல. அவரும் ஒரு Dogmatist. ஒரு புதுப் பண்டிதர். ஆரம்பத்தில் அவர் மீது எனக்கு இருந்த கவர்ச்சி அப்படிப்பட்டது. ஆனால் போகப் போக அவர் என்னை ஏமாற்றுபவராகவே மாறுகின்றார்...... (ஏழாண்டுகால இலக்கியவளர்ச்சி- பக்கம் 121)

குறிப்பு: மு.தளையசிங்கமும், எஸ்.பொன்னுத்துரையும் 'நற்போக்கு' எனும் முகாம் அமைத்து ஒன்றாய் இருந்தவர்கள். மிகவும் நெருங்கிய சகாக்கள்.

## தமிழக சினிமா உலகம் இப்படித்தான்!

சென்னையில் நடந்த ஜேர்மன் திரைப்பட விழா ஒன்றில் தான் முதன் முதலில் இவரைச் சந்தித்தேன். அறிமுகப்படுத்தியவன் நண்பன் பரம். இதன் பின் பல இடங்களிலும் சந்திக்கும் சந்தர்ப்பம். இவரின் சரளமான ஆங்கில அறிவும்- விடய ஆளுமையும் அடிக்கடி என்னைத் திணற வைக்கும். இதனால் இவரைக் கண்டு ஒளிந்து கொள்ளலும் உண்டு.

சத்தியேந்திராவைப் பற்றி பின்னர் முழுமையாக அறிந்து கொண்டதும் என்னுள் வேதனை. தமிழக திரையுலகம் தொடர்பாய் அதிவெறுப்பு. சத்தியேந்திரா எம்.ஏ (கன்னடம்) எம்.ஏ.(தத்துவம்) பிரெஞ்சு, ஜேர்மன் மொழிகளில் டிப்ளோமா பட்டங்கள் பெற்றவர். கன்னடப் பத்திரிகைகளிலும் டெக்கான் ஹெரால்ட் எனும் ஆங்கில சஞ்சிகையிலும் முன்னூறுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். தோல் பொம்மைகள் பொம்மலாட்டம் (Leather Puppetry) பற்றி அமெரிக்கப் பேராசிரியர் ஒருவரோடு சேர்ந்து ஆய்வு செய்துள்ளார்.

பிரான்ஸ், அமெரிக்க டாக்கு மென்டரிப் படங்களில் பணியாற்றியுள்ளார். அமைச்சர் நாடகங்களில் நடித்துள்ளதோடு பி.வி.கரந்த, கிரிஷ் கார்னாட் உடன் எல்லாம் நடித்துள்ளார். அவர் முக்கிய பாத்திரமேற்று நடித்த 'கிரஹணா' என்ற கன்னடப் படம் சர்வதேச விருது பெற்றது. இத்தகைய திறமை வாய்க்கப்பெற்ற ஒருவரை ஏன் தமிழக திரைப்பட உலகம் புறக்கணிக்கின்றன்.

இவரைப்பற்றி பத்திரிகை செய்தி ஒன்று சில காலங்களுக்கு முன் கண்ணில் சிக்குண்டது. நசுருதீன் ஷா போன்று ஒரு சிறந்த குணசித்திர நடிகனாக பெயரெடுக்க வேண்டும் என்றும் தற்சமயம் தனது வாழ்வு சிரமத்தில் கழிவதாகவும் கூறியுள்ளார்.

திறமைக்கும் தமிழக சினிமா உலகிற்கும் தொடர்பு ஏதும் இல்லை என்பதற்கு சத்தியேந்திரா ஓர் உதாரணம். இங்கே துதி பாடுபவர்களுக்கும் கூழைக் கும்பிடு போடுபவர்களுக்கும் முதலிடம். தமிழக திரை உலகில் திறமைக்கு இடம் உண்டு என்ற மாயைக்குள் சிக்குண்டு அலதியுற நினைக்கும் எம்மவர்களுக்கும் தற்சமயம் அவதியுற்றுக் கொண்டிருப்பவர்களுக்கும் இச்செய்தி சமர்ப்பணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஜனநாயகப் போராட்டத்தின் சவால்களும்- 4

**சமுத்திரன்**



மேற்கு நாடுகளிலும் கிழக்கு ஆசியாவிலும் உழைப்பாளர் கூலியின் உயர்வுகள், சமூக நலன் போன்றவை உற்பத்தித்திறனின் வளர்ச்சி வீதத்துடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தன. இது ஒரு வரலாற்றுப் போக்காகும். மேற்கு ஐரோப்பாவில் தொழிலாளர் சம்பள உயர்வுகள் பெரும்பாலும் தொழிற்சங்கப் போராட்டத்தின் விளைவாகவே கிடைத்தன. கிழக்காசிய நாடுகளில் (உதாரணமாக தைவான், தென்கொரியா) சம்பள உயர்வுகள் கோரிப் போராடும் தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் இருந்த போதும் பல சந்தர்ப்பங்களில் அரசின் தலையீட்டால் தனியார் துறையில் சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டன. ஆயினும் மேற்கு ஐரோப்பாவிலும் கிழக்காசியாவிலும் சம்பள உயர்வுகளை விட அதிகமான வேகத்தில் தொழிலாளர் உற்பத்தித்திறன் வளர்ச்சி பெற்றது.

இலங்கையில் ஒரு குறிப்பிட்ட துறையின் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிப் போராடும் பட்சத்தில், அந்தத்துறையின் உற்பத்தித்திறன் வளர்ச்சி மந்தமாயிருந்தால், அதிகரிக்கும் வீதத்தில் வளராது இருந்தால் முதலாளிகள் அதைக்காரணம் காட்டி சம்பள உயர்வைத் தர மறுக்கலாம். சம்பள உயர்வு- உற்பத்தித்திறன் உறவு உபரி உழைப்பின் பெறுமதியைக் கைப்பற்றும் போராட்டத்தின் ஒரு அம்சமாகும். உற்பத்தித்திறன் வளர்ச்சி வீதம் அதிகரித்துக் கொண்டு போகும் போது சம்பள உயர்வுக் கோரிக்கைகளின் வெற்றியின் சாத்தியப்பாடுகளும் அதிகரிக்கின்றன. நடைமுறையில் இந்த வெற்றியின் பெறுமதியை தொழிற்சங்கங்களுக்கூடாக நடத்தப்படும் வர்க்கப் போராட்டங்களின் பலமும் அரசியலமைப்பும் தீர்மானிக்கின்றன. ஆகவே மொத்த உற்பத்தி வெளியீட்டு மட்டத்தில் மட்டுமன்றி உற்பத்தித் திறனிலும் துரிதமான வளர்ச்சியைக் கொண்டிருக்கும் ஒரு பொருளாதாரம் தொழிலாளர் வருமான உயர்வு மற்றும் சமூக நல சீர்திருத்தங்கள் போன்றவற்றிற்கு சாதகமான நிலைமைகள் உருவாவதற்கு அத்தியாவசியமானவைகளில் ஒன்றாகிவிட்டது. இலங்கையின் பல பொருளாதாரத் துறைகளின் உற்பத்தி சக்திகளின் பின்தங்கிய நிலைமை கூலி உயர்வு மற்றும் சமூகநல சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்லத் தடையாக அமைகிறது; இங்கு அரசியல், சமூக காரணங்களுக்காக அரசாங்கம் தலையிட்டுத் தற்காலிக சம்பள உயர்வுகளை ஏற்படுத்தலாம். ஆயினும் இதன் உண்மையான பயன்பாடும் தற்காலிகமானதே.

உதாரணமாக இலங்கைப் பெருந்தோட்டத்துறையில் 1992ல் ஒரு தடவையும் 1993ல் இரண்டு தடவைகளும் சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டன. இவை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகளாகும். அதே காலத்தில் தோட்டத் தொழிலாளருக்கு மாதத்தில் 25 நாட்கள் வேலை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தோட்டத் தொழிலாளரின் நலன்களைப் பொறுத்தவரை இவை அவசியமான மாற்றங்களே. அதேவேளை பெருந் தோட்டத்துறையின் நீண்டகாலக் குறைவிருத்தியின் விளைவாக இத்தகைய சம்பள உயர்வும் வேலை நாட்கள் பற்றிய உத்தரவாதமும் உற்பத்திச் செலவை மித மிஞ்சிய மட்டத்திற்கு அதிகரிக்கவே உதவியுள்ளது. தனியார்துறைக்குச் சொந்தமாயிருந்த காலத்திலும் பின்னர் அரசுடைமையாக்கப்பட்டிருந்த காலத்திலும் இன்னும் பெருந்தோட்டங்கள் நன்கு பராமரிக்கப்படாது அவற்றின் நீண்டகால உற்பத்தி நலன்கள் கவனிக்கப்படாத நிலையே தொடர்கிறது. இதனால் இத்தோட்டங்களில் உற்பத்தித் திறன் வளரவில்லை. உற்பத்தித்திறனின் மந்த நிலையுடன் சம்பள உயர்வு வேலைநாட்கள் போன்றவற்றின் வளர்ச்சியும் இணைந்தால் அந்தத்துறையின் லாபவீதம் பயங்கரமாக வீழ்ச்சியடையும் சாத்தியப்பாடுகள் அதிகரிக்கின்றன. இவற்றுடன் உலகச் சந்தை விலைகளும் வீழ்ச்சியடைந்தால் பெருந்தோட்ட ஏற்றுமதிகளின் போட்டித்திறனும் வீழ்ச்சியடையும். இத்தகைய நிலைமைகள் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு அமைப்புரீதியான தடைகளைப் போடுகின்றன. இந்தத்தடைகளை நீக்க பொருளாதார, தொழிற்நுட்ப முகாமை மட்டங்களில் தொடர்ச்சியான அமைப்புகள் செயற்பாடுகள் தேவைப்படுகின்றன.

பெருந் தோட்டத்துறையைப் பொறுத்தவரை சில விசேட சமூக அரசியல் பிரச்சினைகளும் உண்டு. முன்னைய அரசாங்கம் பெருந்தோட்டங்களின் முகாமையைத் தனியார் துறைக்கு மாற்றும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது. இது தோட்டங்களைத் தனியுடைமையாக்குவதை அரசியல் காரணங்களுக்காகத் தவிர்த்துக் கொள்ள உதவும் அதேவேளை முகாமையை மட்டும் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கும் ஒருவழியாகும். ஐ.தே.க. தோட்டங்களை தனியுடமையாக்காமைக்கு காரணம் தோட்டத் தொழிலாளரின் நலன் சம்பந்தப்பட்டதோ அல்லது தோட்டங்களின் உற்பத்தி நலன் சம்பந்தப்பட்டதோ அல்ல. கண்டிய விவசாயிகள், பிரதேசவாதிகளின் எதிர்ப்பைத் தவிர்ப்பதற்காகவே இந்தவழி கையாளப்பட்டது. இதன் விளைவு தொழிலாளர்களுக்கு நல்லதாயில்லை. அதேவேளை முகாமையை மட்டும் தற்காலிகமாக பொறுப்பேற்றிருக்கும் நிறுவனங்களுக்கும் இது ஊக்கமளிப்பதாயில்லை.

காலனித்துவ காலத்திலிருந்து தொடரும் பெருந்தோட்ட அமைப்பு சமூக பொருளாதார ரீதியில் காலாவதியானது என்பது பலரால் நிரூபிக்கப்பட்ட உண்மை. இலங்கையில் இந்த அமைப்புத் தொடர்வதால் இந்நாட்டின் பெருந் [illegible] ஏற்றுமதிப் பொருட்கள் உலகச் சந்தையில் போட்டித்திறனை இழக்கின்றன. இந்த அமைப்பின் நவீனமயமாக்கல் அதன் ஜனநாயக மயமாக்கலுடன் நெருங்கிய தொடர்புடையது. இவை இரண்டையும் இதுவரையிலான அரசாங்கங்கள் எதிர்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. தொண்டமான் போன்ற தனிமனிதனின் செல்வாக்கு ஜனநாயகமற்ற முறையில் வளர்ந்திருப்பதற்கு தோட்ட அமைப்பின் ஜனநாயக மற்ற தன்மையும் அடிப்படைக் காரணமாகும். பழைய அரசாங்கங்கள் எதிர்கொள்ள விரும்பாத சவாலை பொதுமக்கள் முன்னணி எதிர்கொள்ளுமா? இது பலவகையில் சந்தைத் தீர்வுகளுக்கு அப்பால்பட்ட ஒரு சவாலாகும். இங்கு வருத்தத்திற்குரிய தென்னவெனில் பெருந்தோட்டங்களின் தற்போதைய முகாமையாளர் தங்களின் பெரிய தலையிடி தொழிலாளர்கள் பிரச்சினையே எனக்கூறுவதுதான். தோட்டங்களின் நீண்டகாலக் குறைவிருத்திக்கும் அதன் பலவகையான விளைவுகளுக்கும் தொழிலாளர்கள் பொறுப்பாகிகள் இல்லை.

பெருந்தோட்டத்துறையில் மட்டுமல்ல சிறிய உற்பத்தியாளர் விவசாயத்துறையிலும் உற்பத்தித் திறனில் வளர்ச்சி ஸ்தம்பிக்க ஆரம்பித்துள்ளது. ''பசுமைப் புரட்சியின்'' தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் இப்போ மட்டநிலைக்கு வந்துள்ளன. அதேநேரம் இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளின் விலை உயர்வால் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. உற்பத்தித்திறனின் மந்த நிலையுடன் இது இணையும் சிறிய உற்பத்தியாளரின் விவசாய விருத்தியும் பாதிக்கப்படுகிறது.

இது தேசிய பொருளாதார வளர்ச்சிக்கும் விவசாயிகளின் வருமானத்திற்கும் பாதகமாக அமைகிறது. கடந்த பதினேழு வருடங்களாக திறந்த பொருளாதாரக் கொள்கை விவசாயத்தின் இருதுறைகளிலும் (பெருந்தோட்டம், சிறு உற்பத்தியாளர்) உற்பத்தி சக்திகளின் விருத்திக்கு குறிப்பிடத்தகுந்த வகையில் உதவவில்லை. இங்கு சந்தை தோல்விகளுடன் அரச கொள்கையின் தோல்விகளும் இணைந்துள்ளன. இந்தக்கால கட்டத்தில் விவசாயிகள் மத்தியில் வருமானப் பங்கீட்டின் அசமத்துவப் போக்குகளினால் பாதிக்கப்பட்டோர் தொகையும் அதிகரித்துள்ளது. விவசாயத்தைப் பொறுத்தவரை அமைப்புரீதியான சீர்திருத்தங்கள் தேவை. பெருந்தோட்ட அமைப்பின் சீர்திருத்தம், சிறு உற்பத்தியாளர் விவசாயத்தை மேலும் உற்பத்தியாளருக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் சூழலுக்கும் சாதகமான வகையில் விருத்தி செய்வதற்கான சீர்திருத்தங்கள், இவற்றிற்கு வேண்டிய தொழிநுட்பங்கள் பற்றிய முழுமையான கொள்கைத் திட்டங்களை பொதுமக்கள் முன்னணி இதுவரை முன்வைக்கவில்லை. வளர்ச்சி பெற்ற நாடுகள் தமது விவசாயத்தைத் திறந்த சந்தைக் கொள்கைகளுக்குக் கீழ்ப்படுத்தாது மானியங்களுக்கூடாகப் பாதுகாத்து வருகின்றன. ஆனால் வளர்முக நாடுகள் மானியங்களை மற்றைய பாதுகாப்புகளை நீக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இந்த நிர்ப்பந்தத்திற்கு விட்டுக் கொடுப்பதால் வரும் பாதகமான விளைவுகளை ஏற்கனவே இலங்கை விவசாயிகள் அனுபவிக்கின்றனர். எந்த அளவிற்கு எத்தகைய கட்டங்களுக்கூடாக எந்த உற்பத்தித் துறைகளில் கட்டற்ற சந்தைகளைப் பயன்படுத்துவது என்பது பற்றிய விவாதங்கள் மிக அவசியம். அரசாங்க மட்டத்தில் இவற்றைக் கையாளக் கூடிய ஆற்றல் உள்ள திட்டமிடல் நிறுவனம் தேவை. கடந்த பதினேழு வருடங்களாக நீண்டகால பொருளாதார திட்டமிடல் கவனிக்கப்படவில்லை. இதனால் அரசின் திட்டமிடல் திறனும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரை இன்றைய சவால்கள் பாரதூரமானவை. திறந்த பொருளாதாரம் என்ற பெயரில் ஐ.தே.க. பல அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கவனிக்காது விட்டது. இதன்விளைவு உற்பத்தித்திறனின் போதிய வளர்ச்சியின்மை, வறுமையின் அதிகரிப்பு வேலையில்லாதோர் தொகை 18 வீதமாக உயர்ந்தது. ஆக,ஐ.தே.க. தோற்கடிக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை.

- வரும் -

## செவல்

எதையும் சிண்டாமல்
இதயம் பரிந்ததிரும்
என் கவலையெல்லாம்
மொழி பெயர் சூட்டி
கொச்சைப்படுத்திவிடும் என்பதுதான்
அமைதியான வாழ்வை
கற்பனை செய்வேன்
கடலின் ஓரத்தில் வாடியமைத்து
என் கனவுகள்
ஆழ்கடல் செல்லும்!
ஆனால் நான்
தூக்கி யெறியப்பட்ட பாழ்பட்ட காதலன்!
அவளிற்கு தெரியாதல்ல
மெல்லிய வேதனையும் சுவடு பதிக்குமென!

என் வேதனையை
ஒரு சொல்லாக ஏவுவேன்
மலராக செல்லட்டும்.
என் பொருட்டு அவள் துயரப்படுவதை
நான் விரும்பவில்லை!

இதயம் அழுந்தி துடிக்கும்!
இனி இதமான தழுவல்கள் இல்லை!
மனம் நெகிழ்ந்த வார்த்தைகள் இல்லை!

இங்கு
எவருடைய ஓலங்களும் வேண்டாம்!
என்னிடம் எஞ்சிப்போன
நினைவுகளை நினைவில் கொணர்வேன்.
என்னிதயத்தில் இரைச்சல் இல்லை!

இன்னமும்
என்னிதயம் இசைக்கிறது
அதோ!
செவல் தெரிகிறது!
எனக்குரிய வள்ளமும் நானுமாய்....!

- அஸ்வகோஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த இதழில் 'தேசியவாதம் இனவாதமா' என்ற தலைப்பில் சரிநிகர் ஆசிரியர் பீடத்தினால் வெளியிடப்பட்டிருந்த கட்டுரை தொடர்பாக வாசகர்களது அபிப்பிராயங்களைக் கோரியிருந்தோம். இது தொடர்பாக கலாநிதி நுஃமான் அவர்கள் அனுப்பி வைத்த கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

இலங்கையின் இன்றைய பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்று காணப்பட வேண்டும். இது தொடர்பான கருத்தாடல்கள் திறந்த மனத்துடன் விரிவாகவும், ஆழமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அக்கறையுடனேயே இக்கருத்தாடலில் வாசகர்களையும் பங்கேற்கும்படி கோரியிருந்தோம்.

எமது கட்டுரையில் நிறையக் கருத்துக் குழப்பங்களும், முரண்பாடுகளும் உள்ளதாகவும், அவற்றை இங்கு எடுத்துக்காட்டி பக்கங்களை விரயமாக்க விரும்பவில்லை என்றும் நுஃமான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயினும் இதுபற்றிய கருத்தாடலில் பக்கங்கள் விரயமாகின்றன என்று கருதாமல் எல்லோரும் திறந்த மனத்துடனும், பொறுப்புடனர்வுடனும் பங்குபற்றுவதனால் மட்டுமே சரியான கருத்துக்களை சென்றடையலாம் என்று நாங்கள் நம்புகிறோம். வாசகர்கள் ஆர்வத்துடன் இக்கருத்தாடலில் பங்குகொள்ள வேண்டுமென மீண்டும் அழைக்கிறோம்.

சரிநிகர் ஆசிரிய பீடம்

# இனவாதம் இல்லாமல் இனத்தேசியவாதம் இல்லை!

## கலாநிதி எம்.ஏ.நுஃமான்

சரிநிகர் ஆசிரியபீடத்தினர் எழுதியுள்ள (சரிநிகர் 24.11.94) தேசியவாதம் இனவாதமா? என்ற கட்டுரையில் நிறைய கருத்துக் குழப்பமும் முரண்பாடுகளும் உள்ளன. அவற்றை இங்கு எடுத்துக்காட்டி பக்கங்களை விரயமாக்க நான் விரும்பவில்லை. ஆயினும் இன்றைய சூழலில் இவ்விவாதம் மிகவும் முக்கியமானது என்ற வகையில் இதுபற்றிய எனது கருத்தை இங்கு சுருக்கமாக எழுத விரும்புகின்றேன்.

தேசியவாதம் என்ற சொல் ஆங்கிலத்தில் வழங்கும் Nationalism என்ற பதத்துக்கு நிகரானதாக தமிழில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது ஏன்பது யாவரும் அறிந்ததே. ஆயினும் 18ஆம், 19ம் ஆம் நூற்றாண்டுகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு ஐரோப்பாவில் தோன்றிய தேசியவாதமும் 2ஆம் உலக யுத்தத்துக்கு முன்பும் அதற்கும் பின்பும் மேலைத்தேய ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக காலனித்துவ நாடுகளில் தோன்றிவளர்ந்த தேசியவாதமும், 2ஆம் உலக யுத்தத்தின் பின் விடுதலையடைந்த பல்லின சமூகங்களைக் கொண்ட நாடுகளில் ஏற்பட்ட தேசியவாதமும் சாராம்சத்தில் வேறுபட்டவை என்பதை நாம் முதலில் மனங்கொள்ள வேண்டும்.

ஐரோப்பாவின் தேசியவாதம் பெரும்பாலும் ஒரே இனம, ஒரே மொழி, ஒரே பிரதேசம் என்றவகையில் வாழ்ந்த மக்களை ஒரே அரசின் கீழ்க் கொண்டு வந்து தேசிய அரசுகளை (Nation state) உருவாக்க உதவியது. காலனித்துவ நாடுகளில் எழுந்த தேசியவாதம் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, விடுதலை என்ற குறிக்கோளை நோக்கி மக்களை ஒன்று திரட்டி விடுதலைக்கு வழிகோலியது. பல்லின மக்களைக் கொண்ட விடுதலை பெற்ற நாடுகளில் ஏற்பட்ட தேசியவாதம் வளர்ச்சி குன்றிய நாட்டின் பொருளாதார வளங்களைப் பங்குபோடுவதில் ஏற்பட்ட போட்டி காரணமாக இனமோதல்களுக்கும் பிரிவினைக்கும் வழிகோலியது.

விடுதலைபெற்ற பல்லின சமூகங்களில் தோன்றிய தேசியவாதத்தை பிற தேசியவாதங்களில் இருந்து பிரித்தறியும் வகையில் இனத்தேசியவாதம் Ethno Nationalism என்ற சொல்லை சமூக விஞ்ஞானிகள் சமீபகாலமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது பொருத்தமான சொல் என்றே நான் கருதுகின்றேன். இவ்வகையில் சிங்கள தேசியவாதம், தமிழ்த் தேசியவாதம் என்பதெல்லாம் இனத்தேசியவாதமே என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். நமது சூழலில் தேசியவாதம் பற்றிப் பேசும் போது இந்த வேறுபாடு முக்கியமானது.

இனத்தேசியவாதத்துக்கும் இனவாதத்துக்கும் என்ன வேறுபாடு? இரண்டுமே ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. பிரிக்க முடியாதவை. இனவாதம் இல்லாமல் இனத்தேசியவாதம் இல்லை. இதைக் கருத்தில் கொள்ளாமல் இவற்றை வேறுபடுத்த முனைந்து சரிநிகர் ஆசிரியர் பீடம் குழம்பிப் போய் நிற்பதை அவர்களது கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

இனவாதம் என்ற சொல் தமிழில் Racism, Communalism என்ற இரு வேறுபட்ட பொருள்தரும் ஆங்கிலப் பதங்களுக்கு நிகராகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இங்கு நான் Communalism என்ற கருத்திலேயே இனவாதம் என்ற சொல்லைக் கையாள்கின்றேன். சுருக்கமாகச் சொன்னால் இனவாதம் என்பது ஒரு குறிப்பிட்ட இனக்குழுவின் (Ethnic Community) நலன்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருத்து நிலையாகும். நடைமுறையில் மற்ற இனங்களின் நலன்களுக்கு எதிரானதாகவே இது அமைகின்றது. இனவாதம் அரசியல் ஆதிக்கத்துக்கான கருத்தியலாக வளர்ச்சியடையும் போது இனத்தேசியவாதமாக முதிர்ச்சியடைகின்றது. அவ்வகையில் இனத்தேசியவாதம் ஒரு குறிப்பிட்ட இனத்தின் சுயாதீனத்தை அல்லது அரசியல் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் ஒரு அரசியல் கருத்துநிலையாகும். ஆகவே இனத்தேசியவாதம் என்பது இனவாதத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைவது என்பதை நாம் இங்கு முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனினும் நமது அறிவாளிகள் அரசியல்வாதிகள் பலரைப் போல சரிநிகர் ஆசிரிய பீடமும் இனவாதம் விரும்பத்தகாதது, அருசையானது என்று கருதும் அதேவேளை, இனத்தேசியவாதத்தைப் புனிதமானதாகக் கருதுவது ஆச்சரியமானது. தன்னை ஒரு இனவாதி என்று வெளிப்படையாகக் கொள்வதற்கு இன்று யாருமே முன்வருவதில்லை. அதேசமயம் இனத்தேசியவாதத்தை ஆதரித்து எழுதுவதற்கும் பேசுவதற்கும் இவர்கள் தயங்குவதில்லை. இது ஆச்சரியமானதெனினும் இதனை நாம் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். இனமுரண்பாடு முதிர்நிலை அடையும் போது தான் இனவாதம் இனத்தேசியவாதமாக வளர்ச்சியடைகின்றது. அப்பொழுது இனத்தேசிய வாதம் குறிப்பிட்ட இனக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று அச்சமூகத்தின் விடுதலைக் கருத்தியலாகவும் மாறி வருகின்றது. பின் அது புனிதத்துவம் பெற்று வருகின்றது. தன் இனத்தின் விடுதலைக்காக எதிரி இனத்துடன் போராடி உயிர்த்தியாகம் செய்வது அவ்வினத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரினதும் புனிதக் கடமை என்ற நிலை தோன்றி வருகின்றது. விடுதலையின் பேரால் எல்லா அக்கிரமங்களும் நியாயப்படுத்தப்பட்டு வருகின்றது. இரத்தம் விடுதலை வேள்வியின் ஆகுதியாகி வருகின்றது. இரத்தம் சிந்துவோர் மதிப்புக்குரிய வீரத் தியாகிகளாகி விடுகின்றனர். கிழக்கு ஐரோப்பாவில் இன்று இதனைக் காண்கின்றோம். ஆபிரிக்காவில் இதனைக் காண்கின்றோம்; ஆசிய நாடுகளில் இதனைக் காண்கின்றோம். உள்நாட்டு இனமுரண்பாட்டில் எண்ணெய் ஊற்றி எரியவிட்டு ஆயுதம் விற்றுப்பிழைக்கும் மேற்கு வல்லரசுகளைத் தவிர சிந்திக்கும் மனிதனுக்கு இதில் திருப்திப்பட எதுவுமே இல்லை.

> சிங்கள பேரினவாதம் சிறுபான்மை மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைகளும் அக்கிரமங்களும், அதன் கருப்பையில் இருந்து பிறந்து வளர்ந்த தமிழ் தேசியவாதம் அதற்கு எவ்வகையிலும் சளைக்காத விதத்தில் புரிந்த அட்டூழியங்களும் அக்கிரமங்களும், அதன் எதிர்வினையாக விளிப்படைந்த முஸ்லீம் இனவாதத்தின் எழுச்சியும் அது தன் பங்கிற்கு ஒரு நசி பட்ட பூனை விறாண்டுவது போல விறாண்டிய செய்திகளும் யாரும் அறிந்தவையே.

இலங்கையில் இனவாதம் இனத்தேசியவாதமாக வளர்ச்சியடைந்த வரலாற்றை நான் இங்கு விரித்து எழுத வேண்டிய அவசியம் இல்லை. சிங்கள பேரினவாதம் சிறுபான்மை மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்கு முறைகளும் அக்கிரமங்களும், அதன் கருப்பையில் இருந்து பிறந்து வளர்ந்த தமிழ்த் தேசியவாதம் அதற்கு எவ்வகையிலும் சளைக்காத விதத்தில் புரிந்த அட்டூழியங்களும் அக்கிரமங்களும் அதன் எதிர்வினையாக விளிப்படைந்த முஸ்லீம் இனவாதத்தின் எழுச்சியும் அது தன் பங்கிற்கு ஒரு நசிபட்ட பூனை விறாண்டுவது போல விறாண்டிய செய்திகளும் யாரும் அறிந்தவையே. ஆனால், இங்கு முக்கியமானது இந்த இனவாத அல்லது இனத்தேசியவாத செயற்பாடுகள் பற்றிய நமது மதிப்பீடுகள் எத்தகையன என்பதாகும். சரிநிகர் ஆசிரியர் பீடம் கருதுவதுபோல் தமிழ்த் தேசியவாதத்தின் மீதான சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறைச் செயற்பாடுகள் அதற்கே இயல்பான கொடிய குணாம்சம் என்றும் தமிழ்த் தேசியவாதத்தின் அத்தகைய செயற்பாடுகள் எதிர்ப்புப் போராட்டத்தில் அது புரிந்த தவறுகள் என்றும் இனங்காண்பது எந்தளவு சரியானது? இது முற்றிலும் சார்பு நிலைக் கண்ணோட்டமாகும். உண்மையில் சிங்களப் பெரும் தேசியவாதம் சிறுபான்மையினர் மீது கட்டவிழ்த்துவிட்ட கொடிய அடக்குமுறைகள் எப்படி அதன் உள்ளார்ந்த குணாம்சங்களோ அப்படியே ஆயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள, முஸ்லீம் மக்களைக் கொன்றொழித்ததும், வடக்கில் தங்கள் பாரம்பரியத் தாயகத்தில் வாழ்ந்த முஸ்லீம்களை முற்றாக வெளியேற்றியதும் தமிழ்த் தேசிய வாதத்தின் உள்ளார்ந்த குணாம்சமாகும். இனத் தேசியவாதம் முதிர்நிலை அடையும் போது அது இத்தகைய வடிவத்தையே எடுக்கின்றது. அதை வெறும் தவறுகள் எனக் கருதுவது சுத்த அபத்தமாகும். இனத் தேசியவாதப் போராட்டங்கள் நடைபெறும் நாடுகளில் எல்லாம் பொஸ்னியாவில் பாலஸ்தீனத்தில் ஆபிரிக்க நாடுகளில் இந்தியாவில் நாம் இதனைக் கண்கூடாகக் காண்கின்றோம். இனத் தேசியவாத அல்லது இனவிடுதலைக் கருத்தியல் பிற இனசங்காரத்தைத் தயக்கமின்றித் தன்னுள் கொண்டிருக்கும். என்பதையே நமது சமகால வரலாறு உணர்த்துகின்றது. ஆகவேதான் பேரினவாதம் அதன் குழந்தையான சிற்றினவாதம் ஆகிய எல்லா இனவாத, இனத்தேசிய வாதக் கருத்தியல்களையும் நாம் நிராகரிக்க வேண்டியுள்ளது.

இலங்கை போன்ற பொருளாதார வளர்ச்சி குன்றிய பல்லின சமூகங்களைக் கொண்ட ஒரு நாட்டில் இன முரண்பாடுகளும், மோதல்களும் பிரிவினையும் உண்மையான இன விடுதலைக்கும் விமோசனத்துக்கும் வழிவகுக்கும் என்று கருத இடம் இல்லை. அது நிலைமையை மேலும் சிக்கலாக்கவே உதவும் என்பது வெளிப்படை. இந்நிலையில் இனவாதத்தை முறியடித்து இனங்களுக்கிடையே உண்மையான சமத்துவத்தையும் சமூகநீதியையும், ஜனநாயகத்தையும் நிலைநிறுத்தி துரித பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலுவதே நிலையான சமாதானத்துக்கும் விடுதலைக்கும் வழிவகுக்கும்.

கடந்த பல ஆண்டுகளாக ஏராளமான சிங்கள புத்திஜீவிகளும் ஆய்வறிவாளர்களும், பத்திரிகையாளர்களும் உயிராபத்தையும் பொருட்படுத்தாது சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக தீவிர பிரச்சாரம் செய்து வந்தார்கள். இவ்வகையில் ராவய, யுக்திய, விவரண, மாவத்த போன்ற பத்திரிகைகள் சஞ்சிகைகள் பெரும்பணியாற்றியுள்ளன. இலங்கையின் சமகால அரசியல் வரலாற்றில் முதல் முறையாக சிங்கள மக்கள் சிங்கள பேரினவாதத்தை அரசியல் ரீதியில் ஓரங்கட்டியுள்ளனர். அதனை மீண்டும் மேலெழும்பாது பார்ப்பது நமது கடமையாகும். இவ்வேளையில் சிங்கள பெருந்தேசிய வாதத்தின் குழந்தையான தமிழ்த் தேசியவாதம் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்பதையே நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். ●

www.tamilarangam.net



# முஸ்லீம் தேசிய எழுச்சியும் முஸ்லீம் தலைமைத்துவமும்


ஓட்டமாவடி எம்.எச்.எம்.நௌபல்

முஸ்லீம் தேசியத்தின் எழுச்சியானது ஒரு தசாப்த காலமாக அபிவிருத்தியடைந்து வருகின்ற ஒன்றாக காணப்பட்டாலும், தற்போதைய புதிய ஆட்சியில் ஒரு சோர்வு நிலையையும் மந்தகதியையும் உள்ளடக்கிய ஒன்றாகவே காணப்படுகின்றது எனலாம். முஸ்லீம் தேசிய எழுச்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடும், பங்கும் மிகவும் பிரதான இடத்தை வகித்து வந்துள்ளது. ஏனெனில் முஸ்லீம் காங்கிரஸின் அரசியல் சமூக மயப்படுத்தல் முஸ்லீம் சமூகத்தில் ஒரு தீவிரப் போக்கை ஏற்படுத்தியது. முஸ்லீம் தேசிய எழுச்சிக்கு இன்னுமோர் பிரதான காரணம் தமிழ் தேசியவாதத்தினால், மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களும், ஒடுக்குமுறைகளுமாகும். ஆரம்பகாலங்களில் ஆமை வேகத்தில் வளர்ந்து வந்த தமிழ் தேசியவாதத்தின் ஒடுக்குமுறைகள் காலப்போக்கில் மிகவும் மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட தொன்றாகவும், பாஸிஸம் நாஸிஸம் என்பவற்றின் உச்ச நிலையாகவும் மாறியதை நாம் இலகுவில் மறக்க முடியாது. இவற்றில் வரலாறுகளில் எழுதவேண்டிய நிகழ்ச்சிகளாக,

1. 1985ல் இடம்பெற்ற சித்திரைக் கலவரம்
2. காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள்
3. ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலைகள்
4. சம்மாந்துறைப் படுகொலைகள்
5. அழிஞ்சிப் பொத்தானை படுகொலைகள்
6. பள்ளித்திடல் படுகொலைகள்
7. பொத்துவில் முஸ்லீம் பயணிகளின் மீது இருமுறை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஆகியன இடம்பெறுகின்றன.

முஸ்லீம் தேசிய எழுச்சியின் குவிமையம் உளவியல் காரணமாகும். தாங்கள் ஒரு தேசிய இனம் என்னும் வெளிப்படுத்துகையின் பிரதிபலிப்பே முஸ்லீம் மாகாண கோரிக்கையாகும். முஸ்லீம் மாகாண கோரிக்கை என்னும் போது அதன் பிதா மகன் முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் நாயகம் எம்.ஐ.எம்.மொகிதீன் அவர்களாகும். ஆனால் இன்றைய அரசியல் அரங்குகளில் முஸ்லீம் மாகாண கோரிக்கையின் கதாநாயகர்களாக முஸ்லீம் காங்கிரஸே பேசப்பட்டு வருகின்றது. இதுபற்றிய யோசனை 1984ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அக்கரைப்பற்றில் உள்ள எம்.ஐ.எம். மொகிதீனின் வீட்டில் வைத்து அவரால் முன்வைக்கப்பட்டது. அச்சமயம் அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் இஸ்மாயில் ஆதம்லெப்பை (சட்டத்தரணி) அவர்களும், முன்னாள் முஸ்லீம் காங்கிரஸ் தவிசாளரும் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் அக்கரைப்பற்று தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி எம்.எச்.சேகு.இஸத்தீன் அவர்களும் இதற்கு ஆதரவாக இருந்தார்கள்.

ஆனால் முஸ்லீம் காங்கிரஸானது 1987 ல் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் போது ஏற்படாகிய மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரத்திற்கு ஒரு கேடயமாகவே முஸ்லீம் மாகாண சபை கோரிக்கையை முன்வைத்தது. அதன்படி தீவிர பிரச்சாரங்களை மேற்கொண்டு அந்த ஆண்டு நடைபெற்ற வட, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 17 உறுப்பினர்களை வென்றெடுத்தது. இந்த வெற்றியானது முஸ்லீம் தேசிய எழுச்சியில் தீவிரப் போக்கும், முஸ்லீம் காங்கிரஸின் வளர்ச்சியில் தீவிரப் போக்கும் ஏற்படுவதற்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தது எனலாம்.



இன்னொரு கோணத்தில் ஆராய்வோமாயின் இந்த இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் முஸ்லீம்களின் பிரச்சினைக்கு ஏதாவது ஒரு தீர்வு இருந்ததா? இல்லவே இல்லை. இதை முஸ்லீம் காங்கிரஸ் விமர்சித்தது. அப்படியிருந்தும் அது மாகாண சபைத்தேர்தலில் பங்கு கொண்டமையானது முஸ்லீம்களின் பிரச்சினைக்கான தீர்வுகளில் அதன் இரட்டைத்தன்மையினையும் அசமந்தப் போக்கையும் வெளிக்காட்டியது எனலாம். பின்னர் முஸ்லீம்க்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று அது சபைக்கூட்டங்களைப் பகிஸ்கரித்தமை அதன் அரசியல் வினோதத்தை வெளிப்படுத்தியது.

பின்னர் 1989ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 4 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியது. தெரிவு செய்யப்பட்ட 4 உறுப்பினர்களிலும் இருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர்களாக மாறி தலைவரை பகிரங்கமாக எதிர்க்கத் தலைப்பட்டனர். இதேயாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேரினவாதக் கட்சி இரண்டையும் ஆதரிக்கப் போவதில்லை, நடுநிலைமையே வகிக்கும் என அதன் அரசியல் அதியுயர் பீடம் முடிவெடுத்து விட்டு ஒரு பக்கச் சார்பாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தது மட்டுமின்றி மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக் பிரேமதாஸ அவர்கள் வருவதற்கும் பிரார்த்தனைகள் செய்தது. அந்தக் காலகட்டத்தில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டார்களே ஒழிய முஸ்லீம்களின் பிரச்சினைக்கான தீர்வில் உன்னிப்பாக இருக்கவில்லை என்றே கூற வேண்டும். அக்கால கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்த தீவிர உறவால் முஸ்லீம் காங்கிரஸின் வருடாந்த மகாநாடுகளுக்கு பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் சமூகமளித்தனர்.

தற்போதைய புதிய ஆட்சிக்கு வருவோம். ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமைத்துவத்தில் தேர்தல் ஒப்பந்தப்படி ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பங்காளி ஆகி இருக்கின்றது. இந்த ஆட்சியில் இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பும் முக்கிய அம்சங்களாக காணப்படுகின்றன. இவை இரண்டையும் நிறைவேற்றுவதற்காக வேண்டி அரசியல் அமைப்பு மாற்றம் செய்யப்படவுள்ளது. ஆனால் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிட வேண்டும். இப்போது இனக்கலவரமானது மூப்பரிமாணத்தன்மையுடையதாக மாற்றமடைந்துள்ளது. அதாவது சிங்கள - தமிழ்க் கலவரம் மட்டுமன்றி தமிழ் முஸ்லீம் கலவரமும் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினைக்கான தீர்வாக சமஸ்டி முறையே அமையும் என்கின்றனர் பல அரசியல்வாதிகள்.

ஆனால் முஸ்லீம்களுக்கு தீர்வாக முஸ்லீம் கவுன்ஸில் ஒன்று வழங்கப்பட வேண்டுமென்று புளொட் இயக்க பிரதித்தலைவர் கரவை கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இருந்தும் முஸ்லீம்களின் பிரச்சினைக்கு தீர்வாக என்ன வழங்கப்படவிருக்கின்றது. முஸ்லீம் காங்கிரஸ் என்ன கோரிக்கையை முன்வைத்துள்ளது? வட, கிழக்கில் உள்ள முஸ்லீமகள் குறிப்பாக கிழக்கு முஸ்லீம்கள் எதிர்பார்ப்பது தங்களுக்கு தனியான முஸ்லீம் அதிகார அலகு வழங்கப்பட வேண்டும். இந்த தனியான முஸ்லீம் அதிகார அலகு வெறும் சம்பிரதாய பூர்வமானதாக வழங்கப்படக்கூடாது, அது பின்வரும் அம்சங்களை மிகப் பிரதானமாக உள்ளடக்கியிருக்க வேண்டும்.

1. நிலப்பரப்பு
   அ.விவசாய நிலங்கள்
   .குடியேற்ற நிலங்கள்
   இ.விவசாயத்தை மையமாகக் கொண்ட கைத்தொழில் வலயங்களை உருவாகக் கூடிய நிலங்கள்.
2. முஸ்லீம் அதிகார அலகின் சனக் கொள்கையாகும்.
   சனக்கொள்கை என்பது முஸ்லீம் அதிகார அலகில் வரையறை செய்யப்பட்ட மாகாணசபை, பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களில் மாற்றங்களை செய்ய முடியாமல் திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்துதல் வேண்டும்.
3. முஸ்லீம்களின் பாதுகாப்பு:
   முஸ்லீம் அதிகார அலகில் தனியான முஸ்லீம் பாதுகாப்பு பிரிவு ஒன்று வழங்கப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.
4. சமய, கலாசார, கல்வி பொருளாதார விடயங்களில் சட்டவாக்கத் தத்துவம் வழங்கப்பட வேண்டும்.

இவற்றை நாம் முன்வைக்கின்றபோது இக்கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கடமைப்பாடு யாருடையது, இதற்காக முஸ்லீம் காங்கிரஸின் அதிருப்தியாளர்களை உள்ளடக்கிய முஸ்லீம் கட்சியொன்று தேவையில்லை, இவற்றை முஸ்லீம் காங்கிரஸ்தான் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அடுத்த அம்சம் அமைச்சர் அஷ்ரப் - சந்திரிகா ஒப்பந்தம். அதில் முஸ்லீம்களின் பிரச்சினைக்கான தீர்வுகளில் முஸ்லீம்களுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்கள் என்னவென்று பார்ப்பதற்கு முன்னர், திரு.லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் சொல்லிவிட்டார். அஷ்ரப் - சந்திரிகா ஒப்பந்தம் ஒரு தேர்தல் கூட்டு உடன்படிக்கை மட்டுமே ஒழிய அது முஸ்லிம்களுக்கான தீர்வுகள் பற்றி எதனையும் குறிப்பிடவில்லை என்று. ஆனால் தேர்தல் பிரச்சார மேடைகளில் அமைச்சர் அஷ்ரப் பிரசாரம் செய்த போது, சந்திரிகா- அஷ்ரப் ஒப்பந்தம், தொண்டா- அஷ்ரப் ஒப்பந்தம் சானக - அஷ்ரப் ஒப்பந்தம் இவையெல்லாம் முஸ்லீம் மக்களின் பிரச்சினைக்கான திறப்பு என்றார்.

இது ஒருபுறம் இவ்வாறிருக்க யாழ்ப்பாணம் சென்ற தூதுக்குழுவில் ஏன் முஸ்லீம் ஒருவர் அனுப்பப்படவில்லை என்பதற்கு பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தகுதியான முஸ்லீம் ஒருவர் இல்லையென்று குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் எதனைக் காட்டுகின்றது எனின் ஆட்சியில்தான் மாற்றம் ஏற்படுகின்றதே ஒழிய கருத்துக்களில் எவ்வித மாற்றமும் கிடையாது என்பதாகும்.

இந்நிலைமையில் தான் அமைச்சர் அஷ்ரப் சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்க வேண்டும். ''நான் முஸ்லீம் அமைச்சைக் கோரவில்லை. முஸ்லீம் திணைக்களத்தைதான் கோரினேன்'' என்ற அறிக்கைகளை இனியும் விடக்கூடாது. இது ஒரு தகுந்த சந்தர்ப்பம் ஆகும். அஷ்ரப் அவர்கள் முஸ்லீம் அதிகார அலகுக்கான முன்வரை முன்வைக்க வேண்டும். முஸ்லீம் அதிகார அலகுக்கான தீவிரப்பிரசாரங்களையும் மேற்கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை அமைச்சர் அஷ்ரப் பயன்படுத்த தவறுவாராயின் முஸ்லீம் தேசிய உணர்வு வேறுதிசை நோக்கி செயற்படத் தொடங்கலாம்.

இன்று இல்லாவிட்டாலும் 25 வருடங்களின் பின்னர் கூட முஸ்லீம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி தமது சமூகத்தின் விடுதலைக்காக போராடக் கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும். எனவே இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு இடங்கொடாமல் இந்த அலையிலேயே முற்றாக அமைச்சர் அஷ்ரப் அவர்கள் மூழ்கிப் போகாமல் இனி ஏற்படுகின்ற அலைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டும். இல்லாவிடின் அமைச்சர் அஷ்ரப் பேசிய இனப்பிரச்சினைக்கான திறப்பு உருக்கி செதுக்கப்பட்டு முஸ்லீம் சமூகத்தின் விடுதலைக்கான ஆயுதமாக மாற்றப்படும். அந்த திறப்பு துரதிர்ஷ்டவசமாக பல முஸ்லீம் இளைஞர்களையும் பலி கொடுக்கும். எனவே இப்படியொரு நிலைமை முஸ்லீம் சமூகத்தில் தோன்றுவதற்கு சந்தர்ப்பத்தை கொடுக்கமல் இந்த சந்தர்ப்பத்தை தமக்கு சாதமாக்கிக் கொள்ள வேண்டும்.

இறுதியாக சிங்கள பெருந்தேசியவாதத்திற்கு நாம் மீண்டும் ஞாபகமூட்ட வேண்டிய விடயம் என்னவெனில் இந்த நாடு ஒரு மொழிகவே தான் இருக்க வேண்டுமென்றால் அது இரு நாடுகளே தான். மாறாக ஒன்றுக்கு மேற்பட்ட மொழியென்றால் அது ஒரேயொரு நாடாகவேதான் இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்நாட்டில் மற்றவர்களுக்கு காணிகொடுப்பதுபோல் எங்களுக்கும் காணி வேண்டும். எங்களுக்குத் தொழில் வழங்கி எங்கள் உயிரைக் காக்கும் தேயிலையை அழித்து, திட்டமிட்ட குடியேற்றம் வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்தே இப்போராட்டம் நடந்தது. இவ்வளவு காலமும், மலையக மக்களின் எண்ணத்தில் உதிக்காத இக்கோரிக்கையை முன்வைத்து எழுந்த இப்போராட்டம் மலையகத்தின் திருப்பு முனையாகக் கருதப்பட்டது. மக்கள் துடிப்புடன் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். முறியடிக்க முனைந்தும் முடியாமல், துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது சிவனு, லெட்சுமணன் என்ற இரு தொழிலாளர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி துடி துடித்து மாண்டனர். இச்

அடைந்தால் அது மலையக சமூகத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என எண்ணிய திரு. இரா.சிவலிங்கம், திரு. எஸ்.தொண்டமானின் வெற்றிக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

தேர்தலில் திரு.எஸ்.தொண்டமான் வெற்றி பெற்றார். மலையகம் தங்கள் தாயகம்; அந்த மண்பறிபோவதைத் தடுத்து நிறுத்தும் போராட்டத்தின் தியாகச் செம்மல்களான சிவனு-லெட்சுமணன் செய்த தியாகம் மலையகத்தின் உரிமைப் போராட்டத்திற்கு வழிவகுக்காமல் இ.தொ.காங்கிரஸின் தேர்தல் வெற்றிக்கு வழிவகுத்தது. தேர்தல் வெற்றியோடு உயிர்த்தியாகம் செய்த தியாகிகளை மறந்து விட்டனர். 10 ஆண்டுகளுக்குப் பின்னர் ஈழமாணவர் அமைப்பு (EROS) அவர்களின் கல்லறைக்கு மரி

**மலையக இளைஞர் பேரவை:**

மலையக மக்களில் படித்த இளைஞர்கள் மத்தியில் உருவாகிய அமைப்புகளைப்போன்று தோட்டத்தில் தொழில் புரியும் இளைஞர்கள் மத்தியிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் 'மலையக இளைஞர் பேரவை' 1968ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி கொட்டக்கலையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பினை திருவாளர்கள் ஜி.ராமசாமி, சி.வி.நாதன், இள நாகலிங்கம், ஆர்.ரட்ணராஜா, எஸ்.செல்வராஜா ஆகியோர் அமைத்தனர்.

தொழிலாளர் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டும்; இலங்கையில் இயங்கி

மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள் 12

# தேர்தல் வெற்றியோடு சிவனு - லட்சுமணன் தியாகத்தை மறந்த இ.தொ.கா.

செய்தி காட்டுத் தீபோல் எங்கும் பரவியது. மக்கள் போராட்டக் களத்திற்கு அணி அணியாக புறப்பட்டுச் சென்றனர். சென்ற மக்கள் வழியில் வழிமறிக்கப்பட்டு, சைக்கிள் சங்கிலியாலும், கத்தி, கம்புகளினாலும், பேரினவாதிகளால் தாக்கப்பட்டனர். பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து, ஊர்வலம் நடாத்தி தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். பள்ளிப் பாலகர்கள் என்றும் பாராது ஊர்வலத்தை அடித்துக் கலைத்தனர். அடிபட்டு, மிதிபட்டு, துயருற்ற, மாணவ - மாணவியர் நெஞ்சத்தில் ஒரு வைராக்கியமே ஏற்பட்டது.

சிவனு-லெட்சுமணனின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள வந்த மக்கள் தாக்குதலுக்கு இலக்காகியும் துணிவுடனும் நெஞ்சுரத்துடனும் முகம் கொடுத்து வீரத்துடன் கலந்து கொண்டனர்.

இந்த இறுதிக் கிரியைகளில் மலையகத்தின் எல்லா அமைப்புகளும் வேற்றுமை பாராது கலந்து கொண்டன. மக்களின் உணர்வுகளைக் கண்டு திகைத்து நின்றனர்; இந்த உணர்ச்சிமிகு சம்பவத்தை இ.தொ. காங்கிரஸ் தனது தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்த எண்ணியது. உயிர்நீத்த இருவரினதும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட மக்கள் கூட்டத்தை அப்படியே திசைதிருப்பினர். இச்சம்பவத்தால் மலையக மக்களின் ஒற்றுமை வலியுறுத்தப்பட்டது. மலையகத்தின் பெரிய அமைப்பான இ.தொ.காங்கிரஸின் சக்தியையும்; தொண்டமானின் தலைமையையும் பலப்படுத்தினால் தான் மலையக மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். திரு. எஸ்.தொண்டமானின் வெற்றி மலையக மக்களின் உரிமைக்குக் கிடைக்கும் வெற்றியாகும். இந்நாட்டில் மலையக மக்கள் சம உரிமையுடன் வாழ இ.தொ.காங்கிரஸ் பலவீனப்படாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணம் உருவாக்கப்பட்டது. இ.தொ.கா. பலவீனம்

யாதை செய்து நினைவு கூர்ந்தது.

சிவனு-லெட்சுமணனின் உயிர்த்தியாகம் திரு. இரா.சிவலிங்கத்தின் முழுநேர அரசியல் பிரவேசத்தைத் தடுத்து விட்டது. மலையக எழுச்சிக்கு அத்திவாரமிட இருந்த சந்தர்ப்பம் கை நழுவிப் போய்விட்டது. சிவனு-லெட்சுமணனால் உந்தப்பட்ட எழுச்சி அலை மழுங்கடிக்கப்பட்டது.

இவ் அமைப்பின் முன்னோடிகளுக்கு, அறிவும், துணிவும், செயற்திறனும் இருந்த போதிலும், முழுநேர சமூகப்பணிபுரிய அவர்களின் பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. இந்த அமைப்பில் செயல்பட்டவர்கள், பெரும்பாலானோர், அரசாங்க ஊழியர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்தது காரணம் எனலாம்.

இதே காலகட்டத்தில் இரத்தினபுரி, பலாங்கொட, பதுளை போன்ற பகுதிகளில் வேறு இளைஞர் அமைப்புகள் செயல்பட்டு வந்தன. **''முத்தமிழ் மன்றம்''; மலையக இளைஞர் பேரவை''**, அவைகளுள் சில வாகும். இவைகள் அப்பகுதியில், கலை இலக்கியத் துறையில் அதிக நாட்டம் கொண்டு செயற்பட்டன.

**வி.ரி.தர்மலிங்கம்**

மலையக இளைஞர் முன்னணி தனது குறுகிய கால செயற்பாட்டில் மலையக வரலாற்றில் இடம்பெறக் கூடிய அளவு பெரிய சாதனைகள் புரியாவிட்டாலும் மலையகத்தின் எதிர்பார்ப்பான கல்வி அபிவிருத்திக்கான அடிக்கல்லை நாட்டியது. மலையக இளைஞர் முன்னணி மலையகத்தில் உருவாக்கிவிட்ட கல்வித்தாகத்தை இன்றும் தீர்த்து வைக்க முடியாமல் திணறிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். இம் முன்னணி அக்காலகட்டத்தின் தேவையை முன்வைத்து இயங்கி வந்தது. 1977ம் ஆண்டு தேர்தலுக்குப் பின்வந்த அரசியல் அலை முன்னணியையும் ஒதுக்கியது.

வந்த இடதுசாரி அமைப்புகளுடன் இணைத்து தொழிலாளர் விவசாய அரசை உருவாக்க வேண்டும்; தோட்டப்பகுதியை மையமாகக் கொண்டு இயங்கும் தொழிற்சங்கங்களை ஒரு பொது கொள்கைத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து அதன் ஊடாக மலையக சமூக முன்னேற்றத்திற்காகப் பணிபுரிய வேண்டும்; மலையகத்தில் கலைகலாசார உயர்வுக்கு வழிவகுக்க வேண்டுமென்ற கொள்கைகளைக் கொண்டு இந்த அமைப்பு செயற்பட்டது.


இந்த அமைப்பு கொட்டகலை பொகவந்தலாவ, ரட்ணபுர காவத்த பூண்டுலோயா ஆகிய பிரதேசங்களில் இயங்கி அப்பிரதேசங்களில் கலந்துரையாடல்கள், கவிதை அரங்குகள், பொதுக்கூட்டங்கள், பட்டிமன்றங்கள், விவாத அரங்குகளை ஏற்பாடு செய்தும் பத்திரிகை நடத்தியும் கொள்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றனர்.

1968ம் ஆண்டிற்கு முன்பிருந்த இரத்தினபுரி பிரதேசத்தில் **முத்தமிழ் மன்றம்** என்ற அமைப்பு இலக்கிய பணிகளில் ஈடுபட்டு வந்தது. **திருவாளர்கள் லாசரஸ், வி.எல். பெரேரா, எஸ்.கந்தையா** ஆகியோர் இந்த அமைப்பின் முன்னணியிலிருந்து செயற்பட்டனர்.

மலையக இளைஞர் பேரவை' 1969இல் மயிலடியில் நடாத்திய ஓர் இலக்கிய விழாவிற்கு பிரதம அதிதியாக திரு.வி.எல்.பெரேராவை அழைத்திருந்தனர். இவ்விழாவின் சிறப்பையும் பேரவைக்கு இருந்த மக்கள் ஆதரவையும் கண்ட திரு.வி.ஈல்.பெரேரா மலையக இளைஞர் பேரவையுடன் இணைந்து கொண்டார். அவருடன் முத்தமிழ் மன்றமும் இணைந்து கொண்டது. திரு.வி.எல்.பெரேரா மலையக இளைஞர் பேரவையின் முக்கியஸ்தர்களுள் ஒருவராகிச் செயற்பட்டார். பேரவையின் பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

- வரும் -

# போய் வருகிறேன்.



வெள்ளை அலரி மரங்களை
நான் வெறுக்கிறேன்
ஏனென்றால்
அதன் அடியில் கிடத்தியும்
தொங்கவிட்டும் தான்
என் வேதனையின்
அமோக விளைச்சலை
அவர்கள்
அறுவடை செய்து
வேடிக்கை பார்த்தார்கள்

மோடு கழன்று
சிதைந்த கட்டங்களையும்
செங்கல் தூளும், ஓட்டுத் துண்டுகளும்
சேர்ந்து கிடக்கும் தரைகளையும்
என் கண்கள்
காண மறுக்கும்
ஏனென்றால்
அங்கே தான்
என் உறுதியான பற்களுக்கு
உயில் எழுதினார்கள்
என் கறுத்த உதடுகளை
சிதைத்து சிவப்பாக்கினார்கள்

நேற்றுவரை எனக்கு
நிம்மதி தந்த
நீலக் கடலையும்
நெஞ்சம் இனி மறக்கும்
ஆம்!
அந்த கடலின் அலைகள்தான்
அம்மாவின் செவிகளுக்கு
எட்டாதபடி
என் சத்தத்திற்கு
சமாதி கட்டின
இல்லையென்றால்
அ...ம்...மா....அம்...:மா
என்ற என் அலறல்
அண்டமெல்லாம் கேட்டிருக்கும்

என்ன யோசிக்கிறீர்கள்
இந்த வெள்ளை அலரியும்
நீலக்கடலும்
பாழடைந்த கட்டடமும்
எனக்கு மட்டுமல்ல
உங்களுக்கும் தான்

என் விலங்கைக் கழற்றி விட்டார்கள்
நான் போக வேண்டும்
போகும் போது
எந்த வேளையிலும்

மண்ணில் அடம்பன் முளைத்து
அதில்
இரத்தக் காயங்களுடன்
சுருங்கியபடி
வீங்கிய உடல்கள் அசையலாம்....

திடீரென வானில்
கழுகுகளும், பருந்துகளும் பறந்து
என்னைப் பயமுறுத்தலாம்.....

அற்கேன் சேர்வையொன்றின்
ஆவி நிறைந்த
சொப்பிங் பைகளும்
என்முகத்தை மூடலாம்.....

ஆனாலும்
நான் போக வேண்டும்
எனக்காக அழுது கொண்டிருக்கும்
உள்ளங்களைப் பார்க்கவேண்டும்

உங்கள் பார்வை
எனக்கு விளங்குகிறது
உங்கள் ஏக்கங்களும்
எனக்கு புரிகிறது
என்னால் என்ன செய்ய முடியும்

நான்
வருகிறேன்

~ சசி-மகரிஷி

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பலாத்காரத்தின் பயனால் உருப்பெற்ற சிறுபான்மை! உதவும் கரங்களின்றி உருக்குலையும் கிழக்கு ரிமோர்!

இத்தகைய சாதனைகள் படைத்த வீராதிவீரான சுகார்ட்டோ தான் கிழக்கு ரிமோர் மீது ஆக்கிரமிப்பு நடாத்தி அதலன கபளீகரஞ் செய்ய 1973 - 75 காலப்பகுதியில் திட்டந் தீட்டியவர், மேற்குலகின் செல்லப்பிள்ளையாகத் தன்னை உறுதிப்படுத்திய பின்பே அவர் திட்டத்தைச் செயற்படுத்த முனைந்தார். ஜனநாயகம், சட்ட ஆட்சி, மனித உரிமைகள் பற்றி வாய் கிழியப் பேசும் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரிட்டன், அவுஸ்ரேலியா போன்ற காவற்காரர்கள் இந்தோனேசியாவைப் பொறுத்தவரை 'அன்புக்கு' அடிமையானவர்கள். இதற்கான காரணம் பொருளாதாரம் மட்டுமல்ல. பசுபிக் பிராந்தியத்தில் வடக்கே சீனா, வியட்நாம், லாவோஸ் என்பவற்றின் செல்வாக்கினால் அவுஸ்ரேலியாவும் நியூசிலாந்தும் சோசலிஸ நாடுகளாக மாறும் அபாயம் உண்டு. அதைத் தடுப்பதானால் இந்தோனேசியா முதலாளித்துவ நாடாக என்றைக்கும் இருக்க வேண்டும். அதற்காக என்ன விலையும் கொடுக்கலாம் என்பது மேற்குலகின் அணுகுமுறை. அந்தளவில் மனித உரிமைகளும் மக்களின் சுயநிர்ணய உரிமையும் மிகக் குறைந்தளவு விலைகளே என்பதை இங்கு நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

### கண்களை மூடிய கனவான்கள்

சுதந்திரப் பிரகடனஞ் செய்த FRETILIN நாட்டைக் கட்டியெழுப்புவதில் தீவிரமாக முனைந்தது. 1976 ஒக்டோபரில் தேர்தலை நடாத்துவதாகவும், 1978 ஒக்டோபரில் புதிய அரசியலமைப்புடன் பூரண சுதந்திரத்தை வழங்குவதாகவும் போர்த்துக்கல் ஒப்புக் கொண்டது. இந்த முடிவு 1975 மே மாதமளவில் லிஸ்பனில் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் உடனடிச் சுதந்திரம் வேண்டுமென FRETILIN வலியுறுத்தியது. இந்நிலையில் இந்தோனேசியா ஆதரவுக் கட்சியான UDT அதிரடித் தாக்குதல் நடாத்தி (கிழக்கு ரிமோரின்) இரு பிரதான நகரங்களைக் கைப்பற்றியது. போர்த்துக்கேய அதிகாரிகள் நாட்டைவிட்டு ஓட்டம் பிடித்தனர். எஜமானின் விசுவாசத்துடன் இருந்த சிலர் பின்பு புரட்சிகர முன்னணியில் தம்மை இணைத்தனர். ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் 2,000 பேர் கொல்லப்பட்டனர். முன்னணி நடைமுறை அரசாங்கத்தை ஸ்தாபித்தது. போர்த்துக்கீச கலாசாரத்திலிருந்து மீண்டு ரிமோரில் மக்கள் தமது சொந்தக் கலாசாரத்துக்குப் புத்துயிர் கொடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

1975 நவம்பர் 28இல் புரட்சிகர முன்னணி நாட்டை கிழக்கு ரிமோர் ஜனநாயகக் குடியரசு எனப்பிரகடனப்படுத்தியது. ஆனால் நாட்டை அங்கீகரிக்கப் போர்த்துக்கல் மறுத்துவிட்டது. அது படிப்படியான அதிகார மாற்றத்தை விரும்பியிருந்தது; இதைவிடச் சரியான தருணம் வாய்க்காது என்பதை சுகார்ட்டோ எடைபோட்டு விட்டது. துரிதமாகச் சீரடையும் வாய்ப்பு கிழக்கு ரிமோருக்கு இருந்தது. மக்கள் புரட்சிகர முன்னணியின் பக்கம் திரண்டு நின்றனர். ஆயுதப்படைகள் பலம் பெற்று, மேற்குநாடுகளில் ஏதேனும் ஒன்று கிழக்கு ரிமோரை அங்கீகரிக்க முன்னர் ஆக்கிரமிப்பை நடாத்தும் திட்டத்தைச் செயற்படுத்தினார் சுகார்ட்டோ.

1975 அமெரிக்காவுக்குத் தலையிடி கொடுத்த ஆண்டாகும். அதனுடைய கொள்கைகள் இந்தோனேசியாவில் தோல்விமேல் தோல்வி கண்ட ஆண்டு அது. அப்பிராந்தியம் முழுவதும் "கம்யூனிஸக் காடாகிவிடும்'' என்று அமெரிக்கா அஞ்சியது. அமெரிக்க ஜனாதிபதி ஃபோர்ட்டும் அவரது வெளியுறவு அமைச்சர் கில்லாடி கீஸிங்கரும் நவம்பர் மாதத்தில் இந்தோனேசியாவுக்கு வந்திருந்தனர். ஆக்கிரமிப்பை எப்படி நடாத்துவது எனக் கீஸிங்கர் தனிப்பட்ட முறையில் அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்தாரென இப்போது முற்போக்குப் பத்திரிகைகள் ஐரோப்பிய நாடுகளில் செய்தி வெளியிட்டுள்ளன. 1975 டிசம்பர் 7ஆந் தேதியன்று இந்தோனேசியா இராணுவம் கிழக்கு ரிமோருக்குள் அணிவகுத்தது. இரண்டாவது உலகயுத்தத்தில் நடந்தவையாவும் சிறுவட்டத்துக்குள் கிழக்கு ரிமோரில் அரங்கேறின. முதல் மூன்று மாதத்துக்குள் மட்டும் 60,000 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். படையெடுப்புக்கான எந்தவித நியாயத்தையும் இந்தோனேசியா முன்வைக்கவில்லை. பெருமளவு முஸ்லீம் இராணுவத்தைக் கொண்ட படை பெருமளவு கிறிஸ்தவர்கள் வாழும் கிழக்கு ரிமோரில் தான் விரும்பியவாறு வேட்டை ஆடியது. மக்கள் முகம் குப்புறக் கிடத்தப்பட்டு அவர்கள் மீது இராணுவ வாகனங்கள் அணிவகுத்தன.

நேபாம் குண்டுகள், பீப்பாய்க்குண்டுகள் என்பன மலைப்பிராந்தியங்கள் மீது பொழியப்பட்டன. காடுகளில் ஒடியொழித்த யுவதிகள் இராணுவத்தின் கைகளில் சிக்கி முகாம்களில் நிரந்தரப் போதைப் பொருட்களாக வைக்கப்பட்டனர். அன்று தொடங்கிய போராட்டம் இன்று வரை ஓயவில்லை. உள்ளே வந்த இராணுவம் திரும்பிப் போக முடியவில்லை. 7 லட்சம் மக்களில் பாதிப் பேர் காணாமற் போய்விட்டதாக கிழக்கு ரிமோர் கத்தோலிக்கத் திருச்சபை குறிப்பிடுகிறது. இராணுவமே கட்டாய கருத்தடையையும் அறிமுகப்படுத்தியது. ரிமோயரின் எண்ணிக்கை கூடாதபடி பார்த்துக் கொள்ளும் பொறுப்பை இராணுவம் ஏற்றுக் கொண்டது. இது சுத்தமான இனப்படுகொலை. ஆனால் எமது மேற்குலகக் கனவான்கள் கடுமையான தூக்கத்தில் ஆழ்ந்து கொண்டார்கள். 1976 யூனில் கிழக்கு ரிமோரைத் தனது 27 வது மாகாணமாக இந்தோனேசியா பிரகடனப்படுத்தியது.

சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்கும் யதார்த்தம் இது என மூன்றாம் உலக நாடுகளின் மூத்த தலைமைகளும் வாளாவிருந்து விட்டன. குறிப்பாக இந்தியா, தான் முன்பு கோவா மாகாணத்தில் நடந்ததை ஞாபகப்படுத்திக் கொண்டு வாளாவிருந்து விட்டது. ஒரு சில ஆபிரிக்க நாடுகள் மட்டும் அவை தாமும் முன்னாள் போர்த்துக்கேய குடியேற்ற நாடுகளாக இருந்தவை என்றளவில் கிழக்கு ரிமோரின் உறவினர் என்றவாறாகத் துள்ளிக் குதித்தன. போர்த்துக்கல்லும் வேண்டா வெறுப்பாகக் கண்டனத் தீர்மானம் எடுக்குமாறு ஐ.நா.வை வற்புறுத்தியது. ஒரு நாட்டின் சனத்தொகையில் 15% ஆக்கிரமிப்பில் கொல்லப்பட்டது இதுவே முதற்த




**சிசைரோ**

டவை. ஹிட்லர்கூடத் தான் புகுந்த நாடுகளில் இந்தளவு வீதமான மக்களைக் கொன்று குவிக்கவில்லை. ஐ.நா. பாதுகாப்புச்சபை டிசம்பர் 1975 இலும், ஏப்ரல் 1976 இலும் இரண்டு தீர்மானங்களை எடுத்தது (384, 386) இந்தோனேசியா உடனடியாக வாபஸ்பெற வேண்டுமெனக் கோரியது. இத்தீர்மானங்கள் அங்கத்துவ நாடுகளைக் கட்டுப்படுத்துவன. இந்தோனேசியா இத்தீர்மானங்களைப் புறங்கையால் தட்டிவிட்டது. ஏனைய பெரிசுகள் தொடர்ந்தும் ஆயுத உதவி வழங்கி வருகின்றன. பிரிட்டனின் BAC Hawk தாக்குதல் விமானங்கள் கிழக்கு ரிமோரின் மலைப்பகுதிகளை வேட்டையாடுவதில் போதிய வெற்றி பெற்றுள்ளன. ஆக்கிரமிப்பு நடந்து ஐந்து நாட்களுள் ஐ.நா.வின் பொதுச்சபையும் (3485) 15 நாட்களுக்குள் பாதுகாப்புச் சபையும் தீர்மானம் எடுத்தன. இன்று 19 வருடங்கள் கடந்தும் இத்தீர்மானங்களைச் செயற்படுத்த எந்த வல்லரசும் அக்கறை எடுக்கவில்லை. ஆனால் குவைத் - ஈராக் விடயத்தின் தீர்மானம் எடுக்கப்பட்ட மறுகணமே மேற்குலக விமானங்கள் ஈராக்கை வட்டமிட்டதை வாசகர்கள் ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டும்.

தனது 27வது மாகாணத்தில் வசிக்கும் சிறுபான்மை மக்களான இந்த ரிமோரியர்களுக்கு ஓரளவு சுயாட்சி வழங்கத்தான் தயாராக இருப்பதாகவும் ஆனால் முதலில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சுகார்டோ கூறி வருகிறார். ஆனால் கிழக்கு ரிமோரை இந்தோனேசியா மயப்படுத்தும் கொடூர முயற்சி அங்கு தீவிரமாக நடைபெற்றுவருகிறது. குறிப்பாக, கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளைக் கருத்தரிக்க வைத்தல் என்பதில் இராணுவம் கூடிய அக்கறை எடுத்து வருகிறது. இதனால் அமெரிக்க, கனடா, பிரிட்டன் போன்றவற்றில் 1991 இலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. இன்னொரு நடவடிக்கை கட்டாயத் திருமணமாகும். கிழக்கு ரிமோரியர் ஒருவரை வெளியிலிருந்து கொண்டு வரப்படும் ஒருவருக்குக் கட்டாயத் திருமணஞ் செய்து வைத்தலும் அங்கு நடைபெறுகிறது.

சித்திரவதை என்பதிலும் இந்தோனேசியா இராணுவம் புதிய சாதனை படைத்துள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைகள் வருடா வருடம் இதற்கெனக் கூடுதல் பக்கங்களை ஒதுக்கியுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்பாக இச்சபை 1994 யூலையில் 36 பக்க அறிக்கையைச் சமர்ப்பித்து சித்திரவதை விடயத்தை விலாவாரியாக விவரித்தது. காணாமல் போனவர்களின் பட்டியலை ஆகஸ்டில் சமர்ப்பித்தது. ஆனாலும் மேற்கு நாடுகள் இப்போது இதனைப் பொதுவான மனித உரிமைகள் பிரச்சினையாகப் பார்க்கின்றனவே தவிர கிழக்கு ரிமோர் என்ற நாடு என்னாயிற்று என்று கேட்பதாகத் தெரியவில்லை.

### துரோகிகள் தூரத்திலிருப்பதில்லை.

கிழக்கு ரிமோருக்குப் பெருமளவில் நன்றிக்கடன் பட்டிருந்த அவுஸ்ரேலியா தான் இன்று மிகப் பெரிய துரோகியாக மாறியுள்ளது. ஐ.நா.வின் தீர்மானங்களைத் தடுப்பதிலும் மேற்குநாடுகளிடையே இவ்விடயத்தில் தரகராகச் செயற்படுவதிலும் அவுஸ்ரேலியா முதலிடத்தை வகிக்கின்றது. அதனது ஒரே இலட்சியம் இந்தோனேசியாவுடனான நிரந்தர நட்பு. தன்னை ஆயுதபலத்தால் வெல்லுங் சக்தி இந்தோனேசியாவுக்கு உள்ளதென அவுஸ்ரேலிய அஞ்சுகிறது. தனது அண்டைநாடு கம்யூனிஸ மயமானால் தனது எதிர்காலம் சூன்யமாகிவிடும் என்ற அச்சம் அதற்கு. அதனால் எல்லா வழிகளிலும் அது இந்தோனேசியாவின் நிரந்தர விசுவாசியாக மாறிவிட்ட நிலை. இத்தனைக்கும் இரண்டாம் உலக யுத்தத்தில் யப்பானிடமிருந்து அவுஸ்ரேலியாவைப் பாதுகாப்பதற்காக 40,000 கிழக்கு ரிமோரிய வீரர்கள் அவுஸ்ரேலிய மண்ணில் தமது உயிரைத் தியாகஞ் செய்தனர். ஆனாலும் தனக்கு அருகே இன்னொரு 'கியூபா' உருவாகுவதைச் சீரணிக்க முடியாத நிலையில் அவுஸ்ரேலியா செயற்படுகின்றது. எல்லாவற்றுக்குஞ் சிகரம் வைத்தாற்போல 1978 ஜனவரியில் அவுஸ்ரேலியா தனது அங்கீகாரத்தை இந்தோனேசியாவின் இணைப்புக்கு வழங்கி விட்டது. கிழக்கு ரிமோர் நடைமுறையில் இந்தோனேசியா வசமுள்ளது என்பதை ஒப்புக்கொள்வதாக அது அறிவித்தது. இன்று இராணுவப் பயிற்சியும் வழங்குகிறது அவுஸ்ரேலியா.

போலந்தில், ஆப்கானிஸ்தானில், ஸிம்பாவேயில் போன்ற தூர நாடுகளில் சமாதானஞ் செய்ய முயன்ற அவுஸ்ரேலியா தன்னை நம்பிய கிழக்கு ரிமோரியருக்குப் பச்சைத் துரோகமிழைத்தது. இன்றுவரை ஐ.நா.கிழக்கு ரிமோர் இந்தோனேசியாவின் ஒரு பகுதி என்பதை அங்கீகரிக்கவில்லை. ஆனால் அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்றவை இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டை ஏற்கிறோம் என அறிவித்துள்ளன. ''ஆக்கிரமிப்புச் சரியா பிழையா என்பதை நாம் தீர்மானிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றிணைப்பு முடிந்து விட்டது. நாங்கள் எதிர்ப்பதால் மட்டும் யதார்த்த நிலை மாறிவிடாது. இந்தோனேசியாவுடனான எமது உறவைப் பொறுத்தளவில் இதற்கு எதிர்ப்புக் காட்டுவதானால் எமது நலன்களுக்குப் பிரயோசனம் எதுவுமில்லை'' என அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்த கருத்து (1977இல்) மேற்கு நாடுகளின் அக்கறையைத் துலாம் பரமாக்குகின்றது. இந்த வரிசையில் இரட்டை வேட நாயகர்களாக அடுத்து வருபவர்கள் கனடாவும் யப்பானுமாகும். ஆக்கிரமிப்பு நடந்த அடுத்த வருடமே சுகார்ட்டோவுக்கு மாபெரும் வரவேற்பளித்த கனடா அவருக்கு 200 மில்லியன் கடனுதவிக்கான வாக்குறுதியும் வழங்கியிருந்தது.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பம்

## ஆறுமுகநாவலரே அல்ல! -2

**டி.சிவராம்**

யாழ்ப்பாணத்திலே, தமிழ் மொழி, உணர்வை அடித்தளமாகக் கொண்டு, உருவான முதல் ஸ்தாபனம் யாழ்ப்பாண தமிழ் சங்கம் எனத் தோற்றினாலும் (பார்க்க சரிநிகர் இதழ் 60) அது தமிழ் அபிமானத்தை விட யாழ்.சைவவேளாள நலன்களையும், அந் நலன்களுக்கு பிரதான உந்து சக்தியாக இருந்த இந்துமத உணர்வையுமே தன் அடித்தளமாகக் கொண்டு இயங்கிற்று என்பதே உண்மை. இதை நாம் கூறக் காரணம் உண்டு.

இலங்கையில் தமிழ் மொழியுணர்வை தன் நோக்கமெனப் பிரகடனப்படுத்தி வெளிவந்த முதற்பத்திரிகை **'திராவிட கோகிலா'** எனலாம். இதே பேரில் இப்பத்திரிகை ஆங்கிலத்திலும் சில பக்கங்களைத் தாங்கி இந்து சாதனம் போல இருமொழிப் பத்திரிகையாக வெளிவந்தது. பத்திரிகையின் பெயரே முதல் முதலாக இங்கு திராவிடக் கருத்தியலின் தாக்கத்தைக் காட்டிற்று எனலாம். எனினும் இதனுடைய முதலாவது இதழில் (1.3.1900) அதன் ஆசிரியர் தமிழில் ஒரு பத்திரிகை தொடங்க வேண்டும் என்ற அவாவே 'திராவிட கோகிலா'வை ஆரம்பிப்பதற்கு முதன்மையான காரணமென்று கூறுகின்றார். அவர் மேலும், ''கேட்போருக்கு இனிமையும், மகிழ்வையும் தருவது கோகில மொழி. தமிழ் மொழியோ இனிமையில் தனக்கு நிகரற்றது. இரண்டுஞ் சேர்ந்தவிடத்து உலகில் யாவருக்கும் மிக்க விருப்பையும் ஆனந்தத்தையும் தராமல் போகா. அன்றேல் இங்கிலீஷ் பாகத்திற்கும் இப்பெயர் பொருத்தமோவெனில் அதற்கும் பொருத்தமாகும். திராவிட நாட்டுக் குயில் தன் இனிய குரலினாலே எம்மொழியைப் பேசினாலும் திராவிட மணமே கமழும்படி பேசும்.''

இப்பத்திரிகை வசாவிளானைச் சேர்ந்த க.வேலுப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது. இது நாவலர் மரபு வழி வந்த ஒரு சிலராலேயே நடத்தப்பட்டது எனத் தெரிகிறது. முதலாவது இதழ் தன் முதற் பக்கத்திலேயே நாவலருடைய சைவப்பிரகாச வித்தியாசாலை கட்டிட வேலைக்கு பொருள் உபகரிக்குமாறு கோரிற்று. அத்துடன் ஈராண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட யாழ்ப்பாண தமிழ் சங்கத்துடனும் 'திராவிட கோகிலா' நெருங்கிய உறவு கொண்டிருந்தது.

சைவப்பிரகாச வித்தியாசாலை கட்டிடத்திலே 28.2.1900 அன்று நடந்த யாழ்.தமிழ் சங்க கூட்டத்தைப்பற்றி இந்து சாதனமும், திராவிட கோகிலாவும் எழுதின. இச் சங்கக் கூட்டத்தின் நோக்கம் சங்கப் பரீட்சைகளை அரசு ஏற்றுக் கொண்டு, சித்தி பெறும் சங்க மாணவருக்கு உத்தியோக விடயங்களில் சில சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்பதேயாம். அக்காலத்தில் இலங்கையின் பிரதம பதிவாளராக இருந்த பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் சங்கத்தினுடைய சான்றிதழ்களை நொத்தாரிசுகளாவதற்கான ஆரம்பப் பரீட்சையில் ஏற்றுக் கொள்ளலாம் என அனுமதித்திருந்தார். மேற்குறித்த கூட்டத்தில் அதன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த யாழ். கல்வி அதிகாரியாக அன்று இருந்த வெள்ளைக்காரரான எம்.எஸ்.பறோஸ் என்பவரிடமும் அவருடன் அழைக்கப்பட்ட யாழ் அரச அதிபராக அன்று இருந்தவரான ஐவேஷ் துரையிடமும் சங்கம் உருவாக்கும் மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்களிலும், மற்றும் இடங்களிலும், வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் பிரதானமாக விடுக்கப்பட்டது. இக்கூட்டம் இவ்வாறு முடிந்தது எனக் குறிப்பிட்டு **''தமிழ் சிறக்குங்காலம் சமீபத்தது''** என அப்பொழுது யாவரும் மகிழ்ந்தனர் என 'திராவிட கோகிலா' கூறிற்று.

தமிழ்க்கல்வி வளர்ச்சியடைய வேண்டும் என்பது பற்றியும் (21.3.1900) யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம், விருத்தியடைய வேண்டும் என்பது பற்றியும் (1.4.1900) 'திராவிட கோகிலா' ஆங்கிலத்திலும், தமிழிலும் விரிவான ஆசிரியர் தலையங்கங்களை வரைந்தது.

தமிழ்ச் சங்கத்தினுடைய சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்படுவது பற்றியும், அது அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு 'நிறுவனம் அல்ல என்றும்' 'திராவிட கோகிலா' தமிழ் சங்கத்தின் பத்திரிகையே என்றும் அது இந்து சாதனத்துடன் கூட்டாகச் செயற்படுகிறது என்றும் அக்காலத்தில் வெளி வந்த கத்தோலிக்கப் பத்திரிகையான ''சத்தியவேத பாதுகாவலன்'' (இது ஆங்கிலத்தில் Catholic Guardian ஆக வெளிவந்தது) முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலிறுக்கும் வகையிலேயே யாழ் தமிழ் சங்கத்தைப் பற்றிய 'திராவிட கோகிலா'வின் ஆசிரியர் தலையங்கள் இருந்தன.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது யாதெனில் திராவிடப் பண்பாட்டை தூக்கிப்பிடிப்பதில் இருந்த அக்கறையை விட யாழ் சைவவேளாள மத, நலன்களை பின்னணியாகக் கொண்டே திராவிட கோகிலா இயங்கிற்று என்பதேயாம். இப் பின்னணியைக் கண்டஞ்சியே கத்தோலிக்க மதப்பரம்பலை நோக்கமாகக் கொண்டு வெளி வந்த 'சத்திய வேத பாதுகாவலன்', 'திராவிட கோகிலா'வை தாக்கிற்று என்க.

பண்டைய தமிழ் இலக்கியங்களை மீட்டெடுப்பது பற்றியோ, தமிழ் மொழியை வளர்த்தல் பற்றியோ, தனக்கு ஆட்சேபனை இல்லையென்றும், ஆனால் அவை ஒரு பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டபின் செய்யப்படலாம் என்றும், ''சத்தியவேத பாதுகாவலன்'' தெரிவித்ததாக ''திராவிட கோகிலா'' ஆசிரியரின் எழுத்தில் இருந்து தெரிகிறது. (சம்பந்தப்பட்ட 'சத்திய வேத பாதுகாவலனின்' பிரதி கிடைக்கவில்லை.)

ஆரம்பமான ஒரு சில மாதங்களிலேயே 'திராவிட கோகிலா' தன் உண்மை வடிவினை காட்டிற்று. திராவிடக் கருத்தியலை விரைவாகவே புறந்தள்ளி அது சைவ வேளாள நலன் பேணும் முயற்சியில் இறங்கியது. சைவ மேன்மக்கள் தினந்தோறும் சந்தியாவந்தனம் செய்ய வேண்டுமென்றும். (1.6.1900) செட்டிப்பிள்ளைகள் கஞ்சராயிராது சிவ தருமங்கள் செய்ய வேண்டுமென்றும் (21.6.1900) சங்கராச்சாரியர் காலம் போன்ற இந்துமத விசயங்கள் பற்றியும் 'திராவிட கோகிலா' ஆசிரியர் தலையங்கங்களும், கட்டுரைகளும் வெளியிடலாயிற்று. அதுமட்டுமல்லாது கிறிஸ்தவத்தில் இருந்து சைவசமயத்தை மீண்டும் தழுவிக் கொண்ட யாழ்.உயர் வேளாளர் சிலர் பற்றிப் புகழ்ந்தெழுதி அப்போக்கு தொடர வேண்டுமென்பதை வலியுறுத்தி எழுதியது. அத்துடன் கத்தோலிக்க மதத்திலே சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் யாழ்ப்பாணத்தில் இருந்த தாழ்ந்த சாதிகளே என்றும், போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தை ஆளுகையில் சைவர்களுக்கு பல கொடுமைகளை இளைத்தனர் என்றும், இது போன்ற இன்னுஞ் சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, யாழ் கத்தோலிக்கரை 'திராவிட கோகிலா' தாக்கியது.

'திராவிட கோகிலா'வின் இந்த இந்துமத அடிப்படையிலான சவாலுக்கு விரிவாக விடையறுத்த ''சத்திய வேத பாதுகாவலன்'' 'திராவிட கோகிலா' ஆசிரியரை பின்வருமாறு சாடிற்று. ''சம்பந்தர் என்பார் அக்காலத்திருந்த சமணரைத் தீட்சித்தது போல இக்காலத்திலேயுள்ள சைவர் கிறிஸ்தவர்களை தீட்சிக்க வேண்டுமென்று பத்திராதிபர் புத்தியேவுகிறார். அக்காலத்திலே சம்பந்தர் எண்ணாயிரம் சமணரைக் கழுவிலேற்றிக் கொன்று அவரைத் தீட்சித்து விட்டவாறு, இக்காலத்திலுள்ள சைவரும் கிறிஸ்துவர்களைப் பிடித்துக் கழுவிலேற்றிக் கொன்று விடும்படி சொல்லுகிறாரோ? அந்த அம்மா மலையேறி விட்டா. இப்போது அது செய்ய இங்கிலீஷ் அரசு விடுமா?'' (30.6.1900)

திராவிடக் குயில் என்றும், தமிழ் மொழி நலன் பேணலே தன் நோக்கமென்றும், யாழ் உயர் சைவவேளாளர் குழாத்தினால் தொடங்கப்பட்ட திராவிட கோகிலா இவ்வாறாக இந்து மத நலன்புரி நடவடிக்கைகளில் இறங்கியதற்கு சிகரம் வைத்தாற் போல் ஒரு வேலை செய்தது.

11.11.1900 திகதியிட்ட, 'திராவிட கோகிலா' 'ஆரிய பாஷை' என்ற தலைப்பில் ஒரு ஆசிரியர் தலையங்கம் வரைந்தது. அது வருமாறு: 'பரமபதியாகிய சிவபெருமானாலே பிரதம மகா சிருட்டி ஆரம்பித்திலே அருளிச் செய்யப்பட்டதும், தேவேந்திரன் முதலியோர்களாலே தத்தமக்குரிய பாஷை எனப் புகழ்ந்து பேசப்படுவதும், அத் தேவேந்திரன் முதலியவர்களாலே செய்யப்பட்ட ஐந்திர வியாகரணம் முதலிய சாஸ்திரங்கள் நிறையப் பெற்றதும்..... தக்க ஆற்றல் படைத்த இன்றியமையாத கருவியுமாயுள்ளது நமது கடவுட்கண்மை பொருந்திய ஆரிய பாஷையே'' (தொடர்ந்தும் **''நமது ஆரிய பாஷை''** என்றே இத் தலையங்கம் கூறிச் செல்கிறது.)

தமிழ்தேசிய ஆரம்பத்தின் மையக் கரு ஆரிய- திராவிட இன, பண்பாட்டு வேற்றுமையும் தமிழ் - சமஸ்கிருத மொழி முரண்பாடும் ஆகும் என்பது தமிழ் கற்றார் அனைவரும் அறிவர். தமிழ் தேசிய இனத்தின் வரலாற்றைக் கூட மேற்கண்ட முரண்பாட்டின் அடிப்படையிலும், வேற்றுமையின் அடிப்படையிலும் பல தமிழக வரலாற்று ஆசிரியர் விளக்கிச் செல்வர். தமிழ் சமஸ்கிருதத்திலிருந்து உருவான ஒரு மொழி என 19ம் நூற்றாண்டில் நிலவிய கருத்தினை தீர்க்கமாக மறுத்து எழுதியும் பேசியும், மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகளே சென்ற நூற்றாண்டின் கடைக்கூற்றில் தமிழ் தேசியம் ஒரு கருத்தியலாக உருவாக வழிவகுத்தன என்பதும் நாம் அறிந்ததே.

ஆரியம் (சமஸ்கிருதம்) போல, வழக்கொழிந்து போகாமல் இன்று வரை வழங்கிவரும் தமிழ் மொழியின் ''சீரிளமைத் திறம்வியந்து'' பேராசிரியர்.சுந்தரம்பிள்ளை தமிழ் தாய் வாழ்த்து பாடியதும், ஆரிய திராவிட இன மோதலாக இராம - இராவண யுத்தத்தை சித்தரித்து எழுதியதும் இதனாலேயாம்.

யாழ்ப்பாண தமிழ் சங்கம், 'திராவிட கோகிலா' ஆகியவற்றின் மேற்கண்ட போக்கினை ஆராயும் பொழுது நமக்கு ஒன்று தெளிவாகப் புலப்படுகின்றது. அதாவது நாவலர் வழிவந்த சைவவேளாளர் மரபு ஒரு வரையறுக்கப்பட்ட அடிப்படையில் தன் வர்க்கம்சார் தேவைகளை மையமாகக் கொண்டே தமிழ் தேசியத்தை பயன்படுத்திற்று என்பதே அது. தமிழ் தேசியம் என்பது அதனுடைய உள்ளார்ந்த பண்பாக வெளிப்படவில்லை. மாறாக அதன் உள்ளார்ந்த பண்பு சமஸ்கிருத மயமாதலேயாம். பிராமணீய மத, மொழி, கலாசார விழுமியங்களை தழுவுவதன் மூலம் சமூக உயர்ச்சி பெற முயற்சிக்கும் போக்கினையே சமஸ்கிருதமயமாதல் எனலாம்.

இந்திய உபகண்டத்தில் பிராமணரல்லாத பல சமூகக் குழுக்கள் நால்வருணப் பாகுபாட்டின் அடிப்படையிலமைந்த இந்து சமூக அமைப்பில் தம்மை உயர்த்திக் கொள்ள இவ்வழியைப் பின்பற்றியுள்ளதை ஆராய்ந்த இந்தியச் சமூகவியலறிஞரான எம்.என்.சிறினிவாஸ் என்பவர் இப் போக்கினை 'சமஸ்கிரு மயமாதல்' என விளக்கினார்.

தமிழ் சமூகத்தினுள் வேளாளிடமே இப்போக்கு பல நூற்றாண்டுகளாக காணப்பட்டு வருவதை வரலாறு பகரும். இதற்கு முதன்மையான காரணம் நால்வருணா பாகுபாட்டினடிப்படையில் அமைந்த இந்து சமூக அமைப்பினுள் சூத்திரரே மிக இழிவானவராகவும், ஏனையவர்களான பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகியோருக்கு சேவை செய்ய வேண்டியவர்களாகவும் வேத அறிவை பெறக்கூடாதவர்களாகவும் வரையறுக்கப்பட்டனர். நால்வருணச் சமூக அமைப்பினுள் வேளாளர் சூத்திரர் என்றே கருதப்பட்டனர். ஆனால் 'சங்ககாலத்திற்கு பின் வந்த காலங்களில் தமிழ் சமூகத்தினுள் பொருளாதார ரீதியாக உயர்ச்சி பெற்ற வேளாளர், தாம் சூத்திரராக வகுக்கப்பட்டதை விரும்பாது உயர்நிலையுடைய பிராமணீய கலாசார விழுமியங்களை ஆவாவினர். இதன் காரணமாக மாமிச போசனம் தவிர்த்தல், வேதாகமங்களையும் சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேர்தல் போன்றவற்றில் முன்நின்றனர். ஏனையோர் தம்மை (வேளாளரை) சூத்திரர் என கூறமுற்பட்ட சந்தர்ப்பங்களில் தாம் உள்வாங்கிக் கொண்ட சமஸ்கிருத கலாசார விழுமியங்களை தூக்கிப்பிடித்தனர்.

செட்டிகள் வைசியர் ஆதலில் சூத்திரரான வேளாளரிடம் திருமண உறவு கொள்வதில்லை எனும் கூற்றிற்கு மறுப்புரையாக ''வேளாளர் நாகரீகம்'' என்ற தலைப்பில் 'தனித் தமிழ்' இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படும் மறைமலையடிகள் ஒரு சந்தர்ப்பத்தில் (1919) யாழ் நகரசபை மண்டபத்தில் ஒரு நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தினார். இதை நூல்வடிவில் கொண்டு வர யாழ். உயர் சைவ வேளாளர் பலர் நிதி வழங்கினர் என்பது வரலாறு. இவை போன்றவற்றின் அடிப்படையிலேயே சமஸ்கிருத மயமாதல் யாழ் சைவவேளாள வகுப்பினரின் உள்ளார்ந்த உந்து சக்தி என நாம் கூறினோம்.

'திராவிட கோகிலா'வின் போக்கு இதன் ஒரு வெளிப்பாடே. இதுவே, அன்றிலிருந்து இன்று வரை யாழ்.உயர்சைவவேளாள வகுப்பின் பண்பாக இருந்து வருகிறது. இத் தளத்தில் நின்றே இவ்வகுப்பு காலத்திற்குக் காலம், சிற்சில வரையறைகளோடு தமிழ் தேசியத்துடன் உறவாடி வந்துள்ளது. இதனாலேயே தமிழகத்தில் பிராமணீயத்தை திராவிட இயக்கம் கடுமையாகச் சாடி மேற்கொண்ட சில நடவடிக்கைகளை அது சில சந்தர்ப்பங்களில் எதிர்க்கவும் துணிந்தது. (இதைப் பின்னர் பார்ப்போம்)

நாவலர் வழி நின்ற பண்டிதர் க.கணபதிப்பிள்ளைக்கும் திராவிட இயக்கத்தின் தமிழ் தேசியக் கருத்தியலை கொண்டு இயங்கிய வேந்த

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணிலைவாத நோக்கில்

# தமிழ் சினிமா

சுசீலா ரவி



70க்குப் பிந்திய கடந்த இரு தசாப்தங்களில் தமிழ்ச் சினிமாக்களில் பெண்கள் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறார்கள் என்பதும் தமிழ்ச் சினிமா பெண்பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களும் பற்றி சுருக்கமான ஆய்வுக்குட்படுத்துவதே இக் கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

தமிழ்ச்சினிமாவைப் பொறுத்து பலருக்கு பலவாறான கோபம் எழுவது தவிர்க்க முடியாதது. கருத்து நிலையிலிருந்து படு பிற்போக்குத்தனமானதும், நச்சுத்தனமானதுமான கருத்துக்களை இச்சினிமா கொண்டுள்ளது. தமிழ் பேசும் மக்களை 'மூளைச் சலவை' செய்து கொண்டிருக்கிறது. உருவத்தைப் பொறுத்தவரையிலும் உயர்ந்த இசையும் தரமான தொழிநுட்பமும், இருந்தும் அவை அர்த்தமற்று வீணாகிக் கொண்டிருக்கின்றன. அது பிணத்திற்கு அலங்காரம் செய்து நிமிர்த்தி வைப்பதனைப் போன்றது. பிணம் பிணம் தானே? சரிந்து விழுகின்றது. **''கொச்சைத்தனம் மிக்க வர்த்தகச் சூதாடிகளின் கையில் சினிமாக்கலை இருக்கும் வரை நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகம்''** எனும் கூற்று மிகப் பொருத்தமானது.

இத்தொடர் கட்டுரை தமிழ்ச்சினிமாக்களில் பெண்கள் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறார்கள் என்பதையும், தமிழ்ச்சினிமா பெண் பற்றிக் கொண்டுள்ள கருத்து நிலையையும் தொட்டுச் செல்வதாக அமையும். பின்வரும் ஆரம்பங்களைக் கொண்டிருத்தல் இக்கட்டுரைக்கு பலம் சேர்க்கும் என்ற போதிலும் ஒரு பத்திரிகையின் தொடர் கட்டுரைக்கு இது அதிக விரிவாகி விடும் என்பதனால் தவிர்க்கப்பட்டுள்ளது.

(1) சினிமாவின் கலையாக்கம், தோற்றம், வளர்ச்சி.
(2) சினிமாவின் தனித்துவப் பண்புகள்
(3) தமிழ்நாட்டில் சினிமாவின் தோற்றம்
(4) தமிழ்ச் சமூகத்தில் பெண் பற்றிய கருத்தோட்டங்கள்.

இத்தலைப்புக்களின் பின்னணியில் இக்கட்டுரைத் தொடர் அமைவது விரும்பத்தக்கது. எனினும், இவற்றைத் தவிர்த்து கட்டுரையைத் தொடரலாம்.

தமிழ்ச்சினிமாக்களைப் பெண்ணிலை நோக்கில் கவனிப்பதற்கும், இத்தொடர் எழுதக் காரணமாக இருந்தமைக்குமாக **சித்திரலேகா மௌனகுரு** அவர்களை இங்கு நினைவு கூர்வது அவசியமாகும். அவரின்றேல் தொடர் ஒன்றை எழுதும் ஆர்வம் எனக்குள் உருவாகியிருந்தபோதும் நடைமுறைக்கு வந்திருக்குமா என்பது சந்தேகமே.

இத்தொடர் தொடர்பான விவாதங்களை மேற்கொள்வது சினிமாக் கலை- பெண்ணிலை நோக்கு என்பன தொடர்பான விரிவான பார்வைகளை நாம் பெற்றுக் கொள்ள உதவும் என்பது எனது நம்பிக்கை.

வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன்.

## 1970க்கு முந்தைய திரைப் படங்களின் பொதுவான போக்கு:

தமிழ்ச் சினிமா வரலாற்றில் 1970கள் முக்கியமான கால கட்டமாகும். 1970க்கு முன்னர் இருந்த நிலைமைக்கும், பின்னர் இருந்த நிலைமைக்கும் அதிகம் வேறுபாடு உண்டு. ஆனால் 1970ம் ஆண்டில் திடீரென மாற்றம் ஏற்பட்டதெனக் கொள்ள முடியாது. ஒரு திடீர்ப் பாய்ச்சல் என்றும் அதனைச் சொல்ல முடியாது. இது படிப்படியான மாற்றம் தான். எனினும் 1970க்கு முன்னும் பின்னும் உள்ள மாற்றங்களைத் தொகுக்க முடிகின்றது.

1970க்கு முந்திய திரைப்படங்களின் தன்மையை பொதுவாக நோக்கும் போது அவற்றைக் கதை, பாத்திரம், பாடல்கள், காட்சிகள் என்ற வகைப்பாட்டின் வழியே நோக்கலாம். இந்த வகைப்பாட்டின் வழியே ஒவ்வொன்றையும் தொகுத்து நோக்குவதன் மூலம் 1970க்கு முன் உள்ள திரைப்படங்களின் போக்கை அறிந்து கொள்ளலாம்.

1970க்கு முந்திய திரைப்படங்களின் கதைப் பண்பினை நோக்கும் போது அங்கு கற்பு, பெண்ணின் தியாகம், கணவனைத் தெய்வமாக வணங்குதல், ஆண்களில் தங்கி வாழ்தல் போன்றனவே காணப்பட்டன. வீரப் பெண்களாகவோ அவர்களால் எதுவும் செய்ய முடியும் என்றோ காட்டப்படவில்லை. எதிலும் இரண்டாந்தரப் பட்சமாகவே காட்டப்பட்டது.

பாத்திரத்தினைப் பார்க்கும் போது அவளை ஒரு குடும்பப் பெண்ணாகவே காட்டப்பட்டுள்ளதைக் காணலாம். கவர்ச்சிக் கன்னியாகவோ, கவர்ச்சி உடைகளோ இன்றி அழகான அமைதியான பெண்ணாகவே அவளின் பாத்திரம் அமைந்திருந்தது. சொந்தக் கருத்து இன்றிப் பலவீனமான மனமுள்ளவளாகவும், மென்மையான இதயத்தை உடையளாகவுமே பாத்திர உருவாக்கம் வளர்த்தெடுக்கப் பட்டிருந்தது.

பாடல்கள் இரட்டை அர்த்தம் தொனிக்காது பெண்களைக் கவர்ச்சிகரமாகச் சித்திரிக்காது விரசத்தை ஏற்படுத்தாது காணப்பட்டன. ஆனால் அவளை அடிமைப்படுத்தியும், அவளின் பெண்மையையும், தாய்மைப் பண்பையும் போற்றியும் பாடல்கள் அமைந்திருந்தன.

திரைப்படத்தில் காட்சியின் பங்கைப் பார்க்கும் போது பெண்கள் கவர்ச்சிக்குரியவர்களாகக் காட்டப்படவில்லை. சேலை அணிந்த பெண்களாகவே காட்டப்பட்டனர். கவர்ச்சி நடனம் இன்றி, கவர்ச்சியான காட்சிகள் இன்றி 1970க்கு முந்திய திரைப்படங்கள் காணப்பட்டன.

1970க்குப் பின்னர் இந்தப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காண முடிகின்றது. முற்று முழுதாக மாற்றம் ஏற்படா விட்டாலும் பெண்கள் உரிமைகள் பற்றியும் அவர்கள் சமூகத்தில் வகிக்கும் நிலை பற்றியும் சிந்தித்து மாற்றங்களை முனு முணுப்புடனாவது காட்டினர். 1970க்குப் பின் கதைப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். பெண்களின் மறுமணம், அவர்களின் வீரம், அவர்களின் சுதந்திரம், சொந்தக் காலில் தனித்து வாழ முடியும் என்பன எல்லாம் பேசப்பட்டன. கதைப் போக்கிலும், பாத்திரத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

மேற்கூறப்பட்டவற்றைப் பார்க்கும் போது 1970க்குப் பின்னரான சினிமாவில் பொதுவாக மாற்றங்கள் தென்படுகின்றன. உடை என்கிற அளவில் கவர்ச்சிகரமானதாகக் காட்டப்படவில்லை. 1970க்குப் பின்னர் கவர்ச்சிகரமான உடைகளைப் பெண்கள் அணிகிறார்கள். பாடல்களில் இரட்டை அர்த்தம் தொனிப்பதாகவும், விரசம் ததும்பியதாகவும், பெண்களை அடிமைப் படுத்தும் போக்குடனும் பாடல்கள் வெளி வருகின்றன. முன்னைய காலங்களில் பெண்களை அடிமைப்படுத்தும் போக்கே பாடல்களில் அதிகம் தென்பட்டது. தொகுத்துப் பார்க்கும் போது பாடல்கள், உடைகள் என்கிற அளவில் பல மாறுதல்களும் பாத்திர உருவாக்கம் என்பதில் சில மாற்றங்களும் உள்ளன. கதை, பெண்கள் பற்றி கருத்துக்கள் போன்றவற்றில் மாற்றங்கள் தென்படவில்லை என்றே கூறலாம். இவைகள் பற்றி விரிவாக இனி நோக்கலாம்.

மரபு ரீதியான கற்பு, அதன் கருத்துருவம் ஆகியன 1970க்கு முந்திய காலங்களில் மிகவும் அழுத்தமாகக் கூறப்பட்டன. சினிமாவின் செய்திகளும் அதுவாகத்தான் இருந்தன.



பத்தினிப் பெண்டிர் பற்றியும், அது அதிகம் பேசியது. **கணவனே கண் கண்ட தெய்வம், மணாளனே மங்கையின் பாக்கியம்** போன்ற படத்தின் தலைப்புகளும் கூட அவை பற்றித் தெளிவாக்குகின்றன. **பதிபக்தி** போன்ற திரைப் படங்களின் தலைப்புகளும், இது போன்றனவே.

முன்னைய கால கட்டங்களில் பெண்கள் பற்றிப் பல்வேறு பார்வையைத் தமிழ் சினிமா கொண்டிருந்தது. உதாரணமாக ஒரு பெண் தன் மகனின் மனைவியை அடக்குவதும், (மாமியார், மருமகள்) அவர்களுக்கு இடையில் அடிக்கடி ஏற்படும் பிணக்குகளும் முன்னைய திரைப்படங்களில் முக்கிய செய்திகளாகக் காட்டப்பட்டன. முக்கியமாக மாமியாரின் கொடுமைகளே அதிகம் காணப்பட்டன. இவற்றிற்கு இடையே அமைதியான போக்கும் இருந்தது. திரைப்படங்களின் தலைப்புகள் இவைகளைத் தெளிவாக்கி விடுகின்றன. **''மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே'', ''மாமியார் மெய்ச்சிய மருமகள்''** போன்ற திரைப்படத் தலைப்புகள் இங்கு உதாரணங்களாகும். பின்னைக் காலத் திரைப்படங்களில் இவ்வம்சம் குறைவாகவே இருந்தன.

(வரும்)

> ***''என் தமிழர் படமெடுக்க ஆரம்பம் செய்தார்***
> ***எடுத்தார்கள் ஓரிரண்டு பத்து நூறாக***
> ***ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்***
> ***உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர் உள்ளதில்லை***
> ***ஒன்றேனுந் தமிழருமை உணர்த்துவதாயில்லை***
> ***ஒன்றேனும் உயர் நோக்கம் அமைந்ததுவாயில்லை.***
> ***ஒன்றேனும் உயர் நடிகர் வாய்த்ததுவாயில்லை***
> ***ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதாயில்லை***
>
> ***வட நாட்டார் போன்ற உடை, வட நாட்டார் மெட்டு***
> ***மறத் தமிழர் நடுவினியே தெலுங்கு கீர்த்தனங்கள்***
> ***வடமொழியில் ஸ்லோகங்கள் ஆங்கில பிரசங்கம்***
> ***வாய்க்குவரா இந்துஸ்தான் ஆபாச நடனம்***
> ***அடையுமிவை அத்தனையும் கழித்துப் பார்க்குங்கால்***
> ***அத்திம்பேர் அம்மாமி எனுந் தமிழ் தான் மீதம்***
> ***கடவுளர்கள் அட்டை முடி காகிதப் பூஞ்சோலை***
> ***கண்ணாடி முத்து வடம் கண்கொள்ளாக் காட்சி***
> ***பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போனார்.***
>
> ***பதிவிரதைக் கின்னல் வரும் பழைய படி திரும்***
> ***சிரமமொரு தாளம் எண்ணிப் போட்டியிலே பாட்டுச்***
> ***சில பாடி மிருதங்கள் ஆவர்த்தம் தந்து***
> ***வரும் காதல் அவ்விதமே துன்பம் வரும் போதும்***
> ***மகரிஷிகள் கோயில் குளம் இவைகள் சதாகாரம்***
> ***இரக்கமற்ற பட முதலாளிக் கெல்லாம் இதனால்***
> ***ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சியது லாபம்***
> ***படக்கலை தான் வாராதா என நினைத்த நெஞ்சம்***
> ***பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்***
> ***படக் கலையாம் சனி யொழிந்தால் போதுமென எண்ணும்''***
>
> பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் எங்கள் மயிருக்கு நேர்!

அரச தமிழ்மொழியை அரச கரும மொழியாக அங்கீகரித்தது பழைய செய்தி. இதனை தமிழ் பேசும் மக்கள் வசதியாக மறந்து வருவதுதான் புதிய செய்தியாகும். அரச கரும மொழி என்கிற அங்கீகாரத்தை ஸ்தாபன ரீதியாக நடைமுறைப்படுத்த வேண்டியது அரச அலுவலகங்களே. தமிழ் பேசும் மக்களின் ஒரே அதிகாரத்துவமுள்ள மாகாணமான வடகிழக்கின் அரச அலவலகங்களில், தமிழ் மொழி அமுலாக்கம் எவ்வளவு தூரம் நடைமுறையிலுள்ளது என்பதை எண்ணும் போது வெட்கமாக உள்ளது.

பல்வேறு காரணிகளை நாம் இங்கு அவதானிக்க முடிந்தது.

நிருவாக மட்டங்களில் உள்ள உயர் அதிகாரிகள் ஆங்கில மோகம் பிடித்தவர்களாக உள்ளமை.

ஆங்கில அறிவு போதாத உயர் அதிகாரிகள் கூட, கடிதங்கள், சுற்றறிக்கைகள், மற்றும் கா்சோலைகள் என்பவற்றை சிரமப்பட்டு ஆங்கில மொழியிலே எழுதும் போக்கு.

இதனை ஒரு கௌரவ நடவடிக்கையாக அவர்கள் கருதுகின்ற நிலை.

இதனால் அரச அலுவலக கருமங்கள் காலதாமதமாகவும், வீண் செலவுகளையும், குழப்பங்களையும் தோற்றுவிப்பதை அவதானிக்க முடிந்தது.

பிறமொழிப் புலமை நமது அறிவையும், ஆற்றலையும் விருத்தி செய்ய உதவலாம். ஆனால், நிர்வாக நடவடிக்கைகளை மக்களுக்குப் பரிச்சயமான மொழியிலே வைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனமானது. பிறமொழியில் வலிந்து அவற்றைக் கையாள்வது. எமது விபசாரக் குணத்தையும், சோரம் போன மனநிலையையும் படம் பிடித்துக் காட்டுவதாகும்.

சிங்கள மக்களின் மனோபாவமே வித்தியாசமானது. பெரும்பாலான அரச உயர் அதிகாரிகள் கூட, சிங்கள மொழி மீது தீவிர பற்றுடையவர்களாகக் காணப்படுகின்றனர். சகல நடைமுறைகளையும் சுய பாஷையிலே மேற்கொள்பவர்களாக உள்ளனர். விஷேடமாக, அவர்களது கையொப்பங்கள் சிங்கள மொழியிலே காணப்படுவது கண்கூடு.

1958ன் சிங்கள மொழிச் சட்டத்தினால் மொழிவெறியர்களாக வளர்ந்த சிங்கள இளைஞர்கள், தற்சமயம் மொழியின் தீவிர விசுவாசிகள் என்ற அடையாளத்தோடு புதிய தளத்தில் பிரவேசிக்கிறார்கள்.

சிங்கள மொழிச்சட்டத்தினால் உத்வேகம் பெற்று, 'ஸ்ரீ' எழுத்தழிப்பு போன்ற மொழி எதிர்ப்பு நடவடிக்கைகளில் நமது தலைவர்களும், இளைஞர்களும் மும்முரமாக செயற்பட்ட காலமும் இருந்தது. சிங்கள மக்களுக்கு சளைக்காது, தமிழ் மொழியில் பற்றுறுதி கொண்டவர்களாக, மொழிவெறியர்களாக நம்மை நாமே பிரகடனப்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்கள் அவை. ஆனால், தாய் மொழியின் விசுவாசிகளாக நாம் எப்போதும் இருந்து வந்துள்ளோமா என்பதே எம்முன்னால் எழுப்பப்பட வேண்டிய கேள்வியாகும்.

இந்த வினாவின் அடித்தளத்திலிருந்து எழுகிற தொடர்ச்சிதான் எமது பிரதேசங்களில், எல்லாத் துறைகளிலும் அந்நியமொழிகளில் நம்மை நாமே அடகு வைத்த பரிதாப காட்சியாகும்.

தலைநகரிலிருந்து அனுப்பப்படுகிற அரச சுற்றறிக்கைகள் தமிழ் மொழியில் இருப்பதில்லை என்று பாராளுமன்றத்தில் நமது பிரதிநிதிகள் முழங்குகிறார்கள். அதேசமயம், வடகிழக்கு பிரதேச அரச அலுவலகங்களில் தமிழ் மொழி அமுலாக்கம், உறசாகமான பயன்பாடு என்பவை பற்றி அவர்கள் அக்கறைப்படுவதாயில்லை.

தமிழுக்கு எதிரி- ஏனையவர்களல்ல;
நம்மவர்களே.

'தமிழ்மொழியை நடைமுறைப்படுத்த வேண்டும்' என்று அக்கறையோடு பேசுபவர்கள், ஒன்றில் தமிழ் மொழியின் தீவிர ஆதரவாளர்களாக இருப்பார்கள் அல்லது ஆங்கில மொழி தெரியாதவர்களாக இருக்க வேண்டும்.

தாய்மொழியின் மகிமை பற்றியும், அதன் தொன்மை பற்றியும் நாம் மிகவுமே பீற்றிக் கொள்பவர்கள். நமது கையொப்பங்களைப் பார்த்தாலே அது தெளிவாகப் புரிந்துவிடும்.


கையொப்பங்கள் அழகாக ஆங்கிலத்தில் சிரிக்கும்
'தமிழுக்கு அமுதென்றும்', 'உயிருக்கு நேர்' என்றும் பாடிய பாரதிதாசன் இன்றிருந்தால்- 'மயிருக்கு நேர்' என்று பாடியிருப்பாரோ!

நமது இழிநிலையை நினைத்து, நமக்காக அழுவதற்கு வேறெவரும் தேவையில்லை-
நாமே போதும்!

**ஸதக்கா**

## 'வானமே எல்லை' பரிசளிப்பு விழா.










**19-11-1994 அன்று குருகெதர மண்டபத்தில் நடைபெற்ற சரிநிகர் 'வானமே எல்லை' பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்.**

(1) விடுதலை கீதமிசைப்பு

(2) கலாநிதி எம்.ஏ.நுஃமான் அவர்கள் உரையாற்றுகிறார்கள். அருகே மேர்ஜின் தலைவர் திரு.சார்ள் அபேசகரவும், செயலாளரும் சரிநிகர் வெளியீட்டாளருமாகிய திரு.ஜெயபாலகிருஷ்ணனும் அமர்ந்திருக்கிறார்கள்.

(3) மாணவரொருவர் பரிசு பெறுகிறார்.

(4) திருமதி.மாலினி கிருபாகரனின் நடனத் தோற்றம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆத்மாவின்...

களா இல்லையா என்று தீர்மானிப்பது கவிஞர்களின் வேலையில்லை. இன்று பாதிப்பைத் தராத கவிதைகள் கூட நாளை பாதிப்பை தரலாம்; ஒருவரைப் பாதிக்காத கவிதை இன்னொருவரைப் பாதிக்கலாம். எனவே இந்த புதுக்கவிதைத் தளத்தில் பொல்லுகளோடு நுழைவதை கவிஞர்கள் தவிர்ப்பது நல்லது.

கவிதையை அரசியற் பிரக்ஞை அல்லது சமூகப் பிரக்ஞையுடன் மட்டும் குறுக்கிவிடுவது சரியானது தானா? கவிஞனின் மனதைப் பாதிக்கும் எந்த விடயமும் கவிதையாக முடியாதா? யதார்த்தத்தைப் பாடுவதுதான் கவிதை என்ற சட்டத்தை (Frame) உலுக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. ஒரு துரும்புகூட ஒரு கவிஞனுக்கு உள்ளத்தைத் தொடும் பாடுபொருளாக முடியும். அதை அனுமதியுங்கள். ஒரு கவிஞன் தனது படைப்பை புதுக்கவிதையின் முழுமையாகக் காண்பது/ பொதுமைப்படுத்தவது அகநிலை சார்ந்த ஒன்றாகும்- இது தவிர்க்கப்பட வேண்டும்.

எங்கள் ரசனையை கேள்விக்குள்ளாக்க வேண்டியுள்ளது. அழகானது என்று ரசிப்பதை, அருவருப்பானது என்று ஒதுக்குவதை எல்லாம் கேள்விக்குள்ளாக்க வேண்டியுள்ளது. எமது மலத்தை சாதாரணமாகப் பார்க்கவும், மணத்தை குறைந்தபட்சம் சகித்துக் கொள்ளவும் முடிகிற போது மற்றவர்களின் மலத்தை மட்டும் எப்படி அருவருப்பாய் உணர முடிகிறது? எனவே ஒதுக்கப்பட்டவையெல்லாம் கிளறி நாம் தேடுதல் நடத்த வேண்டியுள்ளது. பூ என்றால் ஒரு பெண்ணின் முகம்... சந்திரன் என்றால் ஒரு குழந்தையின் முகம்.... கொவ்வைப் பழம் என்றால் ஒரு பெண்ணின் சொண்டு என்றெல்லாம் ஒன்றைப் பரிமாணமாய் ரசனிக்கக் கற்பிக்கப்பட்டதிலிருந்து விடுபட்டு பல பரிமாணங்களிலும், முரண்பட்ட படிமங்களூடாகவும் எமது ரசனையை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. அத்தோடு முரண்களை அருகருகே வைத்து இன்னொன்றை உருவாக்கும் முயற்சிகள் தமிழ்க் கவிதையுலகுக்கு வந்து விட்ட சங்கதிதான் என்றாலும் அதிலும் இன்னும் நாம் பயிற்றுவிக்கப்பட வேண்டியுள்ளது.

கவிதையை மரபுச் சட்டத்துள் அறைந்து பள்ளிப் படிப்பாக்கிய அவலம், எமது கல்விமுறை, வாழ்வியல் முறை... எல்லாம் எமது ரசனையை மோசமான நிலையில் பேணுவது ஒரு சாபக்கேடு. இதன் தொடர்ச்சியாக கவிதையை தர்க்க ரீதியிலோ விஞ்ஞான ரீதியிலோ பொருத்திப் பார்ப்பது அல்லது பொருள் கொள்ள முனைவது, முடிவைத் தேடுவது/ வகைப்படுத்துவது, வசனங்களை/ சொற்களை பிரித்தெடுத்து அர்த்தம் தேடுவது, வெறும் வார்த்தை ஜாலத்தில் புல்லரித்துப் போவது... என்றெல்லாம் கொச்சைத்தனம் புரியும் ரசனைக்கு வாசகனைத் திட்டுவதுகூட அர்த்தமற்றது. இந்த ரசனையை பல பரிமாணங்களில் வளர்த்தெடுக்கும் ஒரு பாரிய பணி கலை இலக்கிய வாதிகளுக்கு-கவிஞர்கள் உட்பட-இருப்பதை பொறுப்போடு அணுக வேண்டிய தேவை உள்ளது.

''ஆணலை'' கவிதை வாசகனுக்கு இனவாதத்தின் தொனியைக் கொடுத்தால் அதை அங்கீகரிப்பதோ, மறுப்பது என்பதோ ஒரு இழுபறிப் பிரச்சினையல்ல. அந்தத் தோற்றப்பாட்டுக்கான சாத்தியத்தை ஒரு கவிஞன் வாசகன் தரப்பில் முதலில் அங்கீகரிக்கப் பழக வேண்டும். பிறகு பதில் சொல்ல முயற்சிக்க வேண்டும். (யதார்த்தத்தின் பெயரால் இனவாதத்தை நியாயப்படுத்தினால் அது கண்டிக்கப்பட வேண்டியது) இங்கே வாசகனை வெற்றிகொள்ளும் பிரச்சினை கவிஞனுக்கு அநாவசியமானது. அதை கவிதை செய்யட்டும்!

ரவீந்திரன்
சுவிஸ்

## அதே பழைய கதை
### (சென்ற இதழ் தொடர்ச்சி)

**சென்ற இதழில் வெளியான 'தேர்தல் மோசடிகள் அதே பழைய கதை' என்ற செய்தியின் இறுதிப் பகுதி இடமின்மை காரணமாக வெளியிட முடியாமல் போய்விட்டது. அப்பகுதி இப்போது இங்கு பிரசுரமாகிறது.**

**ஆ-ர்**

பன்வில பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது பின்வரும் விடயங்களை கண்டு பிடிக்கக் கூடியதாக இருந்தது.

வெட்டகம நகரசபையின், ஐ.தே.க. உறுப்பினரான எஸ்.வைத்திலிங்கம் என்பவருடன் இ.தொ.கா. உறுப்பினர்கள் இருவரையும் சேர்த்து 1994 நவம்.7ம் திகதி கல்பிரிய தோட்டத்தில் பன்வில பொலிஸார் வான் (இலக்கம்54-5450) ஒன்றுடன் கைது செய்தனர்.

435 திரிபோச பக்கற்றுக்கள் (இவை அரசுடமையானவை என்பதற்கு அடையாளமான அரசு முத்திரை இடப்பட்டிருந்தது.) கட்டு தமிழ் பிரசுரங்கள். அதில் உரிமை கோரப்படாத இரண்டு ஒன்றில் ஐ.தே.கவுக்கு வாக்களிக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. மற்றதில் தொண்டமானினதும் காமினியின் படுகொலை செய்யப்பட்ட உடலுடன் சிறிமாவினதும் படங்களுடன் காமினியின் படுகொலை தொடர்பாக தொண்டமான் விடுத்த அறிக்கையும் மேற்கோள் காட்டப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது. இன்னுமொரு கட்டில் யானையின் படம் உள்ள ஸ்ரிக்கர்கள் எமக்கு காண்பிக்கப்பட்டன. கதிரைக்கு வாக்களிப்பது நாட்டை புலிகளிடம் கையளிப்பது, யானைக்கு வாக்களிப்பது ஒருமைப்பட்ட இலங்கைக்கு வாக்களிப்பது என விளக்கப்படுத்தும் வகையில் சிவப்பு நிறத்தால் வரையப்பட்ட சில சுவரொட்டிப் பிரதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. யன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்ட வான் ஒன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இது பொ.ஐ.மு ஆதரவாளர்களால் செய்யப்பட்டது என எமக்கு கூறப்பட்டது. நாம் சென்ற நேரம் சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நாம் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போது வெட்டகமை நகர சபை (ஐ.தே.க.) உபதலைவரும், ஒரு சீருடையுடனான பொலிஸ் சார்ஜண்டும் மற்றும் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்ததை கண்டோம். பொலிஸ் நிலைய அதிகாரி அவருக்கு கிடைத்த தகவலின்படி 9ம் திகதி 9.10 மணிக்கு காத்திருந்து கைது செய்ததாக எமக்கு கூறினார். நாம் பொலிஸ் நிலையங்களில் காணக்கூடிய 84 S தன்னியக்கி துப்பாக்கியே, இந்த பொலிஸ் சார்ஜன்டு (இல.2662)க்கும் உரியது. அத்துடன் திருமதி.திசாநாயக்காவின் கண்டி வீட்டுக்கு பாதுகாவலராகவே இவர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலைமையில், உபதலைவருக்கு எந்தவிதமான பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை. இது சட்டத்திற்குப் புறம்பானது.

இப்பிரதேசத்தின் சிரேஷ்ட அரசியல்வாதிகளின் கண்காணிப்புடன் பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் ஐ.தே.கவை எப்படியாவது தோற்கடிக்கப் பதற்காக வெளிப்படையாகவே பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த ஆதரவாளர்களில் சிலர், மேற்கூறப்பட்டதை ஏற்றுக் கொண்டு கூறினர், கடந்த காலங்களிலும் ஐ.தே.கவானது தொடர்ந்து அதிகாரத்தை கையில் வைத்திருப்பதற்கு இது போன்ற ஆள்மாறாட்ட நடவடிக்கைகளிலேயே தேர்தல்காலங்களில் ஈடுபட்டது. அதனால் நாமும், அதே வழியில் ஈடுபட்டோம் என்றனர். ஐ.தே.கவை அதிகாரத்தில் இருந்து அனுப்புவதற்கு மக்கள் முடிவு செய்தமைக்கு ஐ.தே.கவின் இது போன்ற சில நடவடிக்கைகளும் தான் காரணம் என்பதை இவர்கள் முற்று முழுதாக மறந்து விட்டனர். கண்டி பிரதேசத்தில் குறிப்பிட்ட சிரேஷ்ட பொ.ஐ.மு அரசியல்வாதிகளின் செல்வாக்கும் கூட பிரச்சினையாக இருந்தது. தங்களுடைய தேர்தல் தொகுதிகளில் இருந்து பொ.ஐ.முக்கு எப்படியாவது அதிக வாக்குகளை பெறுவதனூடாக தங்களது அதிகாரத்தையும் பிரபல்யத்தையும் நிலைநாட்டுவதற்காக தமது ஆதாரவாளர்கள் மீது செல்வாக்கை பாவிக்கும் முயற்சியில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

இப்படியான காரணங்கள் இருந்த போதும் ஜனநாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இலட்சியத்தை பாதுகாக்கும் ஆர்வம் நிச்சயமாக இல்லை என்ற போக்கு, ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் கண்டியில் காணப்பட்டது. மக்களின் மிகப் பெரிய எதிர்பார்ப்புகளில் ஜனநாயகமும் ஒன்று. மக்களை இந்தளவுக்குப் பயமுறுத்துவது பொ.ஐ.முயின் பிரச்சாரங்களில் போது முன்வைக்கப்பட்டு உறுதியளிக்கப்பட்ட 'அச்சுறுத்தலும், பயமும் அற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க' உகந்ததல்ல.

## பலாத்காரத்தினால்....

கனடா- இந்தோனேசியா வர்த்தக உறவில் வருடாந்தம் புரளும் தொகை 500 மில்லியன். விமானங்கள், நவீன ஆயுதங்கள் என்பவற்றைக் கனேடிய கம்பனிகள் விற்றுவிட்டுப் பதிலுக்கு சந்தனக் கட்டைகளையும் சிறுதானியங்களையும் கொண்டு போய்க் சேர்க்கின்றன. பிரதானமாக எண்ணெய் விற்பனையைக் குறிப்பிட வேண்டும். OPEC அமைப்பின் உறுப்பு நாடு இந்தோனேசியா.

இத்தகைய நயவஞ்சகம், சுயநலம் என்பவற்றிற்கிடையிலும் FRETILIN யின் கெரில்லாக்கள் போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. குறிப்பாக மாணவர்கள், தேவாலயக் குருமார், ஒரு சில ஆபிரிக்க நாடுகளின் முற்போக்காளர் போன்றோரின் ஆதரவுடன் போராட்டத்தைத் தொடர்கிறது முன்னணி. வருடாவருடம் நிலைமை சீரடைவதாக இந்தோனேசியா அறிக்கையிடுகிறது ஐ.நாவுக்கு. பொதுச்சபையும் ஒவ்வொரு ஆண்டும் தனது தீர்மானத்தை வலியுறுத்தி வந்தாலும் வாக்குகளின் பலம் இந்தோனேசியாவுக்கு ஆதரவாக மாறிவருவதும் தெரிகிறது. எப்படியாவது தீர்மானத்தைத் தோற்கடித்து ஐ.நா.வின் நிகழ்ச்சிப் பட்டியலிலிருந்து கிழக்கு ரிமோரை எடுத்து விட ஆக்கிரப்பு நாடு சற்றும் மனந்தளராத விக்ரமாதித்தனாகச் செயற்படுகிறது. இதில் மேற்கு நாடுகளின் பரிபூரண ஆதரவு அதற்கு உறுதி செய்யப்பட்டுவிட்டது.

கிழக்கு ரிமோரின் தலைநகர் டிலில் 1991 டிசம்பரில் நடைபெற்ற படுகொலைகள் மிகப்பிரசித்தி பெற்றவை. இதுவரை இறந்துபட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தவெனக் கூடிய மக்கள் கூட்டம் மீது இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டது. 250 பேர் அந்த இடத்திலேயே மாண்டனர். வெளிநாட்டு நிருபர்கள் நான்குபேர் மாண்டனர். காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யுவதிகளை அங்கேயே வைத்து இராணுவம் கற்பழித்ததாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறுகிறது. இதைக் கண்டித்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் தீர்மானம் வந்தபோது அமெரிக்க, கனடா, யப்பான், அவுஸ்ரேலியா போன்ற மனித உரிமைகள் ஜாம்பவான்கள் தலையிட்டு தீர்மானத்தின் கடுமையைத் தணித்து 'கவலையுடன் நோக்கப்படும் சம்பவங்கள்' என்று பதில் வாசகம் அமைத்தன. இந்தோனேசியாவுக்குள் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்களும் எவ்விதத்திலும் குறைந்தபாடாக இல்லை. முக்கிய பிராந்தியத்தில் அமைந்துள்ள பொருளாதாரச் சகபாடி என்பதன் அடிப்படையில் இந்தோனேசியாவைப் பொறுத்தவரையில் மனித உரிமைகள் என்பது அதன் தயவுக் குட்பட்ட விடயமாகிறது. ஆனால் சிறுபான்மையினர் என நாமஞ் சூட்டப்பட்ட கிழக்கு ரிமோரியரைப் பற்றிக் கவலைப்பட எவருமில்லாத நிலைதான் மிகவும் வருத்தத்துக்குரியது.

எல்லா நாடுகளிலுமே சிறுபான்மையினர் பிரச்சினைகள் உள்ளதால் இந்தோனேசியா மீது கறை தொடுக்கப் பலரும் தயங்குகின்றனர். குறுகிய முதலீட்டு லாபத்துடன் ஏராளமாகச் சம்பாதிக்க வழி செய்யும் நாட்டைப் பகைக்க மேற்கு நாடுகள் ஒருபோதும் முன்வரா. தமது குருதியை மட்டும் தானஞ் செய்து சுதந்திரம் பெறத் துடிக்கும் கிழக்கு ரிமோரிய மக்களின் நெஞ்சுறுதி இன்னும் எத்தனை நாளைக்கு நிலைக்கும் என்பது ஏமாற்றமான பதிலையே தரக் கூடும். கிழக்கு ரிமோர் பற்றிப் பத்திரிகைகள் எழுதுவதில்லை. ஐரோப்பிய நாடுகளிலுள்ள இடதுசாரிப் பத்திரிகைகள் இதுபற்றி எழுதி வந்திருந்தாலும் தற்போதைய உலக அரசியலில் அவற்றின் செல்வாக்கும் கவனத்தைக் கவராது.

இந்நிலையில் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களும் கிறிஸ்தவ அமைப்புகள் சிலவுமே கிழக்கு ரிமோருக்கு ஊட்டமளிக்க முனைந்துள்ளன. இவ்வாண்டு யூலையில் ஐ.நா.வின் குழு வொன்று கிழக்கு ரிமோர் வந்தது. சித்திரவதை, காணாமற் போதல் பற்றிய அறிக்கையை , அது தயாரித்துள்ளது. இந்த அறிக்கை பற்றி எவ்விதப் பிரதிபலிப்பு ஏற்படும் என்பதை 1995 மார்ச்சில் மனித உரிமைகள் ஆணைக்குழு கூடும் போது கண்டு கொள்ளலாம். சர்வதேச மன்னிப்புச் சபை, ஏசியா உவாச், லண்டனிலுள்ள கிழக்கு ரிமோர் ஒற்றுமை அமைப்பு என்பன ஆற்றிவரும் பங்களிப்பை முழு உலகும் பாராட்ட வேண்டும். கிழக்கு ரிமோர் சுதந்திர நாடாகுமா அல்லது சிறுகச் சிறுக சிறுபான்மையினராகிப் போய் அடங்கிவிடுமா என்பது மனித உரிமைவாதிகளது விழிப்பிலேயே தங்கியுள்ளது.

(இந்தோனேசியா விழுங்கிய இன்னொரு பிரதேசமான மேற்கு இரியன் பற்றி அடுத்துப் பார்ப்போம்)

## தமிழ்.......

னாருக்குமிடையில் நடைபெற்ற கருத்து மோதலும் இதனால் உருவானதேயாம். இன்று தென்னாசியா முழுவதுமே சமஸ்கிருத கலாசாரத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு அகண்ட பாரதம் தோன்ற வேண்டுமெனப் பாடுபடும் விஸ்வ இந்து பரிஷத் எனும் பிராமணீய இயக்கத்திற்கு உள்ளூர் ஏஜன்டாக முன்னிற்பது வரை யாழ் உயர் சைவவேளாள வகுப்பின் உள்ளார்ந்த உந்து சக்தியாக சமஸ்கிருத மயமாதல் இருந்து வருகின்றது.

யாழ் மையப்பட்ட தமிழ் தேசியத்தின் பலவீனத்திற்கு இதுவே முதன்மையான காரணம் என்றறிக. சமஸ்கிருத கலாசாரத்தினால் உருவாக்கப்பட்டு பிராமண வர்க்கத்தால் நிலைநிறுத்தப்பட்டு வரும் இந்திய தேசியம் எனும் ஆற்றினுள் தமிழ் தேசியத் தனித்துவத்தை உருத்தெரியாமல் கரைத்து விடக் கூடிய ஒரு உள் ஊக்கியாக (catayst) நாவலர் வழி சைவவேளாள மரபு எவ்வாறு அமைகிறது என வரும் கட்டுரையில் நோக்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜனாதிபதித் தேர்தல் 94’

# ஊர்காவற்றுறைத் தொகுதியின் மற்றுமொரு சாதனை!

ஒகஸ்ட்டில் நடைபெற்ற போதுத்தேர்தலில் சாதனை நிகழ்த்திய ஊர்காவற்துறைத் தொகுதியானது ஜனாதிபதித் தேர்தலின் மூலம் மீண்டும் சாதனையை நிகழ்த்தி இலங்கை தேர்தல் வரலாற்றின் தனக்கென ஓர் முத்திரையைப் பதித்துள்ளது. யாழ் மாவட்டத்தில் உள்ள தேர்தல் தொகுதிகளில் ஒன்றான ஊர்காவற்துறை தொகுதியில் மாத்திரமே பெருமளவு நிலப்பரப்பு அரசபடையினதும், அவர்களுடன் இயங்கும் தமிழ்க்குழு ஒன்றினதும் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. எனவே அரசாங்கமும், அதன் தேர்தல் திணைக்களமும் யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடைபெற்றதாக காண்பிப்பதற்காக ஊர்காவற்துறை தொகுதியையே நம்பியிருந்தது.


ஊர்காவற்துறையை அரச படையினர் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்ததன் பின்னர் இங்கு வாழும் மக்கள் தொகை சிறுவர் சிறுமியர் மாணவர்கள் வயோதிபர் உட்பட 9,000க்கும் குறைவானதாகும். அதிலும் அங்குள்ள வாக்காளரது எண்ணிக்கை 5,000க்கும் குறைவானதாகும். இதனை தீவுப்பகுதி அரசாங்க அதிபர் பணிமனையே உத்தியோகபூர்வ கணிப்பீடு செய்திருந்தது. ஆனால் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுமார் 11,000க்கும் மேற்பட்ட வாக்குகளும் ஜனாதிபதித் தேர்தலில் 14,000க்கும் அதிகமான வாக்குகளும் ஊர்காவற்துறைத் தொகுதியில் அளிக்கப்பட்டிருந்ததாக தேர்தல் முடிவுகள் வெளிவந்திருந்தன. ஊர்காவற்துறை தொகுதி இடம் பெயர்ந்த வாக்காளர்களில் கூட சுமார் நூறு வரையானவர்கள் கூட விண்ணப்பிக்கவில்லை என்பது வேறு விடயம். எனவே எப்படி இருமடங்குக்கும் அதிகமானவர்கள் வாக்களித்தார்கள் என்பது பெரும் வியப்பினையும் கேள்விக்குறியினையும் ஏற்படுத்தியுள்ளது. இதுவரை நடைபெற்ற இலங்கையின் பொதுத் தேர்தலிலாயினும் சரி, ஜனாதிபதித் தேர்தலிலாயினும் சரி நூறுவீதமானவர்கள் வாக்களித்ததாகவோ அல்லது 90%மானவர்கள் வாக்களித்தாகவோ இல்லை.

### 200வீத வாக்களிப்பு:

ஆனால் இம்முறைத் தேர்தலில் மாத்திரமே 200%க்குமதிகமான அதாவது உள்ள வாக்காளரை விட இருமடங்கு அதிகமான வாக்குகள் பதிவாகி ஊர்காவற்துறைத் தொகுதி தனது சாதனையை இருதடவையும் நிரூபித்துள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் புங்குடுதீவுப் பகுதியில் சுமார் 500க்கும் குறைவான வாக்காளர்களே வசிப்பதாக அரச கணக்கெடுப்பு காட்டியது. ஆனால் புங்குடுதீவின் அனைத்து வாக்குச் சாவடிகளிலுமாக சுமார் 5,500 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தது. அது போன்று கரம்பன் நாரந்தன, சுருவில் வேலனை ஆகிய பகுதிகள் உள்ளடங்கலாக ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் சுமார் 700 மக்களே இருப்பதாகவும் அதிலும் வாக்காளர் தொகை 500க்கும் குறைவாகவே இருக்கின்னர் என்றும் அரச மதிப்பீடுகள் தெரிவித்தன. ஆனால் கடந்த 9ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கரம்பன் சண்முகநாத வித்தியாலய 1ம், 2ம் வாக்குச் சாவடிகளில் 1896 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன.

இதுபற்றி தேர்தல் எப்படி நடக்கின்றது என அவதானிக்க சென்ற ஒருவர் கரம்பன் சண்முகநாத வித்தியாலயத்தில் மாத்திரம் சுமார் 125க்கும் மேற்பட்டவர்கள் வாக்களித்ததாகவும் இதில் ஏறக்குறைய 50 பேர் மாணவப் பருவமுடையவர்கள் என்றும், இவர்களே திரும்பத் திரும்ப வாக்காளர் அட்டைகளை கொண்டுவந்து வாக்களித்தனர் என்றும் இதனால் சுமார் 2000 வரையான வாக்குகள் அங்கு பதிவாகியதாகவும் கூறினார். தேர்தல் கடமைகளில் இருந்தவர்களும் வாக்காளர் அட்டை கொண்டு போகும் எல்லோருக்கும் வாக்களிக்க இடமளித்ததாகவும் பெண்கள் ஆண்களது வாக்காளர் அட்டைகளையும் ஆண்கள் பெண்களது வாக்காளர் அட்டைகளையும் கொண்டு சென்ற போது கூட வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்ததாக



வும் பால்மாற்றம், ஆள்மாறாட்டம், மாணவர் என்ற பேதமின்றி சுமார் 50க்குட்பட்ட எண்ணிக்கையானவர்கள் ஏறக்குறைய 1750 வாக்குகள் வரை எந்தவிதமான ஆட்சேபனையும் இன்றி வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த பொதுத்தேர்தலில் (ஓகஸ்ட் 16) போதும் வாக்காளர் அட்டைகள் எதுவும் வாக்காளருக்கு விநியோகிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக வாக்காளருக்கு றோணியோ செய்யப்பட்ட பேப்பர்களே தேர்தல் முன்தினமன்று சில பகுதிகளில் தேர்தல் அலுவலர்களிடமும் பிரஜைகள் குழுக்களிடமும் வழங்கப்பட்டன. தங்கள் சுய விருப்பின்படி அவர்கள் அவற்றை விநியோகம் செய்திருந்தனர். ஆனால் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய மாவட்டங்களில் வழங்கப்பட்டது போன்று தேர்தல் அதிகாரியின் ஒப்பமிடப்பட்டதும் வழக்கமான வாக்காளர் அட்டைகள் வழங்கப்பட்டன.

இதுபற்றி கடந்த பொதுத் தேர்தலின் போது ஈ.பி.டி.பியினரை முற்றுமுழுதாக வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஐ.தே.கவினர், தீவுப் பகுதி அரச உயரதிகாரிகள், ஈ.பி.டி.பியினர் ஆகியோர் ஒன்று சேர்ந்து வாக்காளர் அட்டைகளில் மோசடியும் குழப்பமும் செய்யப்பட்டன. தேர்தல் அதிகாரியின் ஒப்பமின்றி சில தனிநபர்களது கையில் வாக்காளர் அட்டைகள் ஒப்படைக்கப்பட்டன என்று சிலர் இதுபற்றி கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால், இம்முறை மட்டும் எப்படி வாக்காளர் அட்டைகள் வழமையானது போன்று, சகல மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டது போல விநியோகிக்கப்பட்டது. இதுவே திட்டமிட்ட செயற்பாடு என்பதனை வெளிக்காட்டவில்லையா என்று கேட்கின்றனர்.

**ரட்னசிறி**

அதுதவிர கடந்த பொதுத்தேர்தலின் போது நடைபெற்ற ஒருதலைப்பட்சமான தேர்தல் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட, யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சிகளும், சுயேட்சைக் குழு ஒன்றும் தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் செய்து விசாரணை நடைபெற்றுவருவதால், இம்முறை நடைபெற்ற தேர்தலிலும் பெருமளவான வாக்காளர்கள் அதாவது முன்பினை விடக் கூடிய வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர் என்பதனைக் காட்டி முன்னர் நடைபெற்ற தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதும் ஜனநாயகமானதும் என்பதினை உறுதிப்படுத்த பகீரதப் பிரயத்தனம் செய்யப்பட்டு வருகிறது. எப்படி இருந்த போதும் தேர்தல் தினத்தன்றும் சுமார் 6,000 வாக்காளர்களே உள்ளதாக அறிவிக்கப்பட்ட ஊர்காவற்துறை தொகுதியில் 14,000 வாக்காளர்கள் இம்முறை வாக்களித்து ஊர்காவற்துறை தொகுதி சாதனை படைத்திருக்கிறது.

இதுபற்றி தேர்தல் ஆணையாளர் என்ன சமாதானம் கூறப்போகின்றாரோ தெரியவில்லை. ஆனால் கடந்த பொதுத்தேர்தலில் பல மோசடிகளையும் ஆட்கடத்தல்களையும் அச்சுறுத்தல்களையும் செய்து ஐ.தே.கவினது தீவுப்பகுதி அரச அதிகாரிளதும் பூரண ஒத்துழைப்புடன் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியிருக்கும் சுயேட்சைக்குழுவினர், இம்முறை 14,000 வரையான வாக்குகளை பொ.ஐ.முவுக்கு கொடுத்துள்ளனர். யாழ் மாவட்ட பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் செல்லுபடியற்றவை என்ற முடிவுக்கு அரசு வருமாயின், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கும் அது பொருந்தக் கூடியதாக இருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறு பொ.ஐ.முன்னணியை வெற்றி பெற வைத்ததனூடாக ஈ.பி.டி.பி. பாராளுமன்றத் தேர்தலில் தான் பெற்ற 9 ஆசனங்களையும் காப்பாற்றிக் கொள்ள முயன்றிருக்கின்றது. இப்போது பொ.ஐ.மு. அரசு என்ன செய்யப் போகிறது?
ஜனநாயகம் பற்றியும் ஏனையவர்களது அராஜகம் பற்றியும் பேசுபவர்கள் தமது ஜனநாயகங்களை கொஞ்சம் திரும்பி பார்ப்பார்களா? ஜனநாயகம் என்பது ஈழமக்கள் ‘ஜனநாயக’க் கட்சி என்று பெயர் வைப்பதனாலும், பேசுவதனாலும் மட்டும் வந்துவிடாது என்பது சொல்லாமலே புரிந்து கொள்ளப்பட வேண்டியது. ஆகக் குறைந்தது நடைபெற்ற தேர்தலிலாவது ஜனநாயகத்தை நிலைநாட்ட முயன்றிருந்தால் கட்சியின் பெயரில் ‘ஜனநாயகம்’ இருப்பதற்கு ஒரு அற்பக் காரணமாவது கிடைத்திருக்கும்.
நன்று.
அதுவும் போயிற்று!


சமாதானத்தை விரும்பும் எல்லோரும் வருக!

மக்கள் சமாதான விழாவும்
சமாதான பேரணியும்

சமாதானம்!
ஆம்,
ஜனநாயகத்துடன்.........

டிசம்பர் 9ம் திகிதி
காலை. 11.30 மணி - சமாதான பேரணிகள்
காலிமுகத்திடலில் இருந்து ஹைட்பாக் வரை
கெம்பல் மைதானத்திலிருந்து ஹைட்பாக் வரை
மாலை. 2.00 மணி - சமாதான விழா
விஹாரமகாதேவி திறந்தவெளி அரங்கில்

உரைகள்:
கலாநிதி. சுமனசிரி லியனகே
எஸ். மனோரஞ்சன்
கருத்துக்கள் தெரிவிப்போர்:
சுனந்த தேசப்பிரிய
வாசுதேவ நாணயக்கார
எஸ். பாலகிருஷ்ணன்
தர்மசிறி பண்டாரநாயக்க
அனீற்றா பர்னாந்து

‘முழுத் தேசமும் இன்று சமாதானத்தையே கோரிநிற்கின்றது.
வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும்
வேறுபாடு ஏதுமின்றி சமாதானத்திற்காகவே கையுயர்தியுள்ளன.
சமாதானம் - அந்த உன்னத விருப்பை யதார்த்தமாக்குவது எப்படி?
அதற்கான வழிதான் என்ன?
சமாதானம் என்பது வெறுமனே யுத்தம் நிறுத்தப்படுவதா?
மக்களுக்கு உண்மையான சமாதானத்தை உருவாக்குவதற்கான........
ஜனநாயகத்துடனான சமாதானம் என்பது என்ன?
ஜனநாயகத்துடனான சமாதானத்தை அடைய
ஜனநாயகமல்லாத வழிமுறைகளுக்கூடாக முடியுமா?
அதுபோன்ற ஜனநாயகத்துடனான சமாதானத்தின் குணாம்சங்கள் என்ன?
அதுபோன்றதொரு முயற்சிக்கு எம்மாலும் பங்களிக்க முடியுமா?
இல்லையேல் சமாதானம்
அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் உரியதொன்றா?
வாருங்கள், நாம் ஒன்றிணைந்து எண்ணங்களைப் பரிமாறுவோம்.
இந்தப் பரிமாற்றத்தால் புதிதாகப் புடம் போடப்பட்டு சமாதானத்திற்காக
உயர்த்தப்பட்ட கைகளை மீண்டும் உயர்த்தி உரக்கக் கூறுவோம்.
சமாதானம்!... இல்லாவிட்டால்......யுத்தம் அல்ல.....!
மீண்டும் சமாதானமே......!

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் கையளிக்கப்படவுள்ள மக்கள் மகஜரும் வெளியிடப்படும்.

கலாசார நிகழ்வுகள்

யுத்தத்திற்கு எதிரான பாடல்களும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.
நாட்டின் பிரபல பாடகர்கள் கலைஞர்கள் பங்கு பற்றுவார்கள்.

Advt.


சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இலக்-இல.18/2 அலோசாலை கொழும்பு ... இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்